விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது ══ Valampurii ══

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 கார்த்திகை 13 செவ்வாய்க்கிழமை (29.11.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 345

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## யாழ்.பல்கலை மாணவனை காணவில்லையென முறைப்பாடு

### கடத்தப்பட்டிருக்கலாமென அச்சம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்த மருத்தவப்பீட மாணவர் ஒருவர் நேற்று முன்தினம் இரவு முதல் காணவில்லை என அவரது பெற்றோரால் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த மாணவன் கடத்தப்பட்டிருக்கலாம் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. வடமராட்சி கிழக்கு மருதங்கேணியைச் சேர்ந்த வேதாரணியம் லத்தீஸ் (வயது 27) என்ற மாணவனே காணவில்லையென முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பாலசிங்கம் விடுதியிலுள்ள தனது நண்பர்களை நேற்று முன்தினம் இரவு சந்தித்துவிட்டு, கைதடியில் உள்ள தனது விடுதிக்கு திரும்பியுள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

## அநுராதபுரம் தமிழ் கைதிகள் உண்ணாவிரதப் போராட்டம்

(அநுராதபுரம்)

அநுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள தமிழ் கைதிகள் தாம் சிறைக்காவலர்களால் நேற்று முன்தினம் தாக்கப்பட்டதாக குற்றஞ்சாட்டி, அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கக்கோரி சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

தமது பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கோரியும், இனிமேல் இப்படியான நிகழ்வுகள் நடக்காமல் இருப்பதை உறுதிசெய்யுமாறு கோரியும் அவர்கள் இந்தப்போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

ஆனால், நேற்றுமுன்தினம் கைதிகளை பாதுகாவலர்கள் வழமையான சோதனைகளைச் செய்ய முயன்ற போது அவர்களிடம் இருந்து 19 கைத்தொலைபேசிகள் கண்டுபிடிக்கப் பட்டதாக கூறும், சிறைச்சாலைகள் அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகரான சிவலிங்கம் சதீஷ்குமார், அந்த நடவடிக்கையின் போதே அங்கு அமைதியீனம் ஏற்பட்டதாக தெரிவித்துள்ளார்.

இருந்த போதிலும், இந்த சம்பவம் குறித்து முழுமையாக (20ஆம் பக்கம் பார்க்க)

# ஆணைக்குழு அறிக்கையின் உள்ளடக்கத்தை

# அகாஷியிடம் எடுத்துரைத்தார் ஜனாதிபதி


(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் உள்ளடக்கத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷியிடம் எடுத்துரைத்துள்ளார். இதன்போது நாட்டின் அனைத்து இன மக்களும் சம அந்தஸ்துடன் வாழும் வகையில் அதிகாரப்பகிர்வு முன்வைக்கப்பட வேண்டும் என்பதை ஜப்பான் வலியுறுத்துவதாக யசூசி அகாஷி ஜனாதிபதிக்குச் சுட்டிக்காட்டியுள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

## நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை அடுத்த வாரம் சபையில் சமர்ப்பிப்பு!

(கொழும்பு)

ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக்குழுவின் அறிக்கை டிசம்பர் மாத முற்பகுதியில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அரசாங்க மட்டத்தகவல்கள் தெரிவித்தன. அதாவது அடுத்த வாரமளவில் அறிக்கை பாராளுமன்றத்திற்கு வரலாம் எனத் தெரிய வருகின்றது. (20ஆம் பக்கம் பார்க்க)




தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் கஹத்தொடுவை என்னும் பகுதியில் நேற்று திங்கட்கிழமை காலை முதலாவது விபத்து இடம்பெற்றது. இந்த விபத்தில் சேதமடைந்த வாகனத்தை படத்தில் காணலாம். (20ஆம் பக்கம் பார்க்க)

## சட்டவிரோத முறையில் மின் பாவனை யாழ்.நகரில் நேற்றும் 31 பேர் கைது

### உச்சத்தொகை அபராதமாக ரூபா.7 இலட்சம் விதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் சட்டவிரோதமான முறையில் மின்னிணைப்பை பயன்படுத்திய 31 பேர் நேற்று யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பில் இருந்து வருகைதந்த இலங்கை மின்சார சபை அதிகாரிகளும் யாழ்ப்பாண பொலிஸாரும் கடந்த மூன்று தினங்களாக யாழ் நகர் மற்றும் புறநகர் பகுதிகளில் சட்ட விரோத மின்சார பாவனை தொடர்பில் தேடுதல் வேட்டை நடத்தி வருகின்றனர்.

இதில் கடந்த சனிக்கிழமை 31 பாவனையாளர்களும் நேற்று முன்தினம் 27 பாவனையாளர்களும் சட்ட விரோதமான முறையில் மின்பாவனை செய்தனர் என்ற குற்றத்தில் யாழ். பொலிஸாரால் (20ஆம் பக்கம் பார்க்க)

## ஏ.எல்.பெறுபேறுகள் அடுத்த வாரம் வெளிவருகிறது

கல்விப் பொது தராதர உயர்தர பரீட்சைப் பெறுபேறுகள் மூன்றாம் தவணைக்கான பாடசாலை விடுமுறைக்கு முன்னர் வெளியிடப்படும் எனபரீட்சைகள்திணைக்களம் அறிவித்துள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற க.பொ.த உயர்தரப்பரீட்சையின் புள்ளியிடல் பணிகள் நிறைவடைந்து வெளியிடுவதற்கான பணிகள் நடைபெற்று வருவதாகவும் பரீட்சைத் திணைக்களத்தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்தவாரத்தில் இப்பரீட்சைப் பெறுபேறு வெளியிடப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா-9)

## தேசிய எதிர்ப்பு போராட்டத்தில் தமிழர்களின் பிரச்சினைகளும் முன்வைப்பு

### ஜனநாயக மக்கள் முன்னணி பங்கேற்பு

(கொழும்பு)


ஐக்கிய தேசியக் கட்சியினால் இன்று முன்னெடுக்கப்படவுள்ள தேசிய எதிர்ப்பு போராட்டத்தில் மனோகணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணி கலந்துகொள்வதற்கு முடிவு செய்துள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சி தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க மற்றும் அக்கட்சியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க ஆகியோருடனான சந்திப்பை அடுத்து இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஐக்கிய தேசியக்கட்சியின் ஏற்பாட்டில் இடம் பெறவுள்ள இந்த ஆர்ப்பாட்டத்தில் சரத் பொன்சேகாவின் விடுதலை, மக்களுக்கு எவ்வித பயனும் இல்லாத 2012 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம், நட்டமடையும் நிறுவனங்களை சுவீகரிப்பதற்காக இலங்கை அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட சட்டமூலம் ஆகியவற்றுக்கு (20ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



மாவீரர் நாள் நிகழ்வுகள் நேற்று முன்தினம் அவுஸ்திரேலியா, பிரான்ஸ், கனடா உள்ளிட்ட பல நாடுகளில் தமிழ் உணர்வாளர்களால் நடத்தப்பட்டது. இதில் பிரான்ஸில் நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்வுகளை படங்களில் காணலாம்.

# உயிரிழந்தோர் தொகை 22 ஆக அதிகரிப்பு

## அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 22 ஆக உயர்வடைந்துள்ளதென அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அத்துடன் இயற்கை அனர்த்தங்களால் 41 பேர் காயமடைந்துள்ளதாகவும் 19பேர் காணாமல் போயுள்ளதாகவும் அந்த நிலையம் தெரிவித்துள்ளது.

நாடு முழுவதும் சீரற்ற காலநிலையால் 16 ஆயிரத்து 945 குடும்பங்களைச் சேர்ந்த 66 ஆயிரத்து 760 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அமைக்கப்பட்டுள்ள 6 தற்காலிக முகாம்களில் 424 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 705 பேர் தங்க வைக்கப்பட் டுள்ளனர் என அந் நிலையம் குறிப்பிட்டுள்ளது.

# அநுராதபுரம் சிறைக் கைதிகளை பார்வையிட அனுமதிக்கப்படவில்லை

## ஜே.வி.பி. மாற்றுக்குழு தெரிவிப்பு

அநுராதபுரம் சிறைச்சாலையிலுள்ள தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் உறுப்பினர்களை பார்வையிடச் செல்வதற்கு ஜே.வி.பியின் மாற்றுக்குழு உறுப்பினர்கள் நேற்று முயற்சித்தபோது அதற்கு சிறைச்சாலை அதிகாரிகள் அனுமதிக்கவில்லை என அக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இக்குழுவின் உறுப்பினரும் அனைத்துப்பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் தலைவரான உதுல் பிரேமரட்ண இது குறித்து கூறுகையில்,

மாவீரர் தினத்தை அனுஷ்டிக்க முற்பட்டபோது சக கைதிகளால் தாக்கப்பட்டதாக கூறப்படும் கைதிகளை பார்வையிடுவதற்கு சட்டத்தரணிகள் குழுவொன்றுடன் அநுராதபுரம் சிறைச்சாலைக்குச் செல்வதற்கு தாம் முயற்சித்ததாக கூறினார்.

எனினும் சிரேஷ்ட சிறை அதிகாரி ஒருவர் தமது குழுவினருக்கு அனுமதி வழங்கவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

இக்கைதிகள் மாவீரர் தினத்தை அனுஷ்டிக்க முற்பட்டிருப்பார்கள் என்று கூறப்படுவதை நாம் நம்பவில்லை. ஏனைய சிறைச்சாலைகளிலும் புலி உறுப்பினர்கள் உள்ளனர். அங்கு இவ்வாறு நடைபெறவில்லை எனவும் உதுல் பிரேமரட்ன கூறினார்.

இச்சம்பவம் குறித்து இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்திடம் முறைப்பாடு செய்யவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# நாட்டில் 42 ஆயிரம் வேலையற்ற பட்டதாரிகள்

## அநுரகுமார் எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் 42 ஆயிரம் பட்டதாரிகள் வேலையற்றிருப்பதாக ஜனநாயகத் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கையில் 4 இலட்சம் இளைஞர், யுவதிகள் வேலையற்றிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வரவு செலவுத் திட்டத்தின் மூலம் மக்கள் எதிர்பார்த்த நிவாரணம் கிடைக்கவில்லை என அம்பலாந்தோட்டையில் நேற்று இடம்பெற்ற ஆர்ப்பாட்டமொன்றில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

2012 வரவு செலவுத் திட்டத்தில் எவ்வித நிவாரணமும் மக்களுக்கு கிடைக்கவில்லை என தெரிவித்து குறித்த ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது.

# பாடசாலை மாணவன் நீரில் மூழ்கி மரணம்

(யாழ்ப்பாணம்)

கோவில் கேணியில் குளிக்கச் சென்ற மாணவன் நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

நேற்று பிற்பகல் நடைபெற்ற இச் சம்ப வத்தில் யாழ் சன்மார்க்க வித்தியாலயத்தில் தரம்-6 இல் கல்வி கற்கின்ற அஜந்தன் (வயது-12) என்ற மாணவனே உயிரிழந்துள் ளான் .

சம்பவம்பற்றி மேலும் தெரிய வருவ தாவது,

பாடசாலை முடிபுற்று பி.ப 2.30 மணியளவில் குறித்த கோயில் கேணியில் நால்வர் குளிக்கச் சென்றுள்ளனர்.

இதில் குறித்த மாணவன் நீரில் மூழ்கி மயக்கமுற்று உடனடியாக யாழ் போதனா வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டு அதிதீவிர சிகிச் சைப் பிரிவில் கண்காணிக்கப்பட்டு வந்துள்ளார்.

எனினும் மாலை 4 மணியளவில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். இம்மாணவனு டைய தந்தை ஏற்கெனவே இறந்துவிட்டார். இறந்த மாணவன் அக் குடும்பத்தில் ஒரே பிள்ளை என்பதும் குறிப்பிடத்தக்கது.


union assurance
Trust in your tomorrow, today.

**வேலைவாய்ப்பு**

யாழ். மாவட்டத்தில் வேலைவாய்ப்பை எதிர்பார்த்திருக்கும் இளைஞர், யுவதிகளே தங்களுடைய பொன்னான காலங்களை வீணாக்காமல் இணையுங்கள்

**யூனியன் அஷ்யூரன்ஸில்**




இணையுங்கள் உங்கள் வாழ்க்கையை வெற்றியாக்க இலங்கையில் முன்னணி காப்புறுதி நிறுவனங்களில் ஒன்றான யூனியன் அஷ்யூரன்ஸ் யாழ்.மாவட்ட கிளைக்கு பின்வரும் பதவிகளுக்குத் தகுதியானவர்களுக்கு உடனடி நியமனம் வழங்கவுள்ளது.

**பதவி வெற்றிடங்கள்**

சிரேஷ்ட தனிப்பட்டோர் நிதி முகாமையாளர் → பதவி - 5
தனிப்பட்டோர் நிதி முகாமையாளர் → பதவி - 4
சிரேஷ்டதனிப்பட்டோர் நிதி ஆலோசகர் → பதவி - 3
தனிப்பட்டோர் நிதி ஆலோசகர் → பதவி - 2
பதவி-1 → காப்புறுதி ஆலோசகர்

அடிப்படைத் தகைமைகள் :-
- க.பொ.த சாதாரண தரத்தில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி.
- காப்புறுதித்துறையில் முன்னனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.
- விளையாட்டுத் துறையில் திறமையுள்ளவர்கள்.
- தற்போது A/L பரீட்சைக்கு தோற்றியவர்களும் நேர்முகத் தேர்விற்கு தோற்றலாம்.
- உங்களது இலக்கை அடைவதற்கான உறுதியான மனோநிலை.
  உங்கள் வெற்றியை நோக்கி பணிபுரிவதற்கான ஆர்வம் .
- திடசித்தம்.

(க-5059)

Note:- விடாமுயற்சியும் தன்னம்பிக்கையும் இருந்தால் வாழ்க்கையில் சாதிக்க முடியாதது ஒன்றுமில்லை.
யூனியன் அஷ்யூரன்ஸில் இணைவதன் ஊடாக நீங்கள் காப்புறுதி உலகில் அங்கீகரிக்கப்படுகிறீர்கள்.

ஏற்கனவே வேறு தொழில் துறைகளில் ஈடுபட்டுள்ளவர்களும் தமது வருமானத்தை மேம்படுத்த எமது நிறுவனத்தில் பகுதி நேரமாக வேலைவாய்ப்பினைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

ஏன் தயக்கம் :- தோற்றுங்கள் நேர்முகத் தேர்வுக்கு சுயவிபரக் கோவையுடன்

காலம் :- புதன்கிழமை - 30.11.2011
நேரம் :- மு.ப 9.00 மணி
இடம் :- யூனியன் அஷ்யூரன்ஸ், 139, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

ந. பரஞ்சோதி, பொ. ஞானவேல்
அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்
தொ.பே: 0772247474, 0773689309



**தேவை**

தமிழ், ஆங்கிலம் ரைப்பிங் தெரிந்த பெண் பிள்ளைகள் தேவை. முன் அனுபவத்திற்கு கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

"பிரகாந்த்"
56B, பலாலி வீதி,
திருநெல்வேலிச்சந்தி,
திருநெல்வேலி.
(6865)



**வீடும் காணியும் விற்பனைக்கு**

உரும்பிராய் பலாலி வீதியில் இருந்து 1km தூரத்திற்குள் உள்ள 10 பரப்பு, வீடும் காணியும் இரு பிரிவுகளாக விற்பனைக்கு உண்டு.

இல.16, கல்லூரி ஒழுங்கை, உரும்பிராய் (உரும்பிராய் இந்துக்கல்லூரிக்கு அருகாமையில்) எனும் முகவரியில் அமைந்துள்ள காணியில் 5 அறைகள், Attached Bathroom மற்றும் Garage வசதி கொண்ட 10 பரப்பு காணியே விற்பனைக்கு உண்டு. நன்னீர் கிணற்று வசதியும் உண்டு.

Phone :- Vignes +1-281-313-3448/
E-mail :- chitravignes@gmail.com (E-mail மூலமான தொடர்புகள் விரும்பத்தக்கது.)
(C-5063)

# இன்று ஒரு தகவல்

## நல்லபெயர் வாங்குவது எப்படி?

"நான் நல்ல காரியம் எல்லாம் செய்திருக்கிறேன். இருந்தாலும் எனக்கு ஒரு பெரிய குறை" என்று ஒருவர் கூறினார்.

"என்ன குறை?" என்று கேட்டார் இனனொருவர்.

"என்னை யாருமே நல்லவன் என்று சொல்வதில்லை! அதுதான் குறை" என்றார்.

நல்ல செயல்களை செய்பவன் என்பது வேறு! நல்லவன் என்று பெயர் எடுப்பது வேறு

நல்ல பெயர் வாங்குவது என்பது இலகுவான காரியமா?

அதுசரி எல்லோரிடமும் நல்லபெயர் வாங்குவது எப்படி?

இதற்கு ஒரு அனுபவசாலி சில வழிகளைக் கூறுகிறார்.

முதலாவது வழி மற்றவர்களை உண்மையாகவே பாராட்டிப் பழக வேண்டும் .

சிலபேர் எப்படியென்றால் மற்றவர்கள் ஏதாவது ஒரு நல்ல காரியம் செய்தால் அவர்களைப் பாராட்டுவதற்கு பதிலாக அவர்கள் மேலே பொறாமைப்பட ஆரம்பித்து விடுகிறார்கள். அல்லது அவர்களிடம் பேசுவதை நிறுத்திக் கொள்கிறார்கள்.

அதனால் நமது பெயரும் கெட்டுப் போகிறது.

இரண்டாவது வழி பிறர் மீது நாம் நம்பிக்கை கொள்ள வேண்டும்.

உங்களுக்குப் பக்கத்தில் இருப்பவருக்கு தலை வலி. உங்களிடம் மாத்திரை இருக்கிறது. அப்படி என்றால் அதில் ஒன்றை அவருக்கு கொடுத்து உதவுவது.

அந்தத் தலைவலி நீங்கள் பக்கத்தில் இருப்பதால், வந்திருக்கலாம்.

மற்றவர்கள் ஒரு தவறு செய்துவிட்டார்கள் என்றால் அதை மறைமுகமாகச் சுட்டிக்காட்ட வேண்டும்.

"ஐயையோ! இப்படி செய்துவிட்டீர்களே" என்று ஆரம்பிக்கக்கூடாது. தவறு என்பது திருத்திக் கொள்ளக் கூடியதுதான் என்பதை அவருக்கு உணர்த்தி ஊக்கம் அளிக்க வேண்டும்.

"பரவாயில்லை. இனிமேல் இதுமாதிரி நடக்காமல் பார்த்துக் கொள்ளவும்!" என்று சொல்ல வேண்டும்.

மூன்றாவது வழி உங்களுக்கு எதிரில் இருப்பவர்களை அலட்சியப்படுத்தக்கூடாது! அவரும் முக்கியமானவர்தான் என்பதை அவரே உணர்கிற அளவுக்கு நீங்கள் நடக்கவேண்டும்.

அவருடைய ஆலோசனைகளையும் அடிக்கடி கேளுங்கள். இதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? என்று கேளுங்கள்.

அவரைக் கதைப்பதற்கு ஊக்கப்படுத்துங்கள். நீங்கள் மட்டுமே பேசிக் கொண்டு இருக்க வேண்டாம். அவர் பேசுவதைப் பொறுமையாகக் கேளுங்கள். அப்போதுதான் உங்கள்மேல் அவருக்கு ஒரு நல்ல அபிப்பிராயம் வரும்.

ஒரு கடுமையான வாக்குவாதம் செய்துகொண்டு இருக்கிறீர்கள். அதுமாதிரி வாக்குவாதங்களில் இருந்து சிறந்த பலன் பெறவேண்டுமென்றால் அதில் இருந்து ஒதுங்குவதுதான் சிறந்த வழியாகும்.

நான்காவது விடயம் என்னவென்றால், மற்றவர்களை மகிழ்ச்சி அடைய வைப்பதன்மூலம் நாங்களும் மகிழ்ச்சியடைவது.

சிலருக்கு அடுத்தவர்களை அதிர்ச்சியடைய வைத்து வேடிக்கைப் பார்ப்பது என்பது ஒரு தனியான சுவாரஸ்யம். அது மிகவும் பிழையான விடயம்.

நல்ல பெயர் வாங்குவது எப்படி என் பதை ஒரு வெளிநாட்டு நிபுணர் இவ்வாறு தன் கருத்து மூலம் தெரிவிக்கின்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# கிளி. மாவட்டத்தில் இளையோருக்கான கலாசார விழிப்புணர்வு நிகழ்வுகள்

(மல்லாவி)

அவுஸ்திரேலியா சிறுவர் நிதியத்தின் அனுசணையுடன் இலங்கை சிறுவர் நிதியமானது கிளிநொச்சி மாவட்டத்தில் இளைஞர், யுவதிகளுக்கான கலாசார விழிப்புணர்வு நிகழ்வுகளை நடத்தி வருகின்றது.

இவ் அமைப்புக்கள் ஒன்றிணைந்து பூநகரி, கண்டாவளை, கரைச்சி பிரதேச செயலகங்களில் தமது விழிப்புணர்வு நிகழ்வுகளை நடத்தி வருகின்றன.

இதற்கு கிளிநொச்சி மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்றமும் பங்களிப்பு செய்து வருகின்றது.

இந் நிகழ்வினூடாக கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகரித்து வரும் சிறுவர் துஷ்பிரயோகம், பாலியல் துஷ்பிரயோகம், போதைப் பழக்கங்கள் இவற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கில் சமூக விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்தப்படுகின்றன.

இவ்வமைப்பானது இதுவரை மேற்குறித்த மூன்று பிரதேச செயலர் பிரிவுகளிலும் பல நூற்றுக்கணக்கான இளைஞர், யுவதிகளுக்கு செயலமர்வுகளை நடத்தியுள்ளது.

அத்துடன் வேலையற்ற இளைஞர், யுவதிகள் தூர இடங்களுக்கு தொழில்வாய்ப்பு பெற செல்கின்ற போது ஏற்படக்கூடிய சீர்கேடுகள் குறித்தும் அதில் மேற்கொள்ள வேண்டிய அக்கறை குறித்தும் விளக்கி வருகின்றது.

இவ்வமைப்பு 450 இளைஞர், யுவதிகளுக்கு தொழிற்பயிற்சி வழங்கி உள்ளூரிலேயே தொழில் வழங்கவுள்ளது.

மேற்படி அமைப்பின் செயற்பாட்டில் இளையோர் பங்கு கொள்வதனூடாக சமுதாயத்தில் எடுத்துக் காட்டாக வாழ வழிவகுக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-3-15)

# மாற்றுத்திறன் மாணவர்கள் கௌரவிப்பு நிகழ்வு

(மல்லாவி)

சர்வதேச மாற்றுவலுவுடையோர் தினத்தை முன்னிட்டு துணுக்காய் கல்வி வலய பாடசாலைகளில் கல்வி கற்கும் மாற்றுவலுவுடைய மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு மு/ஒலுமடு தமிழ் வித்தியாலயத்தில் விசேட கல்வி பாட ஆசிரிய ஆலோசகர் திருமதி சுகந்தி சர்வேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் த.மேகநாதன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இந்நிகழ்வு கடந்த 24 ஆம் திகதி நடைபெறுமென முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-3-15)

# மலர் வெளியீடும் பரிசளிப்பு விழாவும்

யாழ்ப்பாணம் தேசியகல்வியியற் கல்லூரியின் கலாசுரபி மலர் வெளியீடும் சிறந்த முகிழ்நிலை ஆசிரியர்களுக்கான பரிசளிப்பு விழாவும் இன்று செவ்வாய்க்கிழமை யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி கலையரங்கத்தில் கல்லூரிப் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் நூல் வெளியீட்டு உரையினை பிரதம விருந்தினராக கலந்து கொள்ளும் யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட ஆலோசனை சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி லயன் வை.தியாகராஜாவும் மலர் நயப்புரையினை யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய சிரேஷ்ட ஆசிரியர் மதுரகவி எம்.பி.அருளானந்தனும் ஆற்றவுள்ளார்கள். (அ)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 70 |
| உருளைக்கிழங்கு | 65 | 90 | 80 |
| பச்சைமிளகாய் | 340 | 350 | 320 |
| தக்காளி | 120 | 140 | 110 |
| மரவள்ளிக் கிழங்கு | 20 | 40 | 30 |
| கோவா | 50 | 80 | 40 |
| கரட் | 80 | 150 | 80 |
| பூசணி | 60 | 70 | 60 |
| புடோல் | 40 | 30 | 30 |
| வாழைக்காய் | 35 | 40 | 35 |
| சின்ன வெங்காயம் | 50-100 | 100 | 110 |
| பெரிய வெங்காயம் | 75 | 70 | 90 |
| பாகற்காய் | 110 | 80 | 150 |
| வெண்டிக்காய் | 30 | 30 | 30 |
| கருணைக் கிழங்கு | 50 | 60 | 80 |
| பயற்றங்காய் | 100 | 100 | 180 |
| லீக்ஸ் | 50 | 80 | 30 |
| பீற்றூட் | -- | 60 | 30 |
| கறிமிளகாய் | 120 | 160 | 130 |
| முருங்கைக்காய் | 100 | 90 | 60 |
| போஞ்சி | -- | 120 | 50 |
| கத்தரிதம்புள்ள | 50 | 80 | 60 |
| கீரை - 1 பிடி | 10-12 | 30 | 20 |
| தேசிக்காய் | 150 | 150 | 190 |
| தேங்காய் (ஒன்று) | 20-30 | 25 | 30 |

# இராசி பலன்

*29.11.2011*
*(கார்த்திகை 13, செவ்வாய்க்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.06 மணிவரை*
*சதுர்த்தி காலை 6.39 மணிவரை*
*பஞ்சமி பின்னிரவு 6.12 மணிவரை*
*உத்தராடம் பின்னிரவு 12.27 மணிவரை*
*இராகுகாலம் 3.13-4.43 மணிவரை*
*சுபநேரம் 10.43-12.13 மணிவரை*
*திருவண்ணாமலை கொடியேற்றம்.*

**மேடம்** இனிமையான நாள், நினைத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், தொழிலில் கூட்டாளிகள் இணக்கமாக நடந்து கொள்வர், பூமி சம்பந்தப்பட்ட வகையில் ஆதாயம் கிடைக்கலாம்.

**இடபம்** ஆரோக்கியம் சீராகி ஆனந்தமடையும் நாள், அதிகம் செலவாகும் என நினைத்த காரியமொன்று குறைந்த செலவில் நிறைவேறலாம், பிரியமான சிலரோடு ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும்.

**மிதுனம்** யோகங்கள் வந்து சேர யோசித்துச் செயற்பட வேண்டிய நாள், சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, திடீர்ச் செலவுகள் ஏற்படலாம், கௌரவக் குறைவான நாள்.

**கடகம்** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், தொழில் சம்பந்தமான மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், விவாகப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும், எடுத்த காரியங்கள் எளிதில் நிறைவேறலாம்.

**சிங்கம்** போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காணும் நாள், அரசியல் ஈடுபாடு அதிகரிக்கும், நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், அயலவருடன் ஏற்பட்ட முரண்பாடுகள் அகலும், சுவாரஸ்யமான நாள்.

**கன்னி** சுப செய்திகள் வந்து சேரலாம், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் மேலோங்கும், மாமன், மைத்துனர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், செய்தொழிலில் முன்னேற்றம் காணப்படும், பிரயாண சுகமுண்டு.

**துலாம்** பெற்றோர் மீது பிரியம் கூடும், ஊக்கத்தோடு பணிபுரிவீர்கள், நம்பி வந்தவர்களுக்கு கைகொடுத்து உதவும் நாள், பிரச்சினைகளிலிருந்து விடுபடுவீர்கள், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள்.

**விருச்சிகம்** வருமானம் திருப்தி தரும், தொழில் வளர்ச்சி மேலோங்கும், உறவினர் உதவிக்கரம் நீட்ட முன்வருவர், வெற்றிச் செய்திகள் வீடு வந்து சேரலாம், ஆரோக்கியம் சீராகும்.

**தனுசு** மங்கல நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம், பம்பரமாகச் சுழன்று பணிபுரியும் நாள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, வாக்கு மேன்மையுண்டு.

**மகரம்** வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், பெரியோரின் உதவியால் சில நன்மைகளுண்டு, தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், கற்பனை மிகுதியான நாள்.

**கும்பம்** தொழிலில் சில மாற்றங்கள் செய்வது பற்றி அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள், வேலைச்சுமை கூடும், சயன சுகக் குறைவான நாள், காரியங்கள் தாமதமாகலாம்.

**மீனம்** குடும்ப ஒற்றுமை பலப்படும், எடுத்த காரியங்கள் கைகூடும், வருமானம் திருப்தி தரும், சுப செய்திகள் வந்து சேரலாம், கௌரவமான நாள், ஊக்கத்தோடு பணிபுரியும் நாள்.

வளவன்






யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையின் பரிசளிப்பு விழா நேற்று முன்தினம் பாடசாலையின் மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் மாணவிகளின் வரவேற்பு நடனம் இடம் பெறுவதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் யோ. ரவீந்திரன் மாணவர்களை கௌரவிப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- அலுவலகச் செய்தியாளர், என்.குமார்)

# சரசாலை பொதுநூலகத்தின் தேசிய வாசிப்புமாத போட்டி முடிவு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலை பொது நூலகத்தினால் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டி முடிவுகள் சரசாலை பொது நூலகர் இ.தர்மலிங்கத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு,

**கட்டுரைப்போட்டி**

*ஆரம்பப்பிரிவு*

கு.அஜித் (மட்டுவில் கமலாசினி வித்தியாலயம்),க.கவிப்பிரியா (மீசாலை வீரசிங்கம் மகா வித்தி), சு.சுலக்ஷா (மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தி

*கனிஷ்டபிரிவு*

கு.ரதீபா (மட்டுவில் கமலாசினி வித்தியாலயம்), தி.கிருசாந்தி (மீசாலை வீரசிங்கம் மகா வித்தி, ச.பாசுபதன் (மீசாலை வீரசிங்கம் மகா வித்தி

*இடைநிலைப்பிரிவு*

ப.அனுஷா (மீசாலை வீரசிங்கம் மகா வித்தி), இ.சிந்தியா (மீசாலை வீரசிங்கம் மகா வித்தி), வி.மதுமதி (மீசாலை வீரசிங்கம் மகா வித்தி

*மேற்பிரிவு*

சி.லக்தியா (மீசாலை வீரசிங்கம் மகா வித்தி, இ.சங்கீதா(மீசாலை வீரசிங்கம் மகா வித்தி, நா.சுஜிபன்(மீசாலை வீரசிங்கம் மகா வித்தி

*விவாதம் அணி-1*

ப.கபிலேசன் (மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தி), பா.சங்கவி (மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தி), ப.தயாபரன் (மட்டுவில் சந்திர மௌலீசா)

*அணி-2*

க.பிரியங்கா (மட்டுவில் கமலாசினி வித்தியாலயம்), நா.சுஜீபன் (மீசாலை வீரசிங்கம் மகா வித்தி), கு.வரிதி (மட்டுவில் கமலாசினி வித்தியாலயம்)

*முன்பள்ளி அபிநயப்பாட்டு*

கா.கோமகள் (கண்ணகை முன்பள்ளி), கு.தேனுசா (மயூரி முன்பள்ளி), ப.டிலக்சியா (கண்ணகை முன்பள்ளி)

*வாசகரிடையே நடத்தப்பட்ட சிங்கள எழுத்துப் போட்டி*

சி.சாளினி, இ.தாரணி, கே.சிந்து

(அ-3-29)




## விண்ணப்ப முடிவு திகதி நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை உயர்தொழில்நுட்பவியல் நிறுவனத்திற்கு புதிய மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான முடிவுத்திகதி எதிர்வரும் டிசெம்பர் மாதம் 5 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது எனவும் எனவே இதுவரை உயர் தேசிய டிப்ளோமா கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்கத் தவறிய மாணவர்களை விண்ணப்பிக்குமாறும் உயர்தொழில்நுட்பவியல் நிறுவனப் பணிப்பாளர் வி.எஸ்.விஜயநாதன் அறிவித்துள்ளார். (அ)

# விளையாட்டுத்திறனை வளர்க்க இந்து விளையாட்டுக் கழகம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் பாடசாலையில் கல்வி கற்கும் மற்றும் பழைய மாணவர்களின் விளையாட்டுத் திறனை வளர்க்கும் முகமாக சாவகச்சேரி இந்து விளையாட்டுக் கழகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி விளையாட்டு கழகத்தின் ஆலோசனைக் கூட்டம் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி பிரதான மண்டபத்தில் அதிபர் அ.கையால பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

விளையாட்டுத்துறையை மேம்படுத்த ஆர்வமுள்ள பாடசாலை மாணவர்கள், பழைய மாணவர்கள் ஆகியோரை கலந்து கொள்ளுமாறு பாடாசலை அதிபர் அறிவித்துள்ளார். (அ-3-29)

# வீதியை புனரமைக்க மக்கள் கோரிக்கை



வடமராட்சி மடத்தடியில் இருந்து தம்பசிட்டி செல்லும் வீதியானது நீண்டகாலமாக புனரமைக்கப்படாதுள்ளது. குன்றும் குழியுமாக உள்ள வீதியால் பயணம் செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இவ்வீதியால் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, வடமராட்சி வட இந்து மகளிர் கல்லூரி ஆகியவற்றுக்கு செல்லும் பாடசாலை மாணவர்களும் மற்றும் பயணிகளும் என ஆயிரக்கணக்கானோர் பயணம் செய்கின்றனர். பெய்து வரும் கனமழை யால் இவ் வீதியில் வெள்ளம் தேங்கி நின்று விபத்துக்கள் ஏற்படக்கூடிய வாய்ப்புக்களுள்ளது.

எனவே உரிய தரப்பினர் இவ்வீதியை புனரமைத்து போக்குவரத்திற்கு உதவுமாறு அப்பகுதி மக்களும் பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-24)

## சேர்.பொன்.இராமநாதனின் குருபூசைத்தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் அத்திவாரமாக அமைந்துள்ள பரமேஸ்வராக் கல்லூரியின் நிறுவுநரும் சைவப் பெருவள்ளலாருமான சேர்.பொன். இராமநாதனின் குருபூசைத் தின விழா நாளை புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் காலை 8.30 மணிக்கு பல்கலைக்கழகத்திலுள்ள சேர் பொன். இராமநாதனின் உருவச் சிலைக்கு துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் மலர் மாலை அணிவித்து அஞ்சலி செய்யும் நிகழ்வு இடம் பெறவுள்ளது.

இதில் பிற்பகல் யாழ். இராமநாதன் கல்லூரி, யாழ். பல்கலைக்கழக நடனத்துறை மாணவிகளின் நடன நிகழ்ச்சிகள் இடம் பெறவுள்ளன.

அத்துடன் கிளிநொச்சி சேர்.பொன் இராமநாதனின் தான்யலட்சுமிக்கமத்தின் குடியிருப்பாளர்களுக்கு காணி உறுதிப் பத்திரங்களை பரமேஸ்வராக் கல்லூரி இயக்குநர், சபைத்தலைவர் பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் வழங்கவுள்ளார். (அ)

## இதழியல் புகைப்பட கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக ஊடகக் கற்கை சிறப்புக்கலை இரண்டாம் வருட மாணவர்களின் **சாரல்** இதழியல் புகைப்படக் கண்காட்சியும் மூன்றாம் வருட மாணவர்களின் புகைப்பட இதழ் வெளியீடும் நாளை புதன்கிழமை காலை 10.30 மணிக்கும் நாளை மறுதினம் வியாழக்கிழமையும் மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணி வரையும் புதிய கலைக்கட்டட கீழ்த்தளத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுகளை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் வசந்தி அரசரட்னம் ஆரம்பித்து வைக்கவுள்ளார் . (அ)

# இசை நிகழ்ச்சியும் நூல் அறிமுக விழாவும்

இளங்கலைஞர் மன்றத்தினால் நடத்தப்படும் மாதாந்த இசை நிகழ்ச்சி இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு மன்றக் கலா மண்டபத்தில் யாழ். இராமநாதன் நுண்கலைப்பீட இசைத்துறைத் தலைவர் கலாநிதி தா.வி.மு. நவரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் மறைந்த மிருதங்க ஆசான், சங்கீதபூஷணம் ஏ.எஸ்.இராமநாதன் எழுதிய மிருதங்கம் புதிய பாடமுறை நூல் அறிமுக நிகழ்வும் இடம் பெறவுள்ளது.

இந்நூலிற்கான அறிமுக உரையினை இராமநாதன் நுண்கலைப்பீட இசைத்துறை விரிவுரையாளர் சங்கீத வித்துவான் ஏ.கே.கருணாகரனும் நூல் வெளியீட்டுரையினை இராமநாதன் நுண்கலைப்பீட இசைத்துறை விரிவுரையாளர் சங்கீத இரத்தினம் எஸ்.மகேந்திரனும் வழங்கவுள்ளனர்.

இதன்போது சோலோ நிகழ்வு இடம் பெறும். இதில் வயலின் வித்துவான் ஏ.எஸ் ஆர் கலையரசன், மிருதங்ககம் கே. கண்ணதாசன், முகர்சிங் என். சதீஷ்குமார் ஆகியோர் அணி செய் கலைஞர்களாக பங்கேற்கவுள்ளனர். (அ)

# வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதில் இருவர் படுகாயம்

(கரவெட்டி)

நெல்லியடி நகரப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இளைஞர்களுக்கிடையிலான மோதலில் இரு இளைஞகள் படுகாயங்களுடன் சிசிக்சைக்காக வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நெல்லியடி நகரப் பகுதியில் இரு இளைஞர்களுக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதால் இருவரும் மோதிக் கொண்டதில் இருவரும் படுகாயமடைந்துள்ளனர்.

இச்சம்பவத்தில் கரவெட்டி வடக்கு நெல்லியடியைச் சேர்ந்த தி.கார்த்தீபன் (வயது-19) தலையில் போத்தலால் தாக்கப்பட்டு படுகாயமடைந்து பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

பொலிகண்டியை சேர்ந்த எஸ்.காயாதர்ஷன் (வயது-19) என்ற இளைஞன் கழுத்தில் காயமடைந்து அம்பன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். (அ-3-24)

# கடல் வழியாக சட்டவிரோதமாக இத்தாலிக்கு பிரவேசித்த 70 பேர் விபத்தில் சிக்கினர்

(கொழும்பு)

இத்தாலிக்குள் சட்டவிரோதமாக கடல் வழியாக படகில் பிரவேசித்த போது இலங்கையர்கள் உட்பட சுமார் 70 பேர் வரையானோர் பாரிய விபத்தில் சிக்கியுள்ளனர்.

இத்தாலியில் தென்கிழக்கு கடல் பகுதியில் இவர்களின் படகு நீரில் மூழ்கியது.

சட்டவிரோத பயணிகளில் சுமார் 20 பேர் வரையானோர் நீந்தி கரை சேர்ந்துள்ளனர்.

ஒரு தொகையினர் மீட்புப் பணியாளர்களாலும் காப்பாற்றப்பட்டுள்ளனர். பயணிகளில் குறைந்தது மூவர் விபத்தில் இறந்துள்ளார்கள்.

துருக்கியில் இருந்து படகு புறப்பட்டு இருக்க வேண்டுமென சந்தேகிக்கப்படுகின்றது.

இப்படகில் பாகிஸ்தானியர்கள், ஆப்கானியர்கள் ஆகியோரும் பயணித்துள்ளனர்.

இத்தாலிய உள்நாட்டு அமைச்சின் அறிவுறுத்தல்களுக்கு அமைய அனர்த்த நிவாரண பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. (அ-2)

# நாட்டில் 8 ஆயிரத்து அறுநூறு பொலிஸாருக்கு வெற்றிடம்

## அமைச்சர் தினேஷ் குணவர்த்தன

(கொழும்பு)

நாடு முழுவதும் தற்போது 430 பொலிஸ் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக ஆளும் கட்சியின் பிரதம கொறடா அமைச்சர் தினேஷ் குணவர்த்தன நேற்று பாராளுமன்றில் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளித்த அவர், 2011 ஜூலை மாதம் 11 ஆம் திகதி வரை இலங்கையில் உள்ள 430 பொலிஸ் நிலையங்களில் 83 ஆயிரத்து 423 பேர் கடமை புரிகின்றனர்.

இந்தப் பொலிஸ் நிலையங்களுக்கு பணிகளுக்கென 92 ஆயிரத்து 23 பேர் தேவைப்படுகின்றனர் என பதிலளித்தார் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன. (அ-2)

# நீதிமன்றத்தால் அபராதம்

(யாழ்ப்பாணம்)

அனுமதிப்பத்திரமின்றி 20 வெளிநாட்டு சிகரெட் தன்வசம் வைத்திருந்து விற்பனை செய்த குற்றச்சர்ட்டின் பேரில் நபரொருவர் யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றையதினம் யாழ்.நீதவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டார்.வழக்கை விசாரித்த யாழ்.நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியெனக்கண்டு 20 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் 2மாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

---

அனுமதிப்பத்திரமின்றி அரசசாரயம் விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரில் நபரொருவர் யாழ்.பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் யாழ்.நீதவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த யாழ்.நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா குறித்த நபருக்கு முற்குற்றம் 3 உள்ளதால் 60 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்த தவறின் 6மாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

---

ஆசனப்பட்டி அணியாது வாகனம் செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் 9 பேர் யாழ்.பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் யாழ்.நீதவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த யாழ்.நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா குறித்த நபர்கள் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளிகளெனக் கண்டு 9 பேருக்கும் தலா ஆயிரத்து 500 ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் தலா ஒருமாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

---

சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதிப்பத்திரம், வாகன அனுமதிப்பத்திரம், வருமான வரிப்பத்திரம்,தலைக்கவசம் ஆகியவை இன்றி வாகனம் செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் 6 நபர்கள் யாழ்.பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றையதினம் யாழ்.நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த யாழ்.நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா குறித்தநபர்கள் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் குற்றவாளிகளெனக் கண்டு 6 பேருக்கும் தலா 7 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் தலா 5 மாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

---

நுளம்பு பெருகுவதற்கேற்ற வகையில் கழிவுப் பொருட்களை வைத்திருந்த குற்றச்சாட்டின்பேரில் 10பேர் யாழ்.பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றையதினம் யாழ்.நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த யாழ்.நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தர்ராஜா குறித்த நபர்கள் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளிகளெனக் கண்டு தலா 10பேருக்கும் ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் தலா ஒருமாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

---

சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதிப்பத்திரம், வாகன அனுமதிப்பத்திரம், வருமானவரிப் பத்திரம் ஆகியவை இன்றி வாகனம் செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் 6 பேர் யாழ்.பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றையதினம் யாழ்.நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த யாழ்.நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா குறித்தநபர்கள் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் குற்றவாளிகளெனக்கண்டு 6 பேருக்கும் தலா 6ஆயிரத்து 500 ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் தலா 4 மாத சாதாரண சிறைத் தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார். (அ-3)

# லங்கா சோல்ற் நிறுவனத்திலிருந்து பணிக்கொடை பெறுவோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

லங்கா சோல்ற் நிறுவனத்தில் பணிபுரிந்த பின்வரும் பணியாளரின் பணிக்கொடை வழங்கப்படவுள்ளது.

இப்பணிக்கொடை நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 10 மணியளவில் வீரசிங்கம் கட்டடத் தொகுதியில் அமைந்துள்ள மாவட்டத் தொழில் அலுவலகத்திற்கு நேரடியாக வருகை தந்து பெற்றுக் கொள்ள முடியும்.

பணிக்கொடையைப் பெற்றுக் கொள்ள வரும்போது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக அடையாள அட்டையின் நிழற் பிரதியொன்றையும்(உறுப்பினர் இறந்திருப்பின் உரித்துடையவர், இறந்தவரின் மரணச் சான்றிதழையும்) எடுத்து வருமாறு யாழ். உதவித் தொழில் ஆணையாளர் திருமதி நீலலோஜின் ஜெகதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

பணிக்கொடை பெற்றுக் கொள்ள விருப்போர் விபரம் வருமாறு,

எ.முத்துசாமி, எ.சிவபாலன், எ.திலகராஜா, எ.பி.சிறினிவாசன், டி.டக்ளஸ் போல், டி.எவ். பொனிவஸ், ஐ.எம்.செபஸ்ரியாம்பிள்ளை, எச்.பி.கெயில், ஐ.மார்க்கண்டு, கே.தங்கராஜா, கே.பாலசுப்பிரமணியம், கே.கந்தசாமி, கே.ராசு, கே.தம்புபிள்ளை, கே.தர்மலிங்கம், எம்.திருநாவுக்கரசு, எம்.வேலாயுதம், எம்.ஆழ்வான், மாலதி கருணாநந்தன், என்.ராஜதுரை, பி.செல்லையா, பி.நடராஜா, பி.சின்னதுரை, பி.அம்பிகாபதி, ஆர்.செல்லையா, ஆர்.வெங்கடாசலம், எஸ்.சக்திவேல், எஸ்.தம்பிஜயா, எஸ்.தம்பிராஜா, எஸ்.துரைசிங்கம், எஸ்.ஜெயராஜா, எஸ்.சிதம்பரம், ஆர்.இரட்ணசிங்கம், வி.ஆறுமுகம், வி.சின்னையா,வி.ராமையா, வி.வடிவேல், வி.கருணாரத்னம், எம்.நடேசன், கே.செல்லதுரை, எஸ்.கனகராஜா, எம்.நல்லையா, எம்.கந்தையா, ஆர்.மாரிமுத்து, ஏ.குண்டுமணி, நாகேந்திரம், எஸ்.நீலமேகம், தவராஜா, கே.சோமு, ஞா.லோ.சபாறஞ்சிதம், ஈ.அந்தோனிப்பிள்ளை, முனியாண்டி சிவலிங்கம், மதுரை புவிராஜா, செல்லையா சிவபாலன், ஜே.செல்வராஜா, ஜி.பிரேமபாலன், எஸ்.சிவராஜா, ஆர்.தெய்வேந்திரன், எம்.ஜே. ரி.மனோகரன், கே.காளிமுத்து, பி.எம்.ஜே. நரேந்திரன். (அ)

# பொன்சேகாவுடனான உரையாடலை ஒட்டுக்கேட்க ஒலிப்பதிவு கருவி

(கொழும்பு)

சிறையில் அடைக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவை சந்திக்க செல்லும் நபர்களை பொன்சேகா சந்திக்கும் இடத்தில் பேசப்படும் விடயங்களை இரகசியமாக ஒட்டுகேட்கும் வகையில் ஒலிப்பதிவு செய்யும் கருவி ஒன்று மறைமுகமான இடத்தில் பொருத்தப்பட்டுள்ளதாக சிறையில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த மாதத்தில் இவ்வாறான மூன்று கருவிகள் சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன.

இவற்றில் ஒன்றை சரத் பொன்சேகா தன்னை பார்க்க வருபவர்களை சந்திக்கும் இடத்தில் பொருத்தியுள்ளதுடன் இந்த கருவிகளை பொருத்த தொழில்நுட்பவியலாளர்களின் உதவி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. (அ-2)

# பெண்பொலிஸ் வெற்றிடங்களை நிரப்புவதற்கான நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இலங்கைப் பொலிஸ் திணைக்களத்திற்கு பெண் உதவிப் பொலிஸ் பரிசோதகர் மற்றும் கொஸ்தாபர் (கான்ஸ்டபிள்) வெற்றிடங்களை நிரப்புவதற்கான நேர்முகத் தேர்வு நேற்று யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இதில் யாழ்.குடாநாட்டில் பல பகுதியிலிருந்து பெண்கள் நேர்முகத்தேர்வுக்காக வருகை தந்திருந்தனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை இந்த நேர்முகத் தேர்வு இன்றும் நாளையும் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை நடைபெறவுள்ளது.

பொலிஸ் திணைக்களத்தில் இணையவிரும்பும் பெண்கள் இந்த நேர்முகத் தேர்வில் பங்கு கொள்ளவும் என பொலிஸார் தெரிவித்தனர். (அ-6)



## மாதாந்த பொதுக்கூட்டம்

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையினால் சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்கள், அரசசார்பற்ற நிறுவனங்களுக்கான டிசெம்பர் மாதக் குழுக் கூட்டம் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 2ஆம் திகதி காலை 9.30மணிக்கு நடைபெறவுள்ளது என யாழ். சுகாதார சேவைகள் பணிமனை பிராந்தியப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (அ)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்

## அமரர் திருமதி அப்புலிங்கம் பரிமளம்



அன்புடையீர்!

கடந்த 11.11.2010 அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம் அமரர் **திருமதி அப்புலிங்கம் பரிமளம்** அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் எதிர்வரும் 29.11.2011 செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் எமது இல்லத்தில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறுகின்ற மதியபோசனத்திலும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

M.S. லேன்,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.
021 3209514/0774047774

இங்ஙனம்
திரு.மு. அப்புலிங்கம் (கணவர்).
பிள்ளைகள்.

(6863)

# போதிய வசதி இன்றி இயங்கும்

# சிறுவர் இல்லங்களை மூட நடவடிக்கை

## வடமாகாண ஆளுநர் பணிப்பு



(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் வசதிகள் இன்றி இயங்கி வரும் 31 சிறுவர் இல்லங்களை உடனடியாக மூடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்திற்கு வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி பணிப்புரை விடுத்துள்ளார்.

வடமாகாண நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் யுனிசெப் நிறுவனத்தின் அனுசரணையுடன் நேற்று யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற சிறுவர் பாதுகாப்பு சம்பவ முகாமைத்துவம் தொடர்பான பயிற்சி பட்டறையில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், வடமாகாணத்தில் 71 சிறுவர் இல்லங்கள் உள்ளன. அதில் 31 இல்லங்கள் போதிய வசதிகள் இன்றி இயங்கி வருகின்றன.

இது தொடர்பாக பலதரப்பட்டவர்களும் எனக்கு அறிவித்துள்ளனர். எனவே இந்த சிறுவர் இல்லங்களை உடனடியாக மூடுவதற்கு வடமாகா்ண நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும். போருக்கு பின்னரான காலப்பகுதியில் வடமாகாணத்தை சேர்ந்த 500 மேற்பட்ட சிறுவர்கள் மற்றும் முதியவர்கள் சமூகத்தில் இணைக்கப்பட்டுள்ளனர்.

அத்தோடு சிறுவர் இல்லங்களில் 2ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறுவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

வடமாகாணத்தை பொறுத்தவரை யுத்தத்திற்கு பின்பு அதிகமான சிறுவர்கள் இத்தகைய இல்லங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களின் பாதுகாப்பையும் உரிமையையும் உறுதிப்படுத்த வேண்டியது நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தையே சாரும்.

சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு அடுத்த வருடம் பல திட்டங்களை முன்னெடுக்க உள்ளோம்.

இதுவரை அடுத்தமாதம் 12 ஆம் திகதி யாழ்.மாவட்டத்தில் சமூக பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றை நிவர்த்தி செய்வதற்கான வழிமுறைகளை உள்ளடக்கிய செயலமர்வு ஒன்றை நடத்த திட்டமிட்டுள்ளோம்.

இந்தச் செயலமர்வில் சிறுவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளும் கலந்துரையாடப்படவுள்ளன.

சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில் பெற்றோர்களின் பங்களிப்பு மிக முக்கியமானது. சிறுவர்களை சிறந்த பிரஜைகளாக உருவாக்கும் பொறுப்பு பெற்றோர்களுக்கு உள்ளது.

மேலும் சிறுவர்களின் உரிமைகளை பாதுகாக்க அரசாங்கம் பல திட்டங்களை முன்னெடுத்து வருவதோடு அவர்களுக்கான பாதுகாப்பை வழங்குவதில் அரசாங்கம் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றன என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இந்த செயலமர்வில் வடமாகாண கல்வியமைச்சின் செயலாளரும் வடமாகாண ஆளுநரின் செயலாளருமான இ.இளங்கோவன், வடக்கு மாகாண உள்ளூராட்சி சபையின் செயலாளர் ஆர்.விஜயலக்சுமி, யுனிசெப் நிறுவனத்தின் பிரதிநிதி திருமதி கரோலின் பேக்கர், வடமாகாண நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்கள ஆணையாளர் தி.விஸ்வரூபன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

(அ-6)

# பொலிஸாரும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபாடு

வடமராட்சி பிரதேசத்தில் பொலிசாரும் பொது சுகாதார பரிசோதர்களும் இணைந்து டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

நெல்லியடி பொலிஸார், கரவெட்டி வைத்திய அதிகாரி பிரிவு, பொது சுகாதார பரிசோதகர் மற்றும் பொலிஸ் சிவில் பாதுகாப்பு குழுவினர் ஆகியோருடன் இணைந்து பருத்தித்துறை பொலிஸார், பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு, பொது சுகாதார பரிசோதகர் மற்றும் பொலிஸ் சிவில் பாதுகாப்பு குழுவினர் ஆகியோருடன் இணைந்தும் இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

டெங்கிலிருந்து பொதுமக்களை பாதுகாக்கும் நோக்குடன் இக்குழுவினர் ஒவ்வொரு கிராமங்களுக்கும் சென்று மக்கள் மத்தியில் டெங்கு சம்பந்தமான விழிப்புணர்வை ஏற்படுத்தி வருவதுடன் வீடுகள், காணிகளை துப்புரவு செய்து வைத்திருக்குமாறும் அறிவித்தல்களை வழங்கி வருகின்றனர்.

(அ-2)

# மீன்பிடியற்ற வலயத்தால் மீனவர்கள் பாதிக்கப்படுவர்

## திராவிட முன்னேற்றக் கழகம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை-இந்திய கடல் எல்லையின் ஒரு பகுதி மீன்பிடியற்ற வலயமாக பிரகடனப்படுத்துவதற்கு முன்வைக்கப்பட்ட முன்மொழிவுக்கு திராவிட முன்னேற்றக்கழகம் எதிர்ப்பு வெளியிட்டுள்ளது.

இந்த நடவடிக்கை இந்திய மீனவர்களின் வாழ்வாதாரத்தை வெகுவாக பாதிக்கும் எனவும் மீனவர்களுக்கு எதிரான செயற்பாடு எனவும் திராவிட முன்னேற்றக்கழகத்தின் தலைவர் டீ.ஆர்.பாலு தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் இந்திய பிரதமர் மன்மோகன் சிங்குடன் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றதாவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் பாராளுமன்றில் இதனை விவாதிக்க பிரதமருக்கு கழக உறுப்பினர் அழைப்பு விடுக்கவுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கை கடற்படையினரால் தமது நாட்டு மீனவர்கள் தாக்கப்படுவதாகவும் முன்வைக்கப்படும் முறைப்பாடுகளை குறைக்கும் நோக்கில் இரண்டு நாடுகளுக்கு இடையில் மீன்பிடி நடவடிக்கைகள் தடை செய்யப்பட்ட வலயம் ஒன்றை பிரகடனப்படுத்த வேண்டுமென இந்திய கரையோரப் பாதுகாப்பு பிரிவினர் யோசனை முன்வைத்திருந்தனர். (அ-2)

# ஓவியப்போட்டி முடிவு

யாழ்ப்பாணம்)

உலக வீதி விபத்துக்குள்ளானோரின் தினத்தையொட்டி சுகாதார அமைச்சினால் வடமாகாண மட்டத்தில் நடத்தப்பட்ட ஓவியப் போட்டி 2011 முடிவு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி மாணவர்கள் சிரேஷ்ட பிரிவில் முதல் மூன்று இடங்களை பெற்றுள்ளார்கள்.

அவர்களின் முதலாம் இடத்தை மதுணிகா ரதீஸ்வரன் இரண்டாம் இடத்தை தேவதாசன் நிதர்சன், மூன்றாம் இடத்தை திருநாவுக்கரசு பார்த்தீபன் பெற்றுள்ளனர். (அ-2)

# இருதய நோயினால் பரிதவிக்கும் பாலகனுக்கு உதவுவீர்களா?



மட்டக்களப்பில் வசிக்கும் பெருமாள் ரவிச்சந்திரன் என்பவரது மகன் விதுஷன் (வயது1 1/2 ) இருதய நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கு சத்திரசிகிச்சை செய்ய வேண்டுமென டாக்டர் தெரிவித்துள்ளதாகப் பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

சத்திரசிகிச்சையின்மூலம் பாலகனை இந்தக் கொடூர நோயினால் இருந்து மீட்பதற்கு ஆறு இலட்சம் செலவாகுமென வைத்தியரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி குடும்பம் வறுமைக்கோட்டின் கீழ் உள்ளதாகவும் இத்தொகையை அவர்களால் திரட்டமுடியாதுள்ளதாகவும் பெற்றோரால் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே நல்ல உள்ளம் கொண்டவர்களிடமிருந்து உதவிகள் எதிர்பார்ப்பதாகவும் அவர்களால் குறிப்பிடப்படுகிறது.

மனித நேயமும் அன்புள்ளம் கொண்டவர்களும் தமது உதவிகளை செய்ய விரும்பினால் மக்கள் வங்கியிலுள்ள 337200180003476 என்ற' இலக்கத்துடன் தொடர்புகொண்டு பணத்தினை வைப்பு செய்யலாம் என பெற்றோர் அறிவிக்கின்றனர்.

மேற்படி குடும்பத்தினர் யாழ்ப்பாணத்தை நிரந்தர வசிப்பிடமாக கொண்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

(அ-2)

# பொதுப்போக்குவரத்தின்போது துன்புறுத்தப்படும் பெண்கள்

(கொழும்பு)


இலங்கையில் 15 வயதுக்கும் 45 வயதுக்கும் இடைப்பட்ட 70 வீதமான பெண்கள், பொதுப்போக்குவரத்துகளின் போது பாலியல் ரீதியில் துன்புறுத்தப்படுகின்றார்கள் என்று சட்ட உதவி ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் பொதுப்போக்குவரத்துக்களின் போது பெண்களை பாலியல் ரீதியில் துன்புறுத்துவோருக்கு 5 வருட சிறைத் தடனையை வழங்க சட்டத்தில் இடமுண்டு என்று சட்ட உதவி ஆணைக்குழுவின் தலைவர் எஸ்.எஸ். விஜேயமான தெரிவித்துள்ளார்.

இந்தக்குற்றங்கள் தொடர்பில் தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இல்லையேல் நாட்டின் மரியாதைக்கு களங்கம் ஏற்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை தாம் பொதுப்போக்குவரத்தின் போது பாலியல் ரீதியில் துன்புறுத்தப்படும் பெண்கள் பேருந்தின் சாரதி மற்றும் நடத்துநரிடம் முறையிட வேண்டும் என்றும் ஆணைக்குழுவின் தலைவர் கோரியுள்ளார். (அ-2)

# வடக்கு, கிழக்கு மக்களுக்கு சுதந்திரம் பெற்றுக் கொடுத்தவர்களே படைவீரர்கள்



## கூட்டமைப்பு உயிர்த்தியாகம் செய்யவில்லை என்கிறார் சம்பிக்க

(கொழும்பு)

**விடுதலைப்புலி பயங்கரவாதிகளால் வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட சிங்கள, முஸ்லிம் மக்களை மீளக் குடியேற்றுவதைத் தடுக்கும் நாசிவாத அரசியலை தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு முன்னெடுத்து வருகின்றது என்று அரசின் பங்காளிக் கட்சியான ஜாதிக ஹெல உறுமயவின் தேசிய அமைப்பாளரும் அமைச்சருமான சம்பிக்க ரணவக்க குற்றம் சுமத்தியுள்ளார்.**

**புலம்பெயர் புலி பிரிவினைவாதத்திற்கு துணை போகும் அமெரிக்காவிற்கு கூட்டமைப்பும் விலைபோயுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.**

அமெரிக்கஇராஜாங்க திணைக்களத்திற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சமர்ப்பித்துள்ள அறிக்கை தொடர்பாக கருத்து தெரிவிக்கையிலேயே மின்சக்தி மற்றும் மின்வலு அமைச்சர் சம்பிக்க ரணவக்க மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அமைச்சர் மேலும் தெரிவிக்கையில், அன்று புலிகளின் ஆயுதங்களுக்கு பயந்து அடி பணிந்தே கூட்டமைப்பினர் வடகிழக்கில் தமது அரசியலை முன்னெடுத்தனர். காணிகளை பலாத்காரமாக கைப்பற்றி சிங்கள, முஸ்லிம் மக்களை புலிகள் வெளியேற்றினர்.

அது மட்டுமல்ல மக்களுக்கு வரும் கடிதங்களையும் புலிகள் திறந்து வாசித்த பின்னரே கையளித்தனர். இவ்வாறு புலிப் பயங்கரவாதம் ஆயுதங்களால் அடக்கி வைத்திருந்தது. ஆனால், எமது படையினர் தமது உயிர்களை அர்ப்பணிப்புச் செய்து வடக்கு, கிழக்கு உட்பட முழு நாட்டையும் பயங்கரவாதத்திலிருந்து மீட்டெடுத்தனர்.

வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுக்கு உண்மையான சுதந்திரத்தை பெற்றுக் கொடுத்தனர். கூட்டமைப்பினர் எவரும் உயிர்த் தியாகம் செய்து வடபகுதி மக்களை பாதுகாக்கவில்லை. இன்று கூட்டமைப்பினரால் தேர்தல் காலங்களில் சுதந்திரமாக பிரசாரங்களை மேற்கொள்ள முடிந்துள்ளது. போட்டியிட்டு வெற்றி பெறும் வாய்ப்புகளும் கிடைத்துள்ளன. புலிகளால் சேதமாக்கப்பட்ட பாதைகள் சீர் செய்யப்படுகின்றன. மக்களுக்கு மின்சாரம், அடிப்படைத் தேவைகள் வழங்கப்பட்டுள்ளன.

வடபகுதியின் பொருளாதார அபிவிருத்தி நூற்றுக்கு 22 வீதமாக அதிகரித்துள்ளது. இவ்வாறு அரசாங்கத்தின் திட்டங்களால் மக்கள் பலனடைந்து வருகின்றனர்.

இதனைக் கூட்டமைப்பினர் விரும்பவில்லை. தமிழ் மக்களின் முன்னேற்றம் கூட்டமைப்பின் அரசியல் இருப்பைத் தகர்த்து விடும் என்பதால் தமிழ் மக்களைத் தொடர்ந்தும் இருட்டிலே வைத்துக் கொள்ளவே கூட்டமைப்பினர் விரும்புகின்றனர். இதுவரை காலமும் இந்தியாவின் பின்னால் சென்ற கூட்டமைப்பு தற்போது இலங்கையில் பிரிவினைவாதத்திற்கு துணை போகும் அமெரிக்காவிற்கு விலைபோயுள்ளது.

அமெரிக்கா தனது நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள்ால் வீழ்ச்சி கண்டு வருகிறது. இவ்வாறானதோர் நிலையில் புலம்பெயர் தமிழர்களிடம் பணம் பெற்றுக் கொண்டு கூட்டமைப்பு பிரிவினைவாதத்தை ஊக்குவிக்கின்றது. இதற்கு இடமளிக்கமாட்டோம் என்றார். (அ-2)

# 17 வருடங்களின் பின் சந்தேகநபர் கைது

(கொழும்பு)

சிலாபம் ஆராச்சிகட்டுவ பிரதேசத்தின் அடிப்பில எனும் இடத்தில் 17 வருடங்களுக்கு முன்னர் 72 வயதான பெண்ணொருவரை கொலை செய்ததாக கூறப்படும் மூவர் தற்போது கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நீண்டகால தனிப்பட்ட பகை காரணமாக அப்பெண் கத்தியால் குத்தப்பட்டதாக விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் ஆயுதப் படைகளிலிருந்து தப்பியோடிய ஒருவரும் அடங்குவதாகவும் அவர் சிலாபம் குற்றப் புலனாய்வு பிரிவினால் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. (அ-2)

# லங்காமிரர் முடக்கப்பட்டமைக்கு அரசுக்கெதிராக நடவடிக்கை

(கொழும்பு)

தமிழ் இணையத்தளம் இலங்கை அரசாங்கத்தினால் முடக்கப்பட்டமைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக லங்காமிரர் செய்தி இணையத்தளம் தெரிவித்துள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கை காரணமாக தமக்கு பாரிய நட்டம் ஏற்பட்டுள்ளதாக குறித்த இணையத்தளம் சுட்டிக் காட்டியுள்ளது.

இணையத்தளத்தின் ஆசிரியர் கெலும் சிவந்த, இணையத்தள முடக்கம் காரணமாக அதன் விளம்பரங்கள் யாவும் முடங்கிப் போயுள்ளன என்றும் இதனால் பணியாளர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கு கூட சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

முடக்கம் காரணமாக தமது வாடிக்கையாளர்கள் குறைந்து போகும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் எதிர்கா லத்தில் இணையத் தளத்தை மூடும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் சிவ ந்த குறிப்பிட்டுள்ளார்.

லங்காமிரர் இணையத்தளம் இலங்கையின் இணையத் தளங்களில் அலெஸ்கா தரப்படி நான்காவதாக இருந்தது. எனினும் தற்போது இது 32 ஆவதாக பின் தள்ளப்பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே சட்ட நடவடிக்கைக்கு தயாராவதாக சிவந்த எச்சரித்துள்ளார். (2)

# ரணிலுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை நிரூபிக்க முடியும்- மைத்திரி குணரட்ன

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவிற்கு எதிரான குற்றச்சாட்டுக்களை நிரூபிக்க முடியும் என தென்மாகாணசபை உறுப்பினர் மைத்திரி குணரட்ன தெரிவித்துள்ளார்.

சுமத்தப்பட்டுள்ள சகல குற்றச்சாட்டுக்களை நிரூபிக்க கூடிய ஆதாரங்கள் காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ரணில் விக்ரமசிங்கவின் நடவடிக்கை கள் கட்சி விதிமுறைகளுக்கு புறம்பானது எனத் தெரிவித்து மைத்திரி குணரட்ன 20 குற்றச்சாட்டுக்கள் அடங்கிய முறைப்பாடு ஒன்றை சமர்ப்பித்துள்ளார்.

இந்த முறைப்பாடு ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சுயாதீன விசாரணை நடத்துமாறு விடுக்கப்பட்ட கோரிக்கை தொடர்பில் இதுவரையில் பதில் எதுவும் கிடைக்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறெனினும் ரணில் விக்ரமசிங்க கட்சி உறுப்பினர்களை பாலியல் ரீதியாக துன்புறுத்துவதாக வெளியான குற்றச்சாட்டு பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. இந்தக் குற்றச்சாட்டை நிரூபிக்க கூடிய ஆதாரங்கள் காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பிரதான சாட்சியாளராக புத்திக பத்திரனவை குறிப்பிட முடியும் என அவர் தெரிவித்துள்ளார். மேலும் பலர் சாட்சியளிக்கத் தயாராக இருக்கின்றனர் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# இந்தியப்பிரஜை என பொய் கூறிய இலங்கையர்களுக்குத் தண்டனை

(கொழும்பு)

இந்தியப் பிரஜைகள் என பொய் கூறிய இலங்கையர்களுக்கு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இந்தியப் பிரஜைகள் என பொய் கூறி சொத்து ஒன்றை கொள்வனவு செய்த இலங்கையர்களே இவ்வாறு தண்டிக்கப்பட்டுள்ளனர்.

மதுரை காமராஜர் கல்லூரியில் பகுதி நேர விரிவுரையாளராக கடமையாற்றிய இலங்கையர் ஒருவரும் அவரது பெற்றோரும் இவ்வாறு தண்டிக்கப்பட்டுள்ளனர்.

கடவுச் சீட்டு மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் இவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டிருந்தது.குறித்த இலங்கையர்களுக்கு ஒன்பது ஆண்டுகள் சிறைத் தண்டனையும் , தலா மூவாயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

அகதிகளாக இந்தியாவிற்குள் பிரவேசித்த இவர்கள் பின்னர் சட்டவிரோதமான முறையில் இந்தியப் பிரஜைகளாக மாறியுள்ளனர்.

அரசாங்கத்தை ஏமாற்றி ஆவணங்கள் தயாரித்த மோசடியில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.ஜேகொப் சவரிமுத்து, மேரி எக்னஸ் மற்றும் ரொஹான் சவரிமுத்து ஆகியோருக்கு இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# ஜே.வி.பியின் உயர்மட்டம் அடுத்த வருடம் தெரிவு

(கொழும்பு)

ஜே.வி.பியின் மத்திய செயற்குழு கூட்டம் இன்று புதன்கிழமை தலைமையகமான பெலவத்தையில் இடம்பெறவுள்ளது.

இந்த கூட்டத்திற்கு கட்சியின் மத்திய செயற்குழுவில் அங்கம் வகிக்கும் 23 உறுப்பினர்களும் கலந்து கொள்ளுமாறு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாக கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா குறிப்பிட்டுள்ளார்.

ஜே.வி.பி.கட்சி இரண்டாக பிரிவடைந்ததன் பின்னர் இடம்பெறும் முதலாவது மத்திய செயற்குழு கூட்டம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

இதனிடையே எதிர்வரும் ஜனவரி மாத முதல் பகுதியில் கட்சியின் உயர்மட்ட உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். (அ-2)

# நாடளாவிய ரீதியில் டெங்கு தொற்றால் 163 பேர் பலி

(கொழும்பு)

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக டெங்கு தொற்று அதிகரிக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. சுகாதார அமைச்சு இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

இந்த நிலையில் பொதுமக்கள் தங்களது சூழலை நுளம்பு பெருக்கத்தை தடுக்கும் வகையில் சுத்தமாக வைத்திருக்கும் படியும் அமைச்சு வலியுறுத்தியுள்ளது.

இதனிடையே சுகாதார அதிகாரிகள் மற்றும் உள்ளூர் அதிகாரிகள் பொலிஸாருடன் இணைந்து நகர பகுதிகளில் விசேட சோதனை நடவடிக்கையினை மேற்கொள்ளவுள்ளனர்.

இந்த நடவடிக்கையானது இன்று முதல் ஆரம்பமாகவுள்ளதாக சுகாதார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே இந்த ஆண்டில் முதல் 11 மாதங்களில் டெங்கு தொற்றாளர்கள் என்று சந்தேகிக்கப்படும் சுமார் 22 ஆயிரத்து 926 பேர் இனங்காணப்பட்டுள்ளதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

நாடளாவிய ரீதியாக மேற்கொண்ட இந்த ஆய்வின்படி 163 பேர் மரணித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் மேல் மாகாணத்திலேயே அதிகப்படியாக 57 தசம் 5 சதவீதமான டெங்கு நோய் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# நீரிழிவு நோயால் வரும் சில முக்கிய பிரச்சினைகள்

**தாழ் சீனி**

இரத்தத்தில் குறைந்த அளவு சீனிச்சத்து இருப்பதை தாழ் சீனி அல்லது ஹைபோகிளைசீமியா என்கிறார்கள்.

வகை-1 நீரிழிவு நோயாளிகள் ஒவ்வொரு வாரமும் ஒன்று அல்லது இரண்டு முறை ஹைபோகிளைசீமியா என்ற பிரச்சினையால் பாதிக்கப்படுகிறார்கள்.

**காரணம்**

ஹைபோகிளைசீமியா ஏன் ஏற்படுகிறது என்பதைப் பற்றி பார்த்தோமானால் நீரிழிவு நோயாளிகள் உணவுக் கட்டுப்பாடு மற்றும் சீனியை கட்டுப்படுத்தும் செயல் முறை, இன்சுலின் சரியாக சுரக்குமாறு பார்த்துக் கொள்ளுதல் அல்லது இன்சுலின் ஊசியை தவறாமல் போட்டுக் கொள்ளுதல் ஆகியவற்றின் மூலம் ஒரு சமநிலையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். பின்னர் அதை தொடர்ந்து பராமரிக்க வேண்டும்.

சில வேளைகளில் இயல்புக்கு மாறாக உணவை உண்ணும்போது அல்லது இரு வேளை சாப்பாட்டிற்கு இடையே அதிக இடைவெளி விடும்போது அல்லது சீனிச்சத்து குறைந்திடும் வகையில் நொறுக்குத்தீனியை மறந்துவிடும் போது இந்த சமநிலை பாதிக்கப்பட்டு இரத்தசீனிக்குறைவு அல்லது ஹைபோகிளைசீமியா ஏற்படும்.

சுருக்கமாகச் சொன்னால் குறைவான சீனி இருக்கும் போது இன்சுலின் அதிகமாகச் சுரத்தல், அதிகமாக உடற்பயிற்சி, மிகக் குறைந்த காபோவைதரேற்று எடுத்துக் கொள்ளுதல், வெறும் வயிற்றில் மது பானம் அருந்துதல் போன்ற காரணங்கள் ஹைபோகிளைசீமியாவுக்குக் காரணமாகின்றன.

ஹைபோகிளைசீமியா பாதிப்பு வகை-2 நீரிழிவு நோயாளிகளிடத்தில் மிகக்குறைவாகவே காணப்படுகிறது. இது எந்தெந்த வேளைகளில் ஏற்படக்கூடும் என்பது அடுத்து அறிந்துகொள்ள வேண்டியவை.

பொதுவாக நண்பகலுக்குள் உள்ள நேரம் அல்லது மதிய உணவுக்கு முன்பு, இரவு நேரத்தில், உடற்பயிற்சிக்கும் பின்னர் ஹைபோகிளைசீமியா ஏற்படும்.

**அறிகுறிகள்**

அறிகுறிகளை முதலில் தோன்றுபவை, அடுத்து வருபவை என இரண்டாகப் பிரித்துக் கொள்ளலாம்.

முதலில் குளிர்ந்த வியர்வை உண்டாகும். பலவீனம் தோன்றும், கைகளில் நடுக்கம் ஏற்படும், இதயம் அதிக வேகத்தில் துடிக்க ஆரம்பிக்கும்.

இதைத் தொடர்ந்து தலைவலி, கண் பார்வை மங்குதல், தனது இயல்பான நிலையிலிருந்து வேறுபட்டு செயற்படுதல், குழப்பம், சுய நினைவை இழத்தல், மயங்கி விழுதல் போன்ற அறிகுறிகள் தோன்றும்.

**முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்**

ஹைபோகிளைசீமியா வரும் வாய்ப்புள்ளவர்கள் முன் எச்சரிக்கை நடவடிக்கைகளில் ஈடுபடுவது அவசியமாகும்.

சீனிச்சத்துள்ள சொக்லேட், சீனி, தேன் போன்றவற்றில் சிறிதை எப்போதும் கைவசம் வைத்திருக்க வேண்டும்.

ஹைபோகிளைசீமியாவின் அறிகுறிகளை நீங்கள் உணர்ந்தவுடன் அதை எளிதில் சாப்பிட இயலும். அவ்வாறு கைவசம் வைத்திருக்காத பட்சத்தில் திடீர் மயக்கம் ஏற்பட்டு நினைவிழக்கும் அபாயம் உண்டு.

வெளியில் செல்ல நேர்ந்தால் மேற்கண்ட பொருட்களை எடுத்துச் செல்வதோடு உங்களோடு வருபவர் அல்லது நெருங்கிய உறவினர் ஆகியோரிடம் உங்களுக்குள்ள சீனி குறைபாட்டைக்கூறி வைத்திருத்தல் நல்லது. இதன்மூலம் பாதிப்பு ஏற்படும் எந்தச் சூழலிலும் அதிலிருந்து தப்பிக்க இயலும்.

வெறும் வயிற்றில் இன்சுலினை எடுத்துக் கொள்ளும் போது ஹைபோகிளைசீமியா பிரச்சினை ஏற்படலாம். எனவே இதைப்பற்றி எப்போதும் மருத்துவரிடம் கலந்தாலோசனை செய்து பிரச்சினையை சமாளிக்கத் தயாராக இருக்க வேண்டும்.

ஹைபோகிளைசீமியா பிரச்சினையை தவிர்ப்பதைத் தலையாயக் குறிக்கோளாக வைத்து அதிக இரத்த சீனியை பெற்றுக் கொண்டதும் நீங்கள் குணமடைந்து விட்டதாகக் கருதி விடக்கூடாது.

ஹைபோகிளைசீமியா எதிர் விளைவுகளுக்கு அதிக இரத்த சீனி காரணமாக இருக்கலாம். இதனால் கடுமையான பிரச்சினைகளும் உண்டாகலாம். எனவே, மருத்துவரை அணுகி பிரச்சினையை போக்குவதற்கான தீர்வை பெற வேண்டும்.

**04**



**சிகிச்சை**

ஹைபோகிளைசீமியா பிரச்சினையால் பாதிக்கப்பட்டவர் விரைந்து நலம்பெற சிகிச்சை முக்கியம்.

தாழ் சீனி அறிகுறிகள் தெரிந்தவுடன் உடனடியாக இரண்டு கட்டி சீனி அல்லது

பேராசிரியர்
டாக்டர் டி.காமராஜ்,
M.D., P.G.D.C.G., D.M.R.,
சென்னை.

இரண்டு தேக்கரண்டி சீனி, அல்லது குளுக்கோஸ் போன்றவற்றை நீரில் கலந்து வாயில் போட்டுக்கொள்ளவும்.

உடனடியாக அறிகுறிகள் மறைந்துவிட்டால் உங்கள் பிரச்சினை சரியாகிவிட்டது என்று பொருள். நீடித்தால் மேலும் கூடுதல் பங்கு சீனிச் சத்தை பயன்படுத்துங்கள்.

ஹைபோகிளைசீமியா அறிகுறிகள் தென்படத் தொடங்கியவுடனே நீங்கள் செய்யும் வேலையிலிருந்து இயந்திரங்களை இயக்குவதிலிருந்து வாகனம் ஓட்டுவதிலிருந்து விலகிக் கொள்ளுங்கள். இல்லாவிட்டால் உங்களுக்கு ஆபத்து நேரிட அதிக வாய்ப்புண்டு.

நீரிழிவு நோய்க் கட்டுப்பாட்டைத் தொடர்ந்து பின்பற்ற வேண்டும் என்பதை மறந்து விடாதீர்கள்.

(தொடரும்)





# புரோஸ்டேட் சுரப்பி பிரச்சினை

**அது என்ன புரோஸ்டட் சுரப்பி? அது மனித உடம்பில் எங்குள்ளது?**

புரோஸ்டேட் சுரப்பி என்பது எல்லா ஆண்களுக்கும் உள்ள சுரப்பி (Sex Accessory). இந்தப் புரோஸ்டேட் சுரப்பியானது ஆண்களின் சிறுநீர்ப்பையின் அடிப்பகுதியில் சிறுநீர்த்தாரையில் ஒரு பகுதியைச்சுற்றிலும் அமையப் பெற்றுள்ளது. இந்தப் புரோஸ்டேட்சுரப்பி டெஸ்டோஸ்டிரான் (testosterone) டீ ஹைட்ரோடெஸ்டோஸ்டிரான் (Dehydro Testosterone), ஈஸ்ட்ரோஜன் (Estrogen) ஆகிய ஓமோன்களால் கட்டுப் படுத்தப்படுகிறது. ஆண்கள் விந்துவின் ஒரு பகுதியை இந்தப் புரோஸ்டேட் சுரப்பி தான் சுரக்கச் செய்கிறது. அதாவது விந்துவின் 30%ஐ புரோஸ்டேட் சுரப்பி தான் சுரக்கின்றது.

**இந்தப் புரோஸ்டேட் சுரப்பியில் என்னென்ன பாதிப்புக்கள் வரலாம்?**

ஐம்பது வயதுக்கு மேல் சில ஆண்களுக்கு டெஸ்டோஸ்டிரான், டீ ஹைட் ரோடெஸ்டோஸ்டிரான் ஆகிய ஓமோன்கள் குறைகின்றபொழு தும் அல்லது மேலே குறிப்பிட் டுள்ள ஓமோன்களின் சமசீரற்ற தன்மையால் இந்தப் புரோஸ்டேட் சுரப்பி வீங்க ஆரம்பித்து விடும்.



இந்தப் பாதிப்பிற்கு பினைன் புரோஸ்டேடிக் ஹைபர்டோபி (Beningn Prostatic Hypertrophy) புரோஸ்டேட் சுரப்பியின் வீக்கம் என்று பெயராகும் புரோஸ்டேட் சுர ப்பியில் உண்டாகின்ற மிக முக்கிய பாதிப்புகளில் இது முக்கியமானதாகும். அடுத்து இதைத் தவிர புரோஸ்டேட்டில் புற்று நோய் (Prostatic Cancer) வந்தாலும் இந்தப் புரோஸ்டேட் சுரப்பியானது வீங்கி பெரிதாகி விடும்.

**புரோஸ்டேட் வீங்குவதால் (பினைன் புரோஸ்டேட்) என்னென்ன அறிகுறிகள் தோன்றும் ?**

- அடிக்கடி சிறுநீர் கழிக்கத் தோன்றும். இத்தகைய உணர்வு அதிகமாக இருக்கும். இதன் கார ணமாக அடிக்கடி சிறுநீர் கழிக்க தூக்கத் தில் இருந்து எழ வேண்டியிருக்கலாம்.
- சிறுநீர் கழித்த பின்பும் கூட சிறுநீர்ப்பையில் இன்னும் மிச்சமாக சிறுநீர் இருப்பது போன்ற உணர்வு இருக்கும்.
- சிறுநீரைக் கட்டுப்படுத்தமுடியாத அளவுக்கு உடனே வந்து விடும் நிலை ஏற்படலாம்.
- சிறுநீர் வெளியில் செல்ல முடியாமல் சிறுநீர்ப்பையிலேயே சேர்ந்து அடிவயிறு வீங்கி முழுமையாக சிறுநீர் தடைப்பட்டு விடும். இந்த நிலை குளிர் மழைக்காலங்களிலும் மது அருந்திய பின்னரும் அதிகமாக ஏற்படும்.

இவை எல்லாம் புரோஸ்டேட்சுரப்பி வீக்கமுற்றதற்கான அறிகுறிகளாகும். இதுதவிர மேலும் சில இன்றிமையாத தீவிரமான விளைவுகள் சில நோயாளிகளுக்குத் தென்படலாம்.


அவைகளையும் தெரிந்து கொள்ளுங்கள்.

- சிறுநீரில் இரத்தம் கலந்து வெளியேறலாம்.

சிறுநீர்ப்பையில் கற்கள்கூட (Bladder Stone) உருவாகலாம். புரோஸ்டேட் வீக்கத்தால் சில நேரங்களில் (Renal Insufficiency) இரண்டு சிறுநீரகங் களும் கூட செயல் இழக்க நேரிடலாம்.

இந்தப் புரோஸ்டேட் வீக்கத்தால் சிறுநீர் முழுமையாக வெளியேறாததால்

**01**



சிறுநீர்ப்பையில் கிருமிகள் உண்டாகி அடி வயிற்றில் (Urinary Tract infection) வலி உண்டாகலாம்.

சிறுநீர் கழிக்க முக்குவதால் குடல் இறக்கம் ஆகியவை ஏற்பட லாம்.

**புரோஸ்டேட் சுரப்பி வீங்கியிருப்பதை எப்படிக் கண்டு பிடிப்பீர் கள்?**

ஆசனத்தின் வழியாக விரலை செலுத்தி புரோஸ்டேட் சுரப்பியின் அளவு, அதன் இருப்பிடம் மற்ற இடங்களோடு அது கொண்டுள்ள தொடர்பு ஆகியவற்றை அறிந்துகொள்ளலாம்.

டாக்டர் ஆர்.இளம்பரிதி, MS,
சென்னை-10.

அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் செய்து சிறுநீர் முழுமையாக சிறுநீர்ப்பையில் இருக்கும் பொழுது ஸ்கேன் மூலம் புரோஸ்டேட் சுரப்பியின் அளவு மற்றும் இருப்பிடத்தைத் தெரி ந்து கொள்ளலாம்.

சிறுநீர் கழித்த பின்பு ஸ்கேன் செய்து எந்த அளவுக்கு இன்னும் சிறுநீரானது சிறுநீர்ப்பையில் அடைபட்டுத் தங்கியிருக்கிறது என்கிற அளவையும் துல்லியமாகத் தெரிந்து கொள்ளலாம்.

(தொடரும்)

# சாதாரணத்திலிருந்து மிக சாதாரணத்திற்கு



ஆன்மீகம் 10

## கனவுச் சிறைக்குள்...



கற்பனைகள், நினைவுகள் மற்றும் உணர்ச்சிகளை கலந்து இந்த சிக்கலான சுவரை ஒரு தடவை நீங்கள் கட்டிவிட்டால் பிறகு அதுவே உங்கள் போக்கை நிர்ணயிக்கும் மென்பொருளாக மாறிவிடுகிறது. சுவரை நீங்கள் கடக்கும்படி அந்த மென்பொருள் எழுதப்படவில்லை சுவரை நீங்கள் தொடக்கூட முடியாது. அந்த சுவர்களுக்குள்ளேயே சுற்றிக் கொண்டிருக்க வேண்டும், அப்படித்தான் அது எழுதப்பட்டிருக்கிறது. உங்கள் நினைவு வங்கியில் விழிப்பற்ற நிலையில் பதிந்துள்ள நினைவுகளை எப்போது உங்களால் விழிப்புணர்வுடன் அணுக முடிகிறதோ, அதுவரை நீங்கள் அந்த சுவர்களைத் தொடக்கூட முடியாது. ஏனெனில் நீங்கள் விழிப்புணர்வில்லாமலே எழுதிய மென்பொருள் சுவர்களைத் தொடக்கூட முயற்சிக்காதபடிதான் எழுதப்பட்டிருக்கிறது அந்த சுவர்களுக்குள்ளேயே நீங்கள் விடுதலையைத் தேடலாம், அதிகாரத்தைத் தேடலாம். ஏதோ ஓரளவிற்கு அதிகாரங்கள், விடுதலை இருக்கிறது. அந்த சுவர்களுக்குள் அரசராக இருக்கிறீர்கள். முழு இராஜ்ஜியமும் நடத்துகிறீர்கள். சிறைக்குள் ஓரளவுக்கு நீங்கள் அதிகாரத்தையும் விடுதலையும் தேடிக் கொள்ளமுடியும் ஆனால், சிறைக்குள்ளேயே நீங்கள் மிகவும் சக்தி வாய்ந்த மனிதராக ஆகிவிட்டால், பிறகு சிறையைவிட்டு வெளியேவர ஒருபோதும் முயற்சிக்க மாட்டீர்கள். அப்படிப்பட்ட ஏக்கம் உங்களுக்கு ஒருபோதும் வராது குறுகிய காலத்திற்கு சிறையில் அடைக்கப்படும் மனிதர்கள் விரைவில் வெளியே வரத்தான் துடிக்கிறார்கள். ஆனால், ஆயுள் கைதிகளாக இருப்பவர்கள் அங்கிருந்து வெளியே வரமுடியாது என்பதை உணர்ந்திருப்பதால் உள்ளுக்குள்யே ஒரு சாம்ராஜ்யத்தை அமைத்துக் கொள்கிறார்கள். எப்படியும் உள்ளேதான் இருக்கப்போகிறோம் என்பது தெரிந்து வைத்திருப்பதால் உள்ளேயே எதையாவது உருவாக்கிக் கொள்ள முயற்சிக்கிறார்கள் சிறை வாழ்க்கையை எப்படியாவது அர்த்தப் படுத்திக்கொள்ளப் பார்க்கிறார்கள்.

எனவே துரதிஸ்டவசமாக வெளிப்புறஉதவி என்பதுமிகவும் தேவையான ஒன்றாக ஆகிவிடுகிறது. ஏனென்றால் விடுதலைக்கான சாத்தியம் இருக்கிறது என்பதையேகூட வெளிப்புற உதவி கிடைக்கும் போதுதான் உங்களால் உணர்ந்து கொள்ள முடிகிறது. சிறைக்குள்ளேயேதான் சுதந்திரத்தையும், அதிகாரத்தையும் தேடிக்கொண்டிருப்பீர்கள். பொதுவாக உலகில் பெரும்பாலான சிறைகள் மிகவும் நன்றாகவே பராமரிக்கப்படுகின்றன. எல்லோரும் குறிப்பிட்ட நேரத்தில் எழுவது, குறிப்பிட்ட நேரத்தில் படுக்கைக்குச் செல்வது, சரியான நேரத்திற்கு சாப்பிடுவது எல்லாமே குறிப்பிட்ட நேரத்தில் நடக்கிறது. எல்லா விடயங்களும் முறையாக ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கின்றன. ஏனென்றால் சிறையை நிர்வாகம் செய்பவர்களுக்கு இந்த ஒழுங்குதான் பாதுகாப்பானது. இந்த ஒழுங்குமுறை இல்லாவிட்டால் தவறு எங்கே நடக்கிறது என்பது கண்டுபிடிக்க முடியாத விடயமாகி விடும் எல்லாமே முறைப்படுத்தப்பட்ட ஒரு சிறையில் தப்பிப்பது என்பது மிகவும் கடினமான விடயம். அதேபோல உங்களுக்குள்ளும் நீங்கள் மிகவும் ஒழுங்காக ஒருங்கிணைக்கப்பட்டிருந்தால் உங்களுக்கு நீங்களே போட்டிருக்கும் சிறையை உடைப்பது மிகவும் கடினம் என்பதை உணரமுடியும்.

மிகவும் ஒருங்கிணைக்கப்பட்ட கட்டுப்பாட்டுடன் உள்ளன பல மக்கள் நாம் நடத்தும் பயிற்சிகளுக்கு, நிகழ்ச்சிகளுக்கு தவறாமல் வருவதுண்டு. ஆனால், அவர்களுக்கு எதுவுமே நடப்பதில்லை.

(தொடரும்)

சத்குரு ஜக்கி வாசுதேவ்

# வரலாறு, அரசியல், சமூகநிலை பாடிநிற்கும் மலையகத் தமிழர் நாட்டுப்புறப் பாடல்கள் 01

இன்றைய நவீன இலக்கிய உலகில் அனைத்து மொழிகளிலும் முதுமை இலக்கியம் எனும் நாட்டுப்புற இலக்கியங்களைத் தேடும் முயற்சிகள் ஆர்வத்துடன் எடுக்கப்படுகின்றன. அவ்வாறு கிடைக்கப்பெறும் இலக்கியங்களில் மிதமாகப் பாடல் இலக்கியங்களே தென்படுகின்றன. ஒவ்வொரு மொழியின் இலக்கியப் பெறுமதிக்கு நாட்டார் இலக்கியங்களே வலுவூட்டுகின்றன என்ற ஒத்த கருத்து அனைத்து ஆய்வாளர்கள் மத்தியிலும் நிலவுவதை அவதானிக்க முடிகிறது.

இன்று இலக்கியவாதிகளின் வலியுறுத்தல்களால் கல்வித்துறையினர் கிராமிய இலக்கியங்களில் ஆய்வுகள் மேற்கொள்வதற்கு ஆர்வம் காட்டி வருகின்றனர். பாடசாலை மட்டத்திலும், பல்கலைக் கழகங்கள் மட்டத்திலும் மாணவர்களின் கற்றலும் ஆய்வுகளும் நாட்டார் இலக்கியங்களை மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்தி வருகின்றன.

நாட்டார் இலக்கிய வளர்ச்சிக் காலம் இந்தியாவில் 1800 ஆம் ஆண்டிலிருந்து தொடங்கியதாக ஆய்வுகள் கூறுகின்றன. 1950 களின் மக்கள் - மத்தியில் நாட்டார் இலக்கியம் ஆர்வத்தோடு அறிமுகமாகினர. இந்தியப் பல்கலைக்கழகங்களில் கூட 1970 களிலிருந்தே நாட்டுப்புறக் கலை இலக்கியங்கள் பற்றிய பாடநெறி ஆரம்பமாகியதென்கின்றனர். இலங்கையில் தமிழர் நாட்டாரியல் சம்பந்தமான ஆய்வு முயற்சிகள் 1875 ஆம் ஆண்டளவில் மேற்கொள்ளப்பட்டதாக அறிகின்றோம். 1980 ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக் கழக தமிழ்த் துறையினர் நாட்டுப்புறவியல் பற்றிய ஆய்வு முயற்சிகளை மேற்கொண்டனர்.

அதன் பின்னர் 1993 ஆம் ஆண்டு இலங்கைத் தமிழ் சாகித்திய விழாவினை ஒட்டி இந்து கலாசார திணைக்களம் இலங்கைத் தமிழர் நாட்டார் வழக்காறுகள் பற்றிய கருத்தரங்கு நிகழ்வொன்றை மிகவும் சிறப்பாக நடத்தியமை குறிப்பிடத் தக்கது.

நாட்டார் கலை, இலக்கியங்களில் பாடல்கள், கவிதைகள், பழமொழிகள், விடுகதைகள், கிண்டல், கேலி, நையாண்டி உரையாடல்ளும் சேர்ந்திட, நாட்டுப்புறக் கலைகள் என்றும், சபைக் கூத்துக்கள், தெருக்கூத்துக்கள், ஆட்டங்கள், வீரவிளையாட்டுக்கள், சித்திரங்கள், சிலைகள், வீட்டுப் பாவனைப் பொருட்கள் என்னும் காட்சிப் பொருட்களும் இணைகின்றன. நாட்டு மருத்துவங்களும், மருந்துகளும் கூட நாட்டாரியலோடு சம்பந்தப்படுகின்றன.

இவ்வாறான நாட்டுப்புற அம்சங்கள் இலங்கையின் பிரதேசங்களுக்கேற்ப வேறுபட்டு நிற்கின்றன. தமிழ் முஸ்லிம் மக்களிடையே சமய, கலாசார வேறுபாடுகள் இருப்பினும், கிராமிய இலக்கியங்களில் ஒருமித்த தன்மைகள் காணப்படுவதை அவதானிக்கலாம்.

**"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை"**

வயல்வெளி வேலைத் தளங்களை ஒட்டிய இடங்களில் மகிழ்ச்சி, குதூகலம் பற்றிய பாடல்களும் ஆண், பெண் இவர்களுக்கிடையில் ஏற்படும் காதல் பற்றிய பாடல்களும் மிகையாகவே காணப்படுகின்றன. விவசாய நிலங்களில் குறிப்பாக நெல்வயல்களில் நாற்று நடுதல், ஏரோட்டுதல், அறுவடைக் காலங்களில் சூடுபிடித்தல், பரம்படித்தல் போன்ற தொழில் நேரங்களில் களைப்பைப் போக்கும் கிண்டல், கேளிக்கை குறும்புக்குரிய பாடல் பிரயோகங்கள் வழக்கத்தில் இருந்து வந்துள்ளன். இவைகளுக் கப்பால், தாலாட்டு, கடவுள் பாட்டு, சமய சடங்குப் பாடலல்கள், பிரார்ததனைப் பாடல்கள், ஒப்பாரிப் பாடல்கள் என்றும் விரிவடைகின்றன.

மலையகத் தமிழ் மக்களின் நாட்டுப்புறப்பாடல்கள் மேற்காட்டிய பொதுத் தன்மைகளுக்கப்பால், மிகமிக வேறுபாடுகள் அமைந்த பாடல்களையும் கொண்டுள்ளமை இங்கு குறிப்பிடத் தக்கது.

மலையகத் தமிழர்கள் தென்னிந்திய பூர்வீகத் தமிழ்க் குடிகளாவர். தொழில் நிமித்தம் 19 ஆம் நூற்றாண்டின் முதல் பகுதியில் இலங்கைக்குப் புலம் பெயர்ந்தவர்கள். இலங்கை சுதேசிய மக்களின் பாரம்பரிய கிராமிய குடிசைத் தொழிலுக்கப்பால், மரபு ரீதியான விவசாயம், கால்நடைத் தொழிலுக்கப்பால் பணப்பயிர் ஏற்றுமதி விவசாயம் என்னும் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுவதற்கென, வந்தேறு குடிகளாக பிரித்தானிய வெள்ளையர்களால், அழைத்து வரப்பட்டவர்கள். இந்தப் புறச் சூழலில் இங்கு குடியேறிய மக்கள் தாங்கள் அனுபவித்த, முகம் கொடுத்த துயரங்களைப் புலம்பல், அழுகை, குமுறல் என தங்களது உணர்ச்சிப் பிரவாகங்களை வெளிக் காட்டியமையே, பாடல்களாகத் தென்பட்டன. மகிழ்ச்சி, குதூகலத்துக்குரிய பாடல்கள் மிகமிகத் தாமதமாகவே இவர்கள் மத்தியில் பாடப்பட்டன.

இலங்கையின் ஏனைய பிரதேசப் பாடல்களைப் போலல்லாது, மலையகப் பாடல்கள் சில படிமுறைகளைக் கொண்டுள்ளன. அப்பாடல்கள் அனைத்தும் சமூகம், அரசியல், வரலாற்று என்று ஒவ்வொரு பிரிவாக தங்களது வாழ்வியலைப் பாடி நிற்கின்றன.


இலங்கைக்கான அவர்களது ஆரம்ப வருகை, அந்த ஆரம்பப் பயணத்தில் அனுபவித்த துயரங்கள் -கால்நடை, தொடர்ந்து காட்டு வழிப்பயணத்தில் மடிந்து போன உயிர்கள், கடல் வழிப்பயணத்தில் கவிழ்ந்துபோன உயிர்கள், மீண்டும் இலங்கை கரையேறி தலைமன்னார் தொடக்கம் மாத்தளை வரையிலான நான்கு மாதங்கள் காட்டுக்குள்ளேயே நடந்த பயணம்... பாதிப் பயணத்தின்போதே பாதி உயிர்கள் மடிந்து போன சம்பவங்கள்......

(தொடரும்)

மு.சிவலிங்கம்

# யுத்தம் முடிவுற்ற போதிலும் தமிழ் கைதிகளுக்கு விமோசனம் இல்லை

## எதிர்ப்புக் கூட்டத்தில் கலந்து கொள்ள அழைக்கிறார் திஸ்ஸ அத்தநாயக்க



(கொழும்பு)

**நாட்டை சீரழித்து பொதுமக்களை படுபாதாளத்தில் தள்ளும் அரசாங்கத்தின் ஜனநாயக விரோதப் போக்கை தொடர்ந்தும் அனுமதிக்க முடியாது. இதனால் கட்சிபேதங்களை மறந்து எதிர்ப்புக் கூட்டத்தில் அனைவரும் பங்குபற்ற வேண்டும் என அக்கட்சியின் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை உட்பட நான்கு கோரிக்கைகளை முன் வைத்து ஐக்கிய தேசியக் கட்சியினால் இன்றைய தினம் கொழும்பில் நடத்தப்படவுள்ள எதிர்ப்புக் கூட்டத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர்கள் உட்பட பல்வேறு கட்சிகள் மற்றும் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்துகொள்வார்கள் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு இவ் எதிர்ப்புக் கூட்டம் கொழும்பு ஹைட்பாக் மைதானத்தில் இன்று செவ்வாய்க்கிழமை நடத்தப் போவதாக ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்ததுடன் இந்த கூட்டத்தில் பங்கேற்குமாறு ஏனைய கட்சிகளுக்கும் அமைப்புக்களும் அழைப்பு விடுத்திருந்தது.

இந்த நிலையில் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை மற்றும் இனப்பிரச்சினை தீர்வு இழுத்தடிக்கப்படுதல் போன்ற விடயங்களும் எதிர்ப்புக் கூட்டத்திற்கான காரணங்களில் உள்ளடக்கப்பட வேண்டுமென்று மனோ கணேசன் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையிடம் கோரியிருந்தார்.

இந்தக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டால் ஜனநாயக மக்கள் முன்னணியும் எதிர்ப்புக் கூட்டத்தில் பங்கேற்குமென்று அவர் சுட்டிக் காட்டியிருந்தார்.

இன்றைய தினம் நடைபெறவுள்ள எதிர்ப்புக் கூட்டம் தொடர்பில் ஐ.தே.க.வின் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க மேலும் தெரிவித்ததாவது,

அரசியல் கைதிகளின் விவகாரம் நாட்டில் மேலோங்கியுள்ளது. உள்நாட்டு யுத்தம் முடிவடைந்த நிலையிலும் தமிழ் அரசியல் கைதிகள் எவ்விதமான விசாரணைகளும் இன்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அதைவிட அரசை விமர்சிப்பவர்கள் அரசியல் ரீதியாக பழிவாங்கப்பட்டு சிறை வைக்கப்படுகின்றனர். குறிப்பாக முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் சிறை வைப்பானது அரசின் தனிப்பட்ட பழிவாங்கலேயாகும்.

அதேபோன்று தான் புதிய பறிமுதல் சட்ட மூலத்தின் ஊடாக பொதுமக்களின் சொத்துக்களை கொள்ளையடிக்கும் நடவடிக்கையில் அரசாங்கம் இறங்கியுள்ளது.

நஷ்டத்தில் இயங்கும் நிறுவனங்களை பறிமுதல் செய்து அவற்றை இலாபம் ஈட்டும் நிறுவனங்களாக்கப் போவதாக அரசு கூறுகின்றமை வேடிக்கையாக உள்ளது.

ஏனென்றால் இன்று மின்சார சபை, போக்குவரத்து மற்றும் புகையிரதம் உட்பட இன்னோரன்ன அரச நிறுவனங்கள் பாரிய நட்டத்தில் இயங்குகின்றன.

இவற்றையே முறையாக நிர்வகித்துக் கொள்ள முடியாத அரசு எவ்வாறு தனியார் நிறுவனங்களை பாதுகாக்க போகின்றது. எனவே அரசாங்கம் போலித்தனமான காரணங்களைக் கூறி பொது மக்களை வதைக்கின்றது.

வரவு செலவுத் திட்டமென்ற பெயரில் நாட்டு மக்களின் நிவாரண உதவிகளை அரசாங்கம் சூறையாடியுள்ளது.

சர்வதேசத்திற்கு அடிபணியப்போவதில்லை என்று கூறிய அரசாங்கம் இன்று சர்வதேச நாணய நிதியத்தின் முன் மண்டியிட்டுள்ளது. வரவு செலவுத்திட்டத்தில் பொதுமக்களுக்கான நிவாரணங்களை குறைப்பதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளே பிரதான காரணமாகும்.

தொடர்ந்து ஏனைய அரசியல் கட்சிகளுடன் இணைந்து நாடுதழுவிய ரீதியில் போராட்டங்களை முன்னெடுப்போம் என்றார். (அ-2)

## தெற்கு அதிவேக நெடுஞ்சாலை திறப்புக்கு பல்கலை மாணவர்கள் பலவந்தமாக அழைப்பு

(கொழும்பு)

தெற்கு அதிவேக வீதி அங்குரார்ப்பண வைபவத்திற்கு பல்கலைக்கழக மாணவர்கள் பலவந்தமாக அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர் என அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் அமைப்பாளர் சஞ்சீவ பண்டார தெரிவித்துள்ளார்.

அரசியல் தேவைகளுக்காக பாடசாலை மாணவர்கள் ஈடுபடுத்தப்படுவதனைப் போன்று பல்கலைக்கழக மாணவர்களையும் பயன்படுத்த முயற்சிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

முதலாம் ஆண்டு மாணவர்களுக்கும் சிரேஷ்ட மாணவர்களுக்கும் இடையில் தொடர்புகள் ஏற்படுத்திக் கொள்வதனை அரசாங்கம் தடுத்து வருகின்றது.

ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் சில பீடங்களைச் சேர்ந்த மாணவ, மாணவியர் பலவந்தமாக தெற்கு அதிவேக வீதி அங்குரார்ப்பண வைபவத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். (அ-2)

## நாட்டின் கடன்சுமை வெகுவாக அதிகரிப்பு

### விமல்வீரவன்ச தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டின் கடன் சுமை வெகுவாக அதிகரித்துள்ளது என அரசாங்கத்தின் பங்காளி கட்சியான தேசிய சுதந்திரக் கூட்டமைப்பின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

அண்மையில் ஜனாதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத்திட்ட யோசனையில் கடன் சுமையை குறைப்பதற்கு ஏதேனும் திட்டங்கள் முன்வைக்கப்பட்டனவா? இது தொடர்பில் எதிர்க்கட்சிகளும் கவனம் செலுத்தவில்லை.

நாட்டின் மொத்தக் கடன்சுமை 5 ஆயிரம் பில்லியன் ரூபாவை அண்மித்துள்ளது. 70களில் மொத்தக் கடன் சுமை 22 பில்லியன் ரூபாவாக காணப்பட்டது. இதேவேளை சுற்றுலாப் பயணிகளின் வருகை தொடர்பில் மகிழ்ச்சி வெளியிடப்பட்டுள்ளது. எனினும் இலங்கைக்கு விஜயம் செய்யும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் தற்போது செலவு செய்வதில்லை.

அவர்களை விடவும் இலங்கை சுற்றுலாப் பயணிகள் அதிகளவில் செலவு செய்கின்றனர். சுற்றுலாப் பயணிகளுக்கு மலர்மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்ட போதிலும் நாட்டின் கடன் சுமையை குறைப்பது எவ்வாறு என்பது பற்றி எதிர்க்கட்சி கூட கவனம் செலுத்துவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## இலங்கையில் கடத்தல் மற்றும் காணாமல்போதல்கள் அதிகரிப்பு

### ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கையில் கடத்தல் மற்றும் காணாமற் போதல் சம்பவங்கள் அதிகரித்துள்ளதென ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

அண்மைக்காலமாக நாட்டில் இடம்பெற்ற சம்பவங்களை ஆராய்ந்த போது இந்த விடயம் உறுதி செய்யப்பட்டதாக ஆணைக் குழுவின் கொள்கை வகுப்பு பிரிவின் பணிப்பாளர் பசில் பெர்னான்டோ தெரிவித்துள்ளார்.

மக்களைப் பாதுகாக்கும் பொறுப்பிலிருந்து அரசாங்கம் விலகிச் சென்றுள்ளதாக அவர் கூறினார்.

இலங்கையில் சட்டத்தைப் பாதுகாக்கும் தொடர்பில் அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படவில்லை என்பதையே கடத்தல் மற்றும் காணாமல் போதல் சம்பவங்களின் அதிகரிப்பு உணர்த்துவதாக தெரிவிக்கப்படுகின்றது.

காணாமல்போதல் என்பது மிகவும் பாரதூரமான குற்றச் செயலாகும் என தெரிவித்த ஆணைக்குழுவின் கொள்கை வகுப்புப் பிரிவின் பணிப்பாளர் உலகின் அநேகமான நாடுகளில் இது இடம்பெறுவதில்லை என கூறினார்.

சட்டம் உரிய முறையில் நடைமுறைப் படுத்தப்படாததே கடத்தல் மற்றும் காணாமற் போதல் சம்பவங்கள் அதிகரிப்பதற்கு காரணமாகும் என அவர் மேலும் தெரிவிக்கின்றார்.

இது தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவிக்கையில்,

2009 ஆம் ஆண்டு முதல் கடந்த 22 ஆம் திகதி வரை சுமார் 100 கடத்தல் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக கூறினார்.

கடத்தப்பட்டவர்களில் 26 பேரை தவிர ஏனையவர்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

ஏனையவர்களை கண்டுபிடிப்பதற்கான விசாரணைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுவதாக அவர் மேலும் தெரிவிக்கின்றார். (அ-2)

## இந்திய வீடமைப்பின் தாமதத்திற்கு இலங்கை அமைச்சர்களே காரணம்

### பாராளுமன்ற உறுப்பினர் சம்பந்தன்

(கொழும்பு)

இந்தியா, வடக்கு-கிழக்கில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான 50 ஆயிரம் வீடுகளை அமைப்பதில் தாமதம் ஏற்பட்டமைக்கு இலங்கையின் அமைச்சர்கள் காரணம் என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர். சம்பந்தன் குற்றச்சாட்டை சுமத்தியுள்ளார்.

வடக்கிலும் கிழக்கிலும் வீடில்லாதோருக்கு 50 ஆயிரம் வீடுகளை கட்டித்தருவதாக இந்தியா உறுதியளித்திருந்தது. எனினும் உறுதியளித்த காலப்பகுதிக்குள் இன்று வரை 50 வீடுகளே கட்டப்பட்டுள்ளன.

பயனாளிகள் தொடர்பில் இலங்கையின் அமைச்சர்கள் தமக்கு தேவையானவர்களுக்கு முன்னுரிமை வழங்கி பாதிக்கப்பட்டவர்களை புறக்கணித்துள்ளனர்.

எனவே தான் இந்தத் திட்டம் தாமதமாகியதாக அண்மையில் இலங்கைக்கு சென்றிருந்த இந்திய வெளியுறவு செயலாளரிடமும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இந்திய திட்டத்தின் கீழ் சுமார் ஆயிரம் வீடுகள் எதிர்வரும் வருட ஆரம்பத்தில் பயனாளிகளுக்கு கையளிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

எஞ்சிய வீடுகள் பயனாளிகளுக்கு நிதியுதவி வழங்கப்பட்டு அதன்மூலம் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் தொடர்பில் விசாரணை வேண்டும்

## சர்வதேசத்தின் கவனத்தை ஈர்ப்பதற்கு நடவடிக்கை என்கிறார் ஜயலத்



தமிழ் அரசியல் கைதிகள் மற்றும் சரணடைந்த புலி உறுப்பினர்கள் தொடர்பான அரசாங்கத்தின் அக்கறையீனங்கள் தொடர்பில் சர்வதேச மன்னிப்பு சபை, சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் மற்றும் சர்வதேச ஜூரிகள் சபை ஆகியவற்றின் கவனத்தை ஈர்ப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக அக்கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன எம்.பி.தெரிவித்தார்.

சமாதானம் மலர்ந்திருக்கின்றதாக அரசாங்கம் கூறுகின்ற நிலையில் சிறைப்பட்டிருக்கின்ற தமிழ் இளைஞர்கள் தொடர்பில் விசாரணைகள் இழுத்தடிக்கப்பட்டு காலம் கடத்தப்படுகின்றமை எதற்காக? இதன் நோக்கம் தான் என்ன என்றும் ஜயலத் எம்.பி. கேள்வியெழுப்பினார்.

தமிழ் அரசியல் கைதிகள் மற்றும் இறுதிக்கட்ட யுத்தத்தின்போது சரணடைந்த புலி உறுப்பினர்களின் நிலைமைகள் குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

2009 மே 18 ஆம் திகதி யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதையடுத்து நாட்டில் சமாதானம் மலர்ந்துவிட்டதாக அரசாங்கம் கூறுகின்றது. ஆனாலும் அரசியல் கைதிகள் தொடர்பிலோ தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ள 7 ஆயிரம் புலி உறுப்பினர்கள் குறித்தோ சாதகமான எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை.

அரசியல் கைதிகளாக சிறையில் இருக்கின்ற தமிழ் இளைஞர், யுவதிகள் குற்ற வாளிகளாக இனம்காணப்படவில்லை. அவர்கள் மீது வழக்குகளும் தொடரப்படவில்லை. 10 வருடங்களுக்கும் மேலாக இவர்கள் நரக வேதனை அனுபவித்து வருவதுடன் தமது வாழ்க்கை, எதிர்காலம், உறவுகளுடனான அந்நியோன்யம் உள்ளிட்ட சகலதையும் இழந்து நிற்கின்றனர்.

இந்த அரசியல் கைதிகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு சட்டமா அதிபர் திணைக்களத்துடன் நான் நேரடியாக தொடர்புகளை ஏற்படுத்தியிருந்தேன். எதுவும் நடைபெறவில்லை.

மேலும் தற்போது யுத்தமோ பாதுகாப்பு அச்சுறுத்தல்களோ இல்லை. எனவே நாட்டின் எப்பகுதிக்கும், சென்று விசாரணைகளை மேற்கொள்ள முடியும்.

தமது பிள்ளைகள் உயிருடன்தான் இருக்கின்றனரா என்ற தகவல்களை அறிந்து கொள்வதற்கு பெற்றோருக்கும் முடியாதிருக்கின்றது. இதனால் தமது பிள்ளைகளைத் தேடி பெற்றோர், சகோதரர்கள் அலைந்து திரிகின்ற நிலைமை அதிகரித்திருக்கின்றது.

இவ்வாறான விடயங்கள் சமாதானம் மலர்ந்துள்ளதாகவும் சுதந்திரம்-உரிமை ஆகியவை பெற்றுக் கொடுக்கப்பட்டிருப்பதாகவும் கூறுகின்ற நாட்டில் இருக்க முடியாது.

சகலரும் சமமாக பேணப்படுதல் வேண்டும் என்கின்ற அதேவேளை யுத்தம் நிறைவடைந்து இரண்டரை வருடங்களை எட்டியிருக்கின்ற நிலையில் சந்தேகநபர்கள் என அழைக்கப்படுகின்ற தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பில் அரசாங்கம் உடனடியா கநடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும் என்றார். (அ-2)

# மட்டு. மாவட்டத்தில் நெற்செய்கை பாதிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் மழை காரணமாக பெரும்போக நெற்செய்கை மற்றும் சிறுதானியப் பயிர்ச்செய்கை என்பன பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் 50 ஆயிரம் ஏக்கர் நெற்செய்கை வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாக மாவட்ட கமநலஅபிவிருத்தி திணைக்கள உதவி பணிப்பாளர் தெரிவித்தார்.

பெரும்போக விதைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு சில தினங்களில் இவ்வெள்ளம் ஏற்பட்டுள்ளது. தொடர்ந்து குடலைப்பருவ நெற்பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கி இருப்பதால் அவைகள் அழிந்து விடும் அபாயம் உள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

வாகனேரி, வெல்லாவெளி, கொக்கட்டிச்சோலை, வவுணதீவு, செங்கலடி, கிரான் மற்றும் வாகரை ஆகிய பகுதிகளில் ஒரு இலட்சத்து 70 ஆயிரம் ஏக்கரில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (அ-2)

# மருந்துப் பொருட்களை உள்நாட்டில் உற்பத்தி செய்ய திட்டம்-மைத்திரிபால

(கொழும்பு)

நாட்டிற்கு தேவையான மருந்துப் பொருட்களை நாட்டுக்குள்ளேயே தயாரிக்க புதிய வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படும் என சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஜப்பானின் ஜெய்க்கா முகவரகத்தின் உதவியுடன் குறித்த வேலைத்திட்டம் அடுத்த வாரத்தில் ஆரம்பிக்கப்படும் என தெரிவித்துள்ள அமைச்சர் இதன்மூலம் அரசு மருந்தாக்க கூட்டுத்தாபனத்தின் உற்பத்திகள் அதிகரிக்கப்படும் என அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

அரசு மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் மூலம் 50 வர்க்க மருந்துகளும் தனியார் நிறுவனங்களால் 40 மருந்துகளும் தற்போது தயாரிக்கப்படுகின்றன.

இத்தயாரிப்புக்களை அதிகரிக்கவே புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இதற்கான பிரத்தியேக கைத்தொழில் வலயத்தை நிறுவ அரசு திட்டமிட்டுள்ளது. இதற்கான அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதுடன் குருநாகலில் 48 ஏக்கர் நிலப்பரப்பும் இனங்காணப்பட்டுள்ளது. (அ-2)

# சட்டத்துறை கற்கைநெறிக்கு விண்ணப்பம் கோரல்

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் 2012/2013 ஆம் கல்வி ஆண்டுக்கான சட்டத்துறை கற்கைநெறிக்காக விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பங்கள் யாவும் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன என திறந்த பல்கலைக்கழகத்தின் பழைய மாணவர் சங்கப் பிரதிநிதி சட்டத்தரணி தெரிவித்தார். ஏற்கனவே இக்கற்கைநெறிக்கான விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித்தினம் டிசெம்பர் 18 என குறிப்பிடப்பட்ட போதிலும் நாடுதழுவிய விண்ணப்பதாரர்களின் நலன்கருதி இத்தினம் டிசெம்பர் 24 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இக்கற்கைநெறிக்கான தெரிவுப் பரீட்சை ஜனவரி 14 இல் நடைபெறுவதற்கான உத்தேச தினம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

இக்கற்கை நெறிக்கான அனுமதிப்பரீட்சை வழிகாட்டற் கருத்தரங்கு வழமை போன்று இம்முறையும் பல்கலைக்கழக பழைய மாணவர்களால் நடத்தப்படவுள்ளன.

இக் கருத்தரங்கு வடமாகாண விண்ணப்பதாரர்களுக்கு டிசெம்பர் 24 ஆம் திகதி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும், கிழக்கு மாகாண விண்ணப்பதாரிகளுக்கு டிசெம்பர் 31 ஆம் திகதி அக்கரைப்பற்றிலும் நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இக்கற்கைநெறிக்கான விண்ணப்பப் படிவங்களை இலங்கை திறந்த பல்கலைக் கழக நாவல தலைமைக் காரியாலயத்திலும் மற்றும் பிராந்திய ரீதியில் நிறுவப்பட்டுள்ள கற்கை நிலையங்களிலும் பெற்றுக் கொள்ள முடியும். (அ-2)



உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு யுவர் பிரண்ட்பௌண்டேசன் நடத்திய சிறுவர் தின போட்டி யில் கிளிநொச்சி வட்டக்கச்சி மகாவித்தியாலய உயர்தர கலைப்பிரிவு மாணவி இ.சிந்துகேஜா மேற்பரிவில் முதலாமிடம் பெற்றமைக்கான சான்றிதழுடன் நிற்பதையும் மற்றும் பயிற்றுவித்த ஆசிரியர், பாடசாலை அதிபர், உப அதிபர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.(படம்:-வட்டக்கச்சி செய்தியாளர்)

# தேசிய கீதத்தை இசைவடிவத்தின் மூலம் தமது மொழிகளில் பாடமுடியும்

## அமைச்சர் வாசுதேவ கூறுகிறார்

(கொழும்பு)

தேசியகீதத்தை இசைவடிவத்தில் இசைப்பதன் மூலம் அவரவர்கள் தத்தமது மொழியிலேயே தேசியகீதத்தை பாடமுடியும் என ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் அமைச்சருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், எதிர்வரும் வாரத்தில் தமிழ், முஸ்லிம், சிங்கள மாணவர்களுக்கிடையே கலை, கலாசார, கட்டுரைப் போட்டிகளை நடத்த எமது அமைச்சு ஏற்பாடு செய்துள்ளது. இதன் போது தேசியகீதத்தின் இசை மட்டுமே இசைக்கப்படும்.

அதன்போது தமிழ், முஸ்லிம் பிள்ளைகள் தமிழ்மொழியிலும் சிங்களப் பிள்ளைகள் சிங்கள மொழியிலும் தேசிய கீதத்தினை பாடக்கூடியதாக இருக்கும்.

இதுவொரு பரீட்சார்த்த நடவடிக்கையாகும். அத்தோடு இதன் போது தத்தமது தாய் மொழியை பயன்படுத்தும் நிலைமை உருவாகும். இந்தியாவின் ஆட்சி மொழி ஹிந்தி மொழியாக இருந்தபோதும் தேசியகீதம் வங்காளி மொழியிலேயே இயற்றப்பட்டுபாடப்படுகிறது.

எமது நாட்டில் இது தொடர்பில் சிலர் தெளிவில்லாத கருத்துக்களை வெளியிடுகின்றனர். இலங்கையில் தேசியகீதத்தை தமிழில் பாடுவதற்கு எவ்விதமான தடையுமில்லை.

எனவே தேசியகீதத்தை தமிழில் பாடுவதை தடுத்து நிறுத்துவது எமது நாட்டின் அரசியலமைப்பை மீறும் செயலாகும் எனவும் கூறியுள்ளார். (அ-2)

# 78 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாயுடன் நைஜீரிய பிரஜை கைதானார்

(கொழும்பு)

நைஜீரிய பிரஜையொருவர் 78 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாயுடன் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

டுபாயிலிருந்து நேற்று முன்தினம் இரவு 8.20 மணியளவில் எமிரேட்ஸ் விமானத்தில் வந்த மேற்படி நபர் இந்தப் பணத்தொகையை கொண்டு வந்ததாகவும் இது தொடர்பில் சுங்கத் திணைக்கள அதிகாரிகளுக்கு அறிவிக்காமல் இருந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மாலேபேயில் இயங்கும் தனியார் மருத்துவ பல்கலைக்கழகத்திற்கு இந்தப் பணத்தொகையைத் தான் கொண்டு வந்ததாக ஆரம்பகட்ட விசாரணையின் போது அவர் தெரிவித்துள்ளதுடன் இதுதொடர்பான மேலதிகவிசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (அ-2)

# கனிமொழி இனி...

கனிமொழி கைது செய்யப்பட்டு ஆறு மாதங்கள் கடந்து விட்டன. திஹார் சிறையில் இருந்து அவரை வெளிக் கொண்டுவர தி.மு.க தரப்பில் எடுக்கப் பட்ட முயற்சிகள் எதுவும் பலன் தரவில்லை. இந்த நிலையில் 2ஜி வழிக்கில் ஐந்து பேருக்கு அளிக் கப்பட்ட ஜாமீன் கனி மொழிக்கு



## தமிழகப் பார்வை

சிறு நம்பிக்கையை அளித் துள்ளது.

2ஜி அலைவரிசை ஒதுக்கீடு வழக்கின் விசாரணை பாட்டியாலா நீதிமன்றத்தில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்த வழக்கில் முதல் முறையாக கடந்த 23 ஆம் திகதி ஐந்து பேருக்கு ஜாமீன் வழங்கியிருக்கிறது உச்சநீதி மன்றம். அனில் அம்பானி தலைமையிலான ஏ.டி. ஏ.ஜி.நிறுவனத்தின் மூத்த அதிகாரிகளான கௌதம் தோசி, ஹரிநாயர், சுரேந்திர பிப்பாரா, யூனிடெக் வயர்லஸ் (தமிழ்நாடு) நிறுவனத்தின் தலைவர் சஞ்சய் சந்திரா மற்றும் ஸ்வான் டெலிகாம் நிறுவனத்தின் டைரக்டர் வினோத் கோயங்கா ஆகியோருக்கு உச்சநீதிமன்றம் கடந்த புதன்கிழமை காலை ஜாமின் வழங்குவதாக அறிவித்தது. தலா 5 இலட்சம் ரூபாய் சொந்த ஜாமீன் தொகையாகச் செலுத்தச் சொல்லி இதை வழங்குவதாக உச்சநீதிமன்றம் அறிவித்தது.

2ஜி அலை வரிசை ஒதுக்கீடு வழக்கு விசாரணை வழக்கம்போல பாட்டியாலா நீதிமன்ற வளாகத்தில் உள்ள சி.பி.ஐ சிறப்பு நீதிமன்றத்தில் கடந்த 23 ஆந் திகதி நடைபெற்று வந்தது. காலை 10.40 மணிக்கு உச்ச நீதிமன்றம் ஜாமீன் அளித்துள்ள விவகாரங்கள் தொலைபேசி மூலம் தெரிவிக்கப் பட்டது. நீதிமன்ற நடவடிக்கை நடைபெற்றுக் கொண்டிருந்த நிலையில் ஜாமீன் பெற்றவர்களின் உறவினர்கள் அமர்ந்திருந்த இடத்துக்குச் சென்று வாழ்த்துக்களைத் தெரிவித்த வண்ணம் இருந் தனர்.

இதனால், நீதிமன்ற நடவடிக்கைகளில் இடையூறு ஏற்பட்டது. இதனால் கோபம் அடைந்த நீதிபதி ஷைனி வழக்கில் குற்றம் சாட்டப் பட்டவர்கள், அவர்களது வழக்கறிஞர்கள், பத்திரிகையாளர்கள் என் அனைவரையும் வழக்கு விசாரணை நடைபெறும் இடத்தில் இருந்து வெளியேறச் சொன்னார்.

2ஜி வழக்கில் முதல் முறையாக ஜாமீன் வழங்கப்பட்டிருப்பது, அந்த வழக்கில் குற்றம் சாட்டப் பட்ட அனைவருக்கும் மகிழ்ச்சியை அளித்துள்ளது. குறிப்பாக கனி மொழி தரப்பில் கொஞ்சம் உற்சாகம் அடைந்திருக்கிறார்கள். பாட்டியாலா நீதிமன்றம், டெல்லி உயர் நீதிமன்றம், உச்சநீதிமன்றம் என எல்லா நீதிமன்றங்களும் அவருக்கு ஜாமீன் மறுத்த நிலையில் கனிமொழியின் ஜாமீன் மனு மறுபடியும் டெல்லி உயர் நீதிமன்றத்தில் எதிர்வரும் டிசம்பர் 1ஆம் திகதி விசாரணைக்கு வருவதாக இருந்தது.

ஐந்து பேருக்கு ஜாமீன் கொடுக் கப்பட்டதும். டெல்லி தி.மு.க. எம்.பி.க்களிடம் பேசி இருக்கிறார் கருணாநிதி. அவர்கள் கனிமொழியின் ஜாமீன் மனுவை முன்னதாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளும் நடவடிக்கைகளில் இறங்கினார்கள். இதையடுத்து கனிமொழி ஜாமீன் தொடர்பான விசாரணை டெல்லி உயர் நீதிமன்றத்தில் வியாழக் கிழமை நடந்தது.


ஐந்து பேருக்கு உச்சநீதிமன்றம் ஜாமீன் வழங்கிய செய்தி பரவியதும் டெல்லியில் இருந்த தி.மு.க வின் எம்.பி.க்கள் பாட்டியாலா நீதிமன்ற வளாகத்திற்கு விரைந்த வந்து கனிமொழியைச் சந்தித்தனர். விரைவில் கனிமொழிக்கு ஜாமீன் கிடைத்து விடும் என அவர்கள் வாழ்த்து தெரிவிக்க கனிமொழி அமைதியாக அனைவரின் வாழ்த்துக்களையும் பெற்றுக்கொண்டார்.

தி.மு.க.நாடாளுமன்ற உறுப் பினர் டி.ஆர்.பாலு கனிமொழியைச் சந்தித்தபின்னர் “இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட ஐந்து பேருக்கு உச்சநீதிமன்றம் ஜாமீன் வழங்கியிருப்பது. இந்த வழிக்கில் நீதிமன்றத்தில் இறுக்கம் தளர்ந்து வருவதைக் காட்டுகிறது” என்று நம்பிக்கையோடு செய்தியாளர்களிடம் பேசினார்.

கனிமொழி ஜாமீன் தொடர்பாக சி.பி.ஐ. எதிர்ப்புத் தெரிவிக்காத நிலையிலும் அவருக்குத் தொடர்ந்து ஜாமீன் மறுக்கப்பட்டு வந்தது. உச்ச நீதிமன்றம் 2ஜி வழக்கு விசாரணையைத் தொடர்ந்த கவனித்து வரும் நிலையில் யாருக்காவது ஜாமீன் வழங்கினால் அது தனக்கு பாதிப்பை ஏற்படுத்தலாம் என்பதால் விசாரணை நீதிபதி ஓ.பி.ஷைனி ஜாமீன் வழங்க மறுத்தார் என்று கூறப்படுகிறது.

ஐந்து பேருக்கு ஜாமீன் வழங்கப் பட்ட செய்தி அறிந்ததும் பாட்டியாலா நீதிமன்ற வளாகத்தில் செய்தியாளர்கள் குவிந்தனர். வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் ஒருவருக்கொருவர் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டனர். முன்னாள் மத்திய அமைச்சர் ஆ.இராசாவுக்கு சிலர் வாழ்த்துத் தெரிவிக்க “நான்தான் ஜாமீன் கேட்கவேயில்லையே அப்புறம் எனக்கு எப்படி ஜாமீன் கிடைக்கும்” என சிரித்தார் அவர்.

இவையெல்லாம் தி.மு.க. தரப்புக்கு நம்பிக்கையூட்டிக் கொண்டிருந்த நிலையில் கனிமொழியின் ஜாமீன் மனு மீதான விசாரணை வெள்ளிக் கிழமையும் தொடரும் என நீதிபதி அறிவித்திருக்கிறார்.



சி.பி.ஐ.இடம் மேலும் சில விபரங்கள் தேவைப்படுவதால் விசாரணை தள்ளிப் போயிருக்கிறது.

கடந்த 3 ஆம் திகதி எப்படியும் கனிமொழிக்கு ஜாமீன் கிடைத்து விடும் என தி.மு.க. வினர் நம்பினார்கள். ஆனால், ஜாமீன் மறுக் கப்பட தி.மு.க.வினர் அதிர்ச்சியடைந்தனர். குறிப்பாக கருணாநிதி பெரும் அதிர்ச்சிக்கு ஆளானார். அதற்குப் பின் அவர் கட்சி நிகழ்ச்சிகள் எதிலும் கலந்து கொள்வதில் பெரிதாக ஆர்வம் காட்டவில்லை.

கனிமொழியின் திஹார் சிறை வாசம் அவருக்கு சிரமத்தைத் தந்திருந்தாலும் அரசியலில் அவருக்கு நல்ல எதிர்காலத்துக்கு இது வாய்ப்பளிக்கும் என நம்புகிறார் இராசாத்தி அம்மாள். சிறை வாழ்க்கைக்குப் பின் கனிமொழிக்கு கட்சியில் முக்கிய பொறுப்பு அளிக்கவேண்டும் என அவர் கருணாநிதியிடம் வற்புறுத்தி வருகிறார். கருணாநிதிக்கும் அந்த எண்ணம் இருப்பதாகவே தெரிகிறது.

“கலைஞர் டி.வி.கனிமொழிக்காக ஆரம்பிக்கலை கட்சிக் காகத் தானே ஆரம்பிச்சோம். கட்சிக்காக என் பொண்ணு சிறையில இருக்கா. என்னோட ஒரு வார்த்தைக்காக என் பொண்ணு அமைதியா சிறையில் எல்லாத் தையும் சகிச்சுக்கிட்டா. அவளுக்கு ஏதாவது செய்யணும்” என தன் னைச் சந்திக்க வரும் நண்பர்க ளிடம் மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டிருக்கிறார் கருணாநிதி.

“கனிமொழிக்கு ஆரம்பத்திலிருந்தே அரசியலில் பெரும் ஆர்வம் இருக்கவில்லை குடும்பத்தின் கட்டாயத்தால் தள்ளப் பட்டார் என்றே சொல்ல வேண்டும். ஆனால், இந்த சிறை வாழ்க்கை அவரது எண்ணத்தை மாற்றியிருக்கிறது. நல்லவர்கள் யார், கெட்டவர்கள் யார் என்பதை புரிந்து கொண்டார். அவர் வாய் திறந்தால் கட்சிக்குப் பல பிரச் சினைகக்கை கனிமொழியை பக்குவப்படுத்தியிருப்பதையே இது காட்டுடகிறது. இனி அவர் முழுமூச்சாக அரசியலில் இறங்குவார். தி.மு.க.வினரே இனி புதிய கனிமொழியைச் சந்திப்பார்கள்” என்கிறார் கனிமொழியின நண்பர் ஒருவர்.

ஆனால், கனிமொழிக்கு கட்சியில் முக்கிய பொறுப்பகைக் கொடுப்பது குடும்பத்திற்குள் எவ்வளவு பெரிய சிக்கலை ஏற்படுத்தும் என்பது கருணாநிதிக்குத் தெரியாதது அல்ல. கனிமொழி சிறையில் அடைக்கப்பட்டதும் குடும்பத்தினர் ஒவ்வொருவராகப் போய்ப் பார்த்ததும் பின்னர் கனிமொழி குடும்பத்தினரால் கண்டு கொள் ளப்படாமல் விடப்பட்டதும் கருணாநிதியை அதிகம் பாதித்தது. கூடவே இந்த வழக்குத்தொடர்பாக கனிமொழி நடந்துகொண்ட விதமும் அவரை ரொம்பவே நெகிழ வைத்துவிட்டதாம்.

சிறை வாழ்க்கை இப்போது வேண்டுமானால் கனிமொழிக்கு சிரமமாகத் தெரியலாம். ஆனால், அவரது அரசியல் எதிர்காலத்திற்கு இது மிகப் பெரிய வாய்ப்பு என்கிறார்கள் தி.மு.க.வினர். நடப்பதைப் பார்த்தால் அது உண்மையென்றே தெரிகிறது.

## அனர்த்தங்கள் குறித்து மக்களை தெளிவுபடுத்த தொலைபேசி சேவை ஆரம்பிக்க தீர்மானம்

### முகாமைத்துவ அமைச்சு

(கொழும்பு)

திடீர் அனர்த்தங்கள் தொடர்பாக பொதும்க்களை தெளிவுபடுத்துவதற்கு புதிய தொலைபேசி சேவையொன்றை ஆரம்பிப்பதற்கு அனர்த்த முகாமைத்துவ அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்தச் சேவையின் மூலம் நாட்டில் ஏற்படக்கூடிய அனர்த்தங்கள் தொடர்பில் உடனடியாக மக்கள் தெளிவூட்டப்படுவார்கள் என அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிக்கின்றார்.

அத்துடன் பொதுமக்கள், குறித்த தொலைபேசி இலக்கத்தின் ஊடாக தகவல்களை பெற்றுக் கொள்ளவும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிடுகின்றார்.

இடர் முகாமைத்துவ நிலையத்தினால் 4 இலக்கங்களைக் கொண்ட தொலைபேசி இலக்கமொன்றை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிடுகின்றார்.

குறித்த தொலைபேசி இலக்கத்திக் ஊடாக காலநிலை மற்றும் அனர்த்தங்கள் தொடர்பான உடனடித் தகவல்களை பொதுமக்கள் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு சுட்டிக்காட்டுகின்றது.

(அ-2)

## புனர்வாழ்வளிக்கப்பட்ட புலி உறுப்பினர்களின் விடுதலை செய்யும் நிகழ்வு ஒத்திவைப்பு

### சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு

(கொழும்பு)

புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்கள் ஒரு தொகுதியினரை விடுதலை செய்யும் நிகழ்வு தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்கள் 42 பேர் இன்றைய தினம் யாழ்ப்பாணத்தில் விடுதலை செய்யப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற கால நிலையினால் முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களை விடுதலை செய்யும் நிகழ்வு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகர் சதீஸ்குமார் தெரிவித்துள்ளார்.

இதன்படி இவர்களை எதிர்வரும் 10 ஆம் திகதி விடுதலை செய்ய தீர்மானித்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, எஞ்சியுள்ள 680 புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களை இந்த வருட இறுதிக்குள் விடுதலை செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## காணாமற்போன 40 மீனவர்களை தேடும் பணியில் கடற்படையினர்

(கொழும்பு)

சீரற்ற வானிலை நிலவியபோது காணாமற்போன 20 மீனவர்களை தேடும் நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக கடற்றொழில் திணைக்களம் தெரிவிக்கிறது.

கடற்படையினரின் ஒத்துழைப்புடன் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் லால் சில்வா தெரிவித்துள்ளார்.

சீரற்ற வானிலை நிலவியபோது கடலுக்குச் சென்றிருந்த 40 மீனவர்கள் காணாமல் போனதாகவும் அவர்களில் 12 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் வீசிய கடும் காற்றின்போது குறித்த மீனவர்கள் காணாமற்போயிருந்தனர். அத்துடன் சுமார் 20 மீன்பிடி படகுகளும் காணாமற்போயுள்ளதுடன் அவை முற்றாக சேதமடைந்துள்ளமையினால் அவற்றை கண்டுபிடிக்க இயலாமலுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(அ-2)

## உணவு விற்பனை நிலையங்களை தரப்படுத்தும் திட்டம்

### சுகாதார அமைச்சு தெரிவிப்பு

நேற்று முதல் உணவு விற்பனை நிலையங்களை தரப்படுத்தவுள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பாக திட்டம் நேற்று முதல்மூன்றுநாட்களுக்குநாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்படவுள்ளது.

மக்களின் பயன்பாட்டுக்கு ஒவ்வாத முறையில் உணவு விற்பனை செய்யப்படுவதாகவும் உணவு தயாரிக்கப்படுவதாகவும் கிடைத்துள்ள முறைப்பாடுகளுக்கு அமைய இந்தத் திட்டம் செயற்படுத் தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய பரிசோதனைக்குட்படுத்தப்படும் அனைத்து உணவு விற்பனை நிலையங்களும் A.B. C.D. என்ற அடிப்படையில் தரப்படுத்தப்படவுள்ளன.

இந்த வேலைத்திட்டத்தின் முதற்கட்டமாக பிரதான வீதியருகில் உள்ள ஹோட்டல்கள், தேநீர் கடைகள் மற்றும் வெதுப்பகங்கள் சோதனைக்கு உட்படுத்தப்படும் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. (அ-2)

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2011.11 29

★ 1781-கூலிகளை ஏற்றிச் சென்ற சொங் (Zong) என்ற கப்பல் மாலுமிகள் காப்புறுதிக்காக 133 ஆபிரிக்கர்களைக் கொன்று கடலுக்குள் எறிந்தனர்.

★ 1830-போலந்தில் ரஷ்யாவின் ஆட்சிக்கெதிராக புரட்சி வெடித்தது.

★ 1855-துருக்கியில் தாதியர் பயிற்சிக்காக புளோரன்ஸ் நைட்டிங்கேல் நிதியம் நிறுவப்பட்டது.

★ 1877-தோமஸ் அல்வா எடிசன் போனோகிராஃப் என்ற ஒலிப்பதிவுக் கருவியைக் முதற் தடவையாகக் காட்சிப்படுத்தினார்.

★ 1915-கலிபோர்னியாவில் சாண்டாகட்டலீனா தீவின் பல முக்கிய கட்டடங்கள் தீயில் எரிந்தன.

★ 1922-ஹவார்ட் கார்ட்டர் பண்டைய எகிப்தின் துட்டன் காமுன் மன்னனின் கல்லறையை பொதுமக்களின் பார்வைக்கு திறந்து விட்டார்.

★ 1929-ஐக்கிய அமெரிக்காவின் ரிச்சார்ட் பயேர்ட் தென் முனை மேல் பறந்த முதல் மனிதரானார்.

★ 1945-யூகொஸ்லாவிய சமஷ்டி மக்கள் குடியரசு அமைக்கப்பட்டது.

★ 1947-பாலஸ்தீனத்தைப் பிரிப்பதென ஐ.நா. ,பொதுச் சபை முடிவெடுத்தது.

★ 1950-வடகொரியா மற்றும் சீனப் படைகள் ஐ.நா. படைகளை வடகொரியாவிலிருந்து வெளியேறும்படி செய்தன.

★ 1961-நாசாவின் மேர்க்குரி-அட்லஸ் 5 விண்கலம் சிம்பன்சி ஒன்றை ஏற்றிக் கொண்டு விண்ணுக்கு அனுப்பப்பட்டது. இது பூமியை இரு தடவைகள் சுற்றிவந்து புவேர்ட்டோ ரிக்கோவில் இறங்கியது.

★ 1963-118 பேருடன் சென்ற கனடாவின் விமானம் மொன்ட்ரியாலில் விபத்துக்குள்ளாகியது.

★ 1982-ஐ.நா. பொது அவை சோவியத் படைகளை ஆப்கானிஸ்தானில் இருந்து உடனடியாக விலகும்படி சோவியத் ஒன்றியத்தைக் கேட்டது.

★ 1987-கொரிய விமானம் தாய்-பர்மிய எல்லைக்கருகில் வெடித்துச் சிதறியதில் 155 பேர் உயிரிழந்தனர்.

★ 2006-அணுவாயுதங்களை எடுத்துச் சென்று 700 கி.மீ. தூரம் உள்ள இலக்குகளைத் தாக்கக் கூடிய ஷாகீன் 1 என்ற ஏவுகணை சோதனையை பாகிஸ்தான் வெற்றிகரமாக நடத்தியது.

### பிறப்புக்கள்


★ 1889-எட்வின் ஹபிள், வானியலையாளர் (இ.1953)

★ 1908-என்.எஸ்.கிருஷ்ணன், தமிழ்த் திரைப்பட நகைச் சுவை நடிகர் (இ.1957)

### இறப்புக்கள்

★ 1989-மருதகாசி, திரைப்படப் பாடலாசிரியர் (பி.1920)

★ 2008-ஜோர்ன் அட்சன், டென்மார்க் கட்டடக் கலைஞர் (பி.1918)



★ 1993- இந்தியாவின் முதன்மையான தொழிலதிபர்களுள் ஒருவரும் இந்திய வானூர்தி போக்குவரத்தின் முன்னோடியுமான ஜே.ஆர்.டி. டாடாவின் நினைவுதினம் (பி.1904)

# சுற்றாடல் காரணிகளை கருத்தில் எடுக்காத அதிவேக நெடுஞ்சாலை

## விமல் வீரவன்ச குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டின் முதலாவது அதிவேக நெடுஞ்சாலை நிர்மாணம் தொடர்பில் வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ச விமர்சனம் செய்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் நெருங்கிய ஆதரவாளர்களில் ஒருவரான விமல் வீரவன்ச நெடுஞ்சாலை குறித்து வெளியிட்டுள்ள கருத்து சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

அதிவேக நெடுஞ்சாலை சுற்றாடல் காரணிகளை கருத்திற்கொள்ளாது அமைக்கப்பட்டுள்ளது என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

கண்டியில் நடைபெற்ற சுதந்திர போராட்ட வீரர் கெப்பட்டிபொலவின் நினைவு நிகழ்வில் கலந்து கொண்ட போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

சமூக மற்றும் சூழலியல் காரணிகளை உதாசீனம் செய்து இந்த பாதை நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது என அவர் குற்றம் சுமத்தியுள்ளார். இந்த நெடுஞ்சாலை தெற்கு உறவுகளை பிளவுபடுத்தியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

நெடுஞ்சாலை அமைக்கப்பட்டதன் மூலம் பல குடும்பங்களுக்கு இடையிலான இடைவெளி அதிகரித்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார். இதேவேளை வினைத்திறனாக இயங்காத நிறுவனங்களை தேசியமயப்படுத்தும் சட்டமூலம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட போது ஜே.என்.பி. கட்சி வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# கரவெட்டி பிரதேசத்தில் நடமாடும் சேவை

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகத்தினால் இப்பிரதேச மக்களுக்கான நடமாடும் சேவை ஒன்று எதிர்வரும் டிசெம்பர் மாதம் 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கரவெட்டி பிரதேச செயலக மாநட்டு மண்டபத்தில் காலை 9 மணிமுதல் மாலை 4 மணிவரை மேற்படி சேவையானது நடைபெறவுள்ளது.

இச்சேவையில் காலம் கடந்த பிறப்பு, இறப்பு மற்றும் திருமணப்பதிவுகள், இந்தியாவில் பிறந்த பிள்ளைகளின் பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், குடியுரிமை, காணி தொடர்பான விடயங்கள், சட்ட ஆலோசனைகள் போன்ற சேவைகளையும் பெறமுடியும்.

இந்நிகழ்வில் பயன்பெற விரும்பும் மக்கள் எதிர்வரும் மார்கழி மாதம் 2 ஆம் திகதிக்கு முன்னர் தத்தமது கிராமசேவையாளர்களிடம் விண்ணப்பிக்குமாறு கரவெட்டி பிரதேச செயலாளர் சி.சத்தியசீலன் அறிவித்துள்ளார். (அ)

# ஏழாவது நாளாக தொடரும் உண்ணாவிரதப் போராட்டம்

கல்வி நிர்வாக சேவையின் கடமையாற்றும் நிறைவேற்று பணிப்பாளர்கள் ஆரம்பித்துள்ள உண்ணாவிரதப் போராட்டம் நேற்று ஏழாவது நாளாகவும் மேற்கொள்ளப்பட்டது.

தமது பதவிகளுக்கான நிரந்தர நியமனங்கள்ள வழங்குமாறு வலியுறுத்தி இவர்கள் கடந்த 21 ஆம் திகதி உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்ட போதிலும் இதுவரை பிரச்சினைக்கான தீர்வு காணப்படவில்லை என கல்வி நிர்வாக சேவையின் கடமை நிறைவேற்றுப் பணிப்பாளர்கள் சங்கத்தின் செயலாளர் டபிள்யூ. பீ.ஏ.வனிகரத்ன கூறியுள்ளார்.

இது தொடர்பாக பிரதி கல்வி அமைச்சர் விஜித் விஜயமுனி செய்சாவிடம் வினவிய போது, இன்றைய தினத்திற்குள் அது குறித்து விசேட கவனம் செலுத்தப்படும் என தெரிவித்தார். (அ-2)

# இளைஞர்களின் உரிமைகளை வென்றெடுக்க போராட்டம்

## சோசலிச இளைஞர் ஒன்றியம்

நாட்டு இளைஞர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக போராட்டம் நடத்தப்படும் என சோசலிச இளைஞர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் 2012 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தில் இந்த நாட்டின் இளைஞர் சமூகம் உதாசீனம் செய்யப்பட்டுள்ளதாக சோசலிச இளைஞர் ஒன்றியத்தின் அழைப்பாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

நாளை புதன்கிழமை கொழும்பிலுள்ள பாரியளவிலான போராட்டமொன்று நடத்தப்படவுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

உயர்தரத்தில் சித்தியடைந்தவர்கள் பட்டதாரிகள் மற்றும் வேலையற்ற இளைஞர்கள் இந்தப் போராட்டத்தில் கலந்து கொள்வார்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் இளைஞர் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்த அரசாங்கம் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்பதே தமது பிரதான கோரிக்கை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

2006 ஆம் ஆண்டு ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்ட பத்தாண்டு வேலைத்திட்டம் இதுவரையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார். இந்தத் திட்டத்தில் இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு அளிப்பது பற்றி குறிப்பிடப்பட்டிருந்ததாகத் தெரிவித்துள்ளார். (அ-2)

# பல்கலை.விரிவுரையாளர்களின் குற்றச்சாட்டுக்கள் நிராகரிப்பு

(கொழும்பு)

அரசாங்கம் தம்மை மீண்டும் ஏமாற்றியுள்ளதாக பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கத்தின் சம்மேளனம் தெரிவிக்கிறது.

ஏற்கனவே வழங்கப்பட்ட உறுதிமொழிக்கு அமைய இம்முறை வரவு செலவுத்திட்டத்தின் ஊடாக சம்பளப் பிரச்சினைக்கான தீர்வு முன்வைக்கப்படவில்லை என அதன் ஊடகப் பேச்சாளர் கலாநிதி மஹீம் மெண்டிஸ் கூறியுள்ளார்.

இந்த நிலையில் தொழிற்சங்க நடவடிக்கையில் இறக்குவது தொடர்பாக தமது அமைப்பு கவனம் செலுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் இந்த குற்றச்சாட்டுக்களை உயர்கல்வி அமைச்சு நிராகரித்துள்ளது. இம்முறை வரவு செலவுத்திட்டத்தின் மூலம் கல்வி மற்றும் கல்விசாரா ஊழியர்களின் சம்பள முரண்பாடுகளை நீக்குவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதை ஜனாதிபதி அண்மையில் அறிவித்திருந்ததாக உயர்கல்வி அமைச்சின் செயலாளர் சுனில் ஜயந்த நவரத்தின் குறிப்பிடுகிறார். (அ-2)

# சிறையில் துன்புறுத்தப்பட்ட கைதிகள் இன்றுமுதல் உண்ணாவிரதப் போராட்டம்

அநுராதபுரம் சிறைச்சாலையில் தாக்குதலுக்குட்பட்ட சிறைக்கைதிகள் இன்று முதல் உணவுதவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக அறிவித்துள்ளனர்.

இதேபோன்று கடந்த காலங்களில் எம்மீது துன்புறுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் இதனைத் தடுத்து நிறுத்த வேண்டும் எனக் கோரியே மேற்படி உணவுத்தவிர்ப்பு போராட்டத்தில் கைதிகள் குதிக்கவுள்ளனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் மாவீரர் தின வாரத்தின் இறுதி நாள் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

அந்நாளில் அநுராதபுரம் சிறைச்சாலையின் மக்சிமம் என்ற சிறையில் அடைக்கப்பட்டிருந்த 56 கைதிகள் மீது காட்டுமிராண்டித்தனமான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன் ஒன்றாக இருந்தவர்களை பிரித்து வெளியில் மழைக்கு மத்தியில் நிறுத்தி வைத்தும் துன்புறுத்தப்பட்டுள்ளது.

சுமார் இரு மணிநேரம் இவர்கள் மழையில் நனைந்தபடி 30 சிறைக்காவல் அதிகாரிகள் துன்புறுத்தல்களுக்கு ஆளாகியுள்ளனர்.

சிறைச்சாலையில் மாவீரர் தின நிகழ்வுகள் இடம் பெற்று விடும் என்ற அச்சமே இச் சிறைக் காவலாளிகளின் துன்புறுத்தல்களுக்கு காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

# இலங்கை பணிப்பெண்ணின் உடலில் இருந்து 7 கம்பி துண்டுகள்

## சவுதி சென்ற பெணின் பரிதாபம்

(கொழும்பு)

சவுதி அரேபியாவிற்குப் பணிப்பெண்ணாகச் சென்ற மற்றுமொரு இலங்கைப் பெண்ணின் உடலில் இருந்து 7 கம்பித் துண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அராப் செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

இது குறித்த மேலும் தெரியவருவதாவது, இலங்கையைச் சேர்ந்த 22 வயதுடைய இளம் யுவதியான பாலசுப்பிரமணியம் சகிக்கலா என்ற பணிப்பெண்ணை உடல் வருத்தம் எனக் கோரி அவருடைய வீட்டு உரிமையாளர் கடந்த வியாழக்கிழமை தம்மான் மத்திய வைத்தியசாலையில் சேர்ந்துள்ளார்.


இந்த நிலையில் கடந்த சனிக்கிழமை குறித்த இளம் யுவதியை சத்திரசிகிச்சைக்கு உட்படுத்திய வைத்தியர்கள் அவரது உடலில் இருந்து 7 கம்பித் துண்டுகளை மீட்டுள்ளனர்.

குறித்த பெண்ணை பார்வையிட ரியாத்தில் உள்ள இலங்கை தூதரக அதிகாரிகள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை சென்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இவ்விடயம் குறித்து விசாரணை நடத்துமாறு சவுதி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தான் பணிபுரிந்த வீட்டின் உரிமையாளருடைய மனைவி தனக்கு மயக்க மருந்து கொடுத்துவிட்டதாகவும் என்ன நடந்தது எனத் தெரியாது எனவும் இளம் இலங்கைப் பணிப்பெண்ணான சசிக்கலா நேற்று முன்தினம் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். (அ-2)







யாழ்.எயிட் நிறுவனத்தினால் யாழ்.அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயத்தில் கல்வி கற்கும் நலிவுற்ற மாணவர்களிற்கு கற்றலுக்கான உதவிப்பொருட்களை வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட கணேசவேல் அபிமன்யு உரையாற்றுவதையும் பிரபல வர்த்தகரும் சமூக சேவையாளருமான இ.எஸ்.பி.நாகரட்ணம் மாணவர் ஒருவருக்கு உதவிப்பொருட்கள் வழங்குவதனையும் கலந்து கொண்ட மாணவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# வடக்கு, கிழக்கில் பயங்கரவாதிகளின் நிழல் உலாவிக் கொண்டே இருக்கிறது

## ரட்ணசிறி தெரிவிப்பு

வடபகுதிக்கும் தென்பகுதிக்குமிடையே யான பரஸ்பர நம்பிக்கை உறுதியாவதன் மூலமே யுத்தத்தின் உண்மையான வெற்றி எமக்கு கிடைக்குமென முன்னாள் பிரதமரும் நல்லாட்சி மற்றும் அடிப்படை வசதிகள் தொடர்பான சிரேஷ்ட அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

பண்டாரநாயக்கா பரம்பரையுடன் மிகவும் நெருங்கிப் பழகுபவர்களுக்குப் பெரும் அழிவே ஏற்படும். எனவேதான் நான் சற்று தள்ளியிருந்தேன் என்றும் தெரி வித்துள்ளார்.

இங்கிரியவில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஏற்பாடு செய்திருந்த கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அமைச்சர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

ஜே.வி.பி. எம்மோடு இணைவதால் நாம் விலாசம் இல்லாமல் அழிந்து போய் விடுவோமோ என அன்றைய ஜனாதிபதி சந்திரிக்கா என்னிடம் கேட்டார். எம்மோடு இணைவதால் அழியப்போவது ஜே.வி.பி.யே என நான் பதிலளித்தேன்.

சுதந்திரக்கட்சிக்குள் வரவும் வெளியே போகவும் கதவுகள் திறந்தே உள்ளன. ஆனால் வெளியே போவோரை விட உள்ளே வருவோரே அதிகரித்துள்ளனர்.

வடக்கு, கிழக்கில் யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட போதிலும் பயங்கரவாதிகளின் நிழல் உலாவிக் கொண்டு தான் இருக்கின்றன.

நாட்டின் ஸ்திரமான அரசாங்கத்தை கவிழ்த்து ஸ்திரமற்ற ஆட்சியை ஏற்படுத்த புலிகள் முன்னெடுக்கும் முயற்சிகள் தொடர்பில் நாம் மிகவும் அவதானத்துடன் இருக்க வேண்டும்.

எமது நாட்டுக்குள் உள்ள பிரச்சினையை நாம் பேசித் தீர்த்துக் கொள்வோம். அவற்றை வெளிநாடுகளில் சென்று தெரிவிப்பது பிழையான செயலாகும் என்றார். (அ-2)

# பூமியை போன்று புதிய கிரகம் கண்டுபிடிப்பு



அமெரிக்காவின் கலிபோர்னியா பல்கலைக்கழகத்தை சேர்ந்த விண்வெளித்துறை பேராசிரியர் ஸ்டீவன் வோக்ட் தலைமையிலான குழுவினர் ஆய்வு மேற்கொண்டனர். அப்போது பூமியை போன்ற மற்றொரு கிரகம் இருப்பதை கண்டு பிடித்துள்ளனர். அந்த கிரகத்துக்கு கிளைஸ் 581 ஜி என பெயரிட்டுள்ளனர். இது பூமியில் இருந்து 123 இலட்சம் கோடி தொலைவில் உள்ளது.

இந்த புதிய கிரகத்தில் தண்ணீர் உள்ளது. எனவே, அங்கு மனிதர்கள் உள்ளிட்ட உயிரினங்கள் வாழும் சூழ்நிலை இருக்கும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். பூமியை சுற்றி இருப்பது போன்றே இங்கும் சந்திரன் உள்ளது. மேலும் கிளைஸ் 581 ஜி கிரகத்தின் அருகே மேலும் 2 கிரகங்கள் உள்ளன.

அவற்றை சுற்றி 6 நட்சத்திரங்கள் உள்ளன. அவைகுறித்து ஆய்வுகள்நடைபெற்றுவருகின்றன. புதிய கிளைஸ் 581 ஜி கிரகம் பூமியை விட 4 மடங்கு பெரியது. 11 வருட ஆராய்ச்சிக்கு பின் இது க்ண்டுபிடிக்கப்பட்டது என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். (அ-2)

# பஸ் கட்டண அதிகரிப்பை பகிரங்கப்படுத்த வேண்டும்

(கொழும்பு)

எதிர்வரும் டிசெம்பர் மாதம் ஆறாம் திகதிக்கு முன்னர் மேற்கொள்வதற்கு இணக்கம் காணப்பட்ட பேருந்து கட்டணம் அதிகரிப்பை பகிரங்கப்படுத்துமாறு தனியார் பேருந்து உரிமையாளர் சங்கங்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளன.

இது தொடர்பாக போக்குவரத்து அமைச்சின் செயலாளருக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

நடைமுறை சட்டத்திற்கு பேருந்து கட்டண அதிகரிப்பு தொடர்பான விபரங்கள் ஒருவார காலத்திற்கு முன்னதாக அறிவிக்கப்பட வேண்டியது அவசியம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பாக தனியார் போக்குவரத்து அமைச்சின் செயலாளர் விக்டர் சமரவீர தெரிவிக்கையில், பேருந்து கட்டணம் திருத்தத்திற்கான முன்னேற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்தார். (அ-2)

# நீர்வெறுப்பு நோய் ஒழிப்பு மாநாடு ஆரம்பமாகியது

மூன்றாவது, ஆசிய நீர்வெறுப்பு நோய் ஒழிப்பு மாநாடு கொழும்பில் நேற்று ஆரம்பமாகியுள்ளது.

இம்மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஆசிய நீர் வெறுப்பு நோய் ஒழிப்பு சங்கத்தின் பிரதிநிதிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

நீர்வெறுப்பு நோயினால் வருடாந்தம் உலகளாவிய ரீதியில் மில்லியன் கணக்கான மக்கள் உயிரிழக்கின்றனர்.

ஆசியாவைச் சேர்ந்தவர்களே அதிகளவில் இந்த நோயினால் பாதிக்கப்படுவதாக சுகாதார தரப்பினர் சுட்டிக்காட்டினர்.

இலங்கையில் நாய்கள் உள்ளிட்ட வேறு விலங்குகளின் கடிக்கு இலக்காவோரை நீர் வெறுப்பு நோயிலிருந்து பாதுகாப்பதற்காக மாத்திரம் வருடாந்தம் 500 மில்லியன் ரூபா செலவிடப்படுகின்றது.

எவ்வாறாயினும் நீர்வெறுப்பு நோயினால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை படிப்படியாக குறைந்து வருவதாக சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் பாலித்த மஹிபால தெரிவித்துள்ளார். (அ-2)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அத்திவாரமாக அமைந்துள்ள பரமேஸ்வராக் கல்லூரியின் நிறுவுனரும், சைவப் பெருவள்ளலாருமான

## சேர்.பொன். இராமநாதன்

அவர்களின்

## குருபூசைத்தின விழா



அன்புடையீர்,

நிகழும் கர வருடம் கார்த்திகைத் திங்கள் 14 ஆம் நாள் (30.11.2011) திருவோண நட்சத்திரம் கூடிய புதன்கிழமை அன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு அத்திவாரமிட்டவரான சேர்.பொன். இராமநாதன் அவர்களின் குருபூசைத் தினமாகும்.

இதனையொட்டி அன்று காலை 7.00 மணி தொடக்கம் 8.30 மணிவரை பல்கலைக்கழகத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அருள்மிகு பார்வதி சமேத ஸ்ரீ பரமேஸ்வரப் பெருமானுக்கு அஷ்டோத்தரசத (108) சங்காபிஷேகமும், விஷேட பூசையும் நிகழவுள்ளன. அனைவரும் வருகை தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். அன்று காலை 8.30 மணிக்கு பல்கலைக்கழக வளவிலுள்ள சேர்.பொன் இராமநாதன் அவர்களின் சிலைக்கும், பல்கலைக்கழக சபா மண்டபத்திலுள்ள (Board Room) அவரின் உருவப் படத்திற்கும் துணைவேந்தர் பேராசிரியர் செல்வி வசந்தி அரசரத்தினம் அவர்கள் மலர்மாலை அணிவித்து அஞ்சலி செய்யும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

### பிற்பகல் நிகழ்ச்சிகள்

- தலைமை:-திரு. யோ. பிரதீவ் (தலைவர்-இந்து மன்றம்)
- இடம்:- கைலாசபதி கலையரங்கு, யாழ். பல்கலைக்கழகம்.
- பி.ப.2.30 மணி இராமநாதன் கல்லூரி மாணவிகளின் நடனம்
- பி.ப.3.15 மணி யாழ். பல்கலைக்கழக நடனத்துறை மாணவிகளின் நடனம்
- பி.ப.5.00 மணி கிளிநொச்சி சேர்.பொன். இராமநாதனின் தான்யலட்சுமிக்கமத்தின் குடியிருப்பாளர்களுக்குக் காணி உறுதிப்பத்திரம் வழங்கல்.

பேராசிரியர் சி.க. சிற்றம்பலம்
(தலைவர், பரமேஸ்வராக் கல்லூரி, இயக்குநர் சபை)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
பரமேஸ்வராக் கல்லூரி, இயக்குநர் சபை,
ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலய பரிபாலன சபை, இந்து மன்றம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
25.11.2011

(6864)

கரைச்சிப் பிரதேசசபை- கிளிநொச்சி

# கேள்வி அறிவித்தல்- 2011

## கரைச்சிப் பிரதேச சபையினால் கீழ் குறிப்பிடப்படும் வேலைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன

01. நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தினால் (இக்ராட்) பதிவு செய்யப்பட்ட தகுதி வாய்ந்த பதிவுத் தரமுடைய ஒப்பந்தகாரர் கீழ் குறிப்பிடப்படும் தொகைகளைச் செலுத்தி கேள்விப் பத்திரங்களை 29.11.2011- 08.12.2011 ஆம் திகதி வரை காலை 8.30 மணிமுதல் மாலை 3.00 மணிவரை அலுவலக நாட்களில் பெற்றுக் கொள்ளலாம்.

02. கேள்விப் பத்திரத்தின் ஒரு பிரதியை கடித உறையிலிட்டு அதற்கு முத்திரை வைத்து தலைவர்/செயலாளர், கரைச்சிப் பிரதேச சபை, கிளிநொச்சி என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அல்லது தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிலும் இரண்டாம் பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபாலிலோ 09.11.2011 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

03. கேள்விகள் 09.12.2011 ஆம் திகதி காலை 11.00 மணிக்கு திறந்து பரிசீலிக்கப்படும். அவ்வேளையில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

04. மேலதி விபரங்களை பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

| தொ. இல | வேலையின் பெயர் | இக்ராட் பதிவுத் தரம் | மீளளிக்கப் படும் கேள்வி வைப்புப்பணம் (ரூபா) | மீளளிக்கப் படாத கேள்வி வைப்புப்பணம் (ரூபா) | மீளளிக்கப் படாத பெறுமதி சேர்வரி (VAT 12%) NBT (2% ரூபா) |
|---|---|---|---|---|---|
| 01 | முரசுமோட்டை மாட்டிறைச்சிக்கடை | C9 | 5000.00 | 1000.00 | 142.40 |
| 02 | கண்டாவளை மாட்டிறைச்சிக்கடை | C9 | 5000.00 | 1000.00 | 142.40 |
| 03 | கல்லாறு மாட்டிறைச்சிக்கடை | C9 | 5000.00 | 1000.00 | 142.40 |
| 04 | புன்னைநீராவி மாட்டிறைச்சிக்கடை | C9 | 5000.00 | 1000.00 | 142.40 |
| 05 | இராமநாதபுரம் மாட்டிறைச்சிக்கடை | C9 | 5000.00 | 1000.00 | 142.40 |
| 06 | இரணைமடுச்சந்தி மாட்டிறைச்சிக்கடை | C9 | 5000.00 | 1000.00 | 142.40 |
| 07 | உருத்திரபுரம் D10 மாட்டிறைச்சிக்கடை | C9 | 5000.00 | 1000.00 | 142.40 |
| 08 | ஊற்றுப்புலம் மாட்டிறைச்சிக்கடை | C9 | 5000.00 | 1000.00 | 142.40 |
| 09 | அம்பலப்பெருமாள் சந்தி மாட்டிறைச்சிக்கடை | C9 | 5000.00 | 1000.00 | 142.40 |
| 10 | வன்னேரி மாட்டிறைச்சிக்கடை | C9 | 5000.00 | 1000.00 | 142.40 |
| 11 | ஸ்கந்தபுரம் மாட்டிறைச்சிக்கடை | C9 | 5000.00 | 1000.00 | 142.40 |

நிபந்தனைகள்:-

01. உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படாத கேள்விகள் இரத்துச் செய்யப்படும்.
02. கறுப்புப் பட்டியலில் உள்ளவர்கள் கேள்விகளில் பங்குபற்ற தகுதியற்றவர்களாவர்
03. கேள்வியை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்பதற்கோ நிராகரிப்பதற்கோ கேள்விச் சபைக்கு அதிகாரம் உண்டு.

வைத்திலிங்கம் குகராசா (தவிசாளர்)
கரைச்சிப் பிரதேசசபை,
கிளிநொச்சி.
29.11.2011

(சி/5062)

# எல்சல்வடோரில் 3 நாட்களில் 700 தடவைகள் நிலநடுக்கம்



மத்திய அமெரிக்காவில் உள்ள எல்சல்வடோர் நாட்டில் கடந்த மூன்று நாட்களுக்குள் 700 இற்கும் அதிகமான நில அதிர்வுகள் ஏற்பட்டுள்ளன. வீடுகள் சேதமடைந்ததால் மக்கள் தெருக்களில் தஞ்சமடைந்துள்ளனர்.


கடந்த வியாழக்கிழமை முதல் நில அதிர்வு ஏற்பட்டுக் கொண்டே இருப்பதால் அங்குள்ள மக்கள் அச்சத்தில் உறைந்து போயுள்ளனர்.

இந்த நிலஅதிர்வுகள் ரிக்டர் அளவுகோலில் 1.8 முதல் 4.6 வரை பதிவாகியுள்ளன. இதனால் ஏராளமான வீடுகள் சேதமடைந்துள்ளன.

குறிப்பாக மலைப்பகுதிகளில் வீடுகள் சரிந்து விழுவதால் கிராம மக்கள் தெருக்களில் தஞ்சமடைந்துள்ளனர். 700 இற்கும் அதிகமான முறை சில அதிர்வுகள் உணரப்பட்டாலும் உயிரிழப்பு ஏற்படவில்லை என தகவல்கள் வெளியாகியுள்ளன.

எல்சல்வடோர் நாட்டில் கடந்த 2001 ஆண்டு ஜனவரி மாதத்தில் அடுத்தடுத்து இரண்டு மிகப்பெரிய நிலநடுக்கம் ஏற்பட்டதில் ஆயிரத்து 150 பேர் பலியாகினர். இலட்சக்கணக்கானோர் வீடுகளை இழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# ரஷ்ய ஜனாதிபதி தேர்தலில் மீண்டும் விளாடிமிர் புடின்



அடுத்தாண்டு மார்ச் மாதம் நடைபெறவுள்ள ரஷ்ய ஜனாதிபதித் தேர்தலில் விளாடிமிர் புடின் மீண்டும் போட்டியிடுகிறார்.

ரஷ்ய ஜனாதிபதியாக இரண்டு முறை பத வி வகித்த விளாடிமிர் புடின் மூன்றாவது முறை போட்டியிட முடியாது என்பதால் கடந்த முறை பிரதமர் தேர்தலில் போட்டியிட்டு பிரதமரானார்.

ஜனாதிபதியாக இவரது ஆதரவாளர் மெத்வதேவ் பொறுப்பேற்றார். மூன்றாவது முறை ஜனாதிபதியாகும் வகையில் சட்டத் திருத்தம் இயற்றப்பட்டது.

மொஸ்கோவில் நேற்று முன்தினம் நடந்த ஆளும் ஐக்கிய ரஷ்ய கட்சிக் கூட்டத்தில் ஜனாதிபதி தேர்தலுக்குரிய வேட்பாளராக புடின் பெயர் அறிவிக்கப்பட்டது.

தற்போதைய ஜனாதிபதி மெத்வதேவ் இதற்குரிய அறிவிப்பை வெளியிட்டார். இதன் மூலம் மூன்றாவது முறையாக ஜனாதிபதியாகும் வாய்ப்பு புடினுக்கு கிடைத்துள்ளது. (அ-2)

# தீவிரவாதிகளுடன் நடத்தும் பேச்சுக்கள்தான் அமைதிக்கு வழி

## ஜேர்மன் வெளியுறவு அமைச்சர்

இஸ்லாமியத் தீவிரவாதிகளுடன் நடத்தும் பேச்சுவார்த்தை ஒன்று தான் நிரந்தர அமைதிக்கு வழிவகுக்கும் என்று ஜேர்மனியின் வெளியுறவுத்துறை அமைச்சர் குயிடோ வெஸ்டர் வேலே தெரிவித்துள்ளார்.

நண்பர்களுடன் பேசுவதை விட எதிரிகளுடன் பேசுவதால் மட்டுமே அமைதியை ஏற்படுத்த முடியும் என்பதால் எதிர்வரும் டிசெம்பர் மாதம் இடம்பெறும்.

பெரிய சர்வதேச கருத்தரங்கிற்கு முன்பாக இந்த மாதமே தலிபான்களை ஆப்கானிஸ்தான் பேச்சுவார்த்தையில் இணைத்துக் கொள்ள வேண்டும் என்று இவர் கருதுகின்றார்.

அடுத்த டிசெம்பர் 5 ஆம் திகதி ஜேர்மனியின் பான் நகரத்தில் நூற்றுக்கு மேற்பட்ட நாடுகளில் இருந்து அமைச்சர்கள கலந்து கொள்ளும் கூட்டம் நடைபெறுகிறது. எதிர்வரும் 2014 ஆம் ஆண்டு நேட்டோ படைகளை ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேற்றிய பின் அந்நாட்டின் எதிர்காலம் குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கின்றனர். இராணுவத்தின் துணையால் இந்நாட்டில் வெற்றி பெற இயலாது என்று வெஸ்டர் வேலே நம்புகிறார்.

தலிபான்கள் ஆப்கானிஸ்தானிலும் பாகிஸ்தானிலும் நேட்டோ படைகளுக்கு உதவும் அதிகாரிகளையும் அவர்கள் பயணிக்கும் வாகனங்களையும் அடிக்கடி தாக்கி அழிக்கின்றனர்.

கடந்த 2001 ஆம் ஆண்டு முதல் அமெரிக்கா தன் படைகளை இங்கு நிறுத்தியிருந்தாலும் தலிபான்கள் கடந்த பத்தாண்டுகளாகவே தங்களின் வன்முறைத்தாக்குதலை தொடர்ந்து நடத்தி வருகின்றனர்.

எதிர்வரும் 2014 ஆம் ஆண்டு நேட்டோ படைகள் தங்கள் தாய்நாடு திரும்பிய பின்பும் ஜேர்மனிய உள்நாட்டு இராணுவப் பயிற்சிக்காக ஆப்கானிஸ்தானில் தன் படைகளை நிறுத்தி வைக்கும் என்று ஜேர்மனியின் பாதுகாப்புத்துறை அமைச்சர் டெ மாயஜியரி தெரிவித்துள்ளார். (அ-2)

# துனிசிய விமானத்தை சிறைப்பிடிக்க லிபிய போராட்டக்காரர்கள் முனைப்பு

லிபியாவில் முன்னாள் ஜனாதிபதியாக இருந்த முவம்மர் கடாபி துரத்தப்பட்டு புதிய இடைக்கால அரசு அமைந்துள்ளது. இந்த நிலையில் தலைநகர் டிரிபோலியில் உள்ள முக்கிய விமான நிலையங்களில் ஒன்றான மிதிகா விமான நிலையத்துக்குள் நேற்று முன்தினம் ஏராளமான கார்கள் சென்றன. அதில் இருந்து நூற்றுக்கணக்கானோர் இறங்கிச் சென்று விமான நிலையத்தில் இருந்து புறப்பட தயாராக இருந்த ஒரு விமானத்தை சூழ்ந்தனர்.

துனிஷியா நாட்டை சேர்ந்த அந்த விமானத்தில் பயணிகள் அமர்ந்திருந்தனர். போராட்டக்காரர்கள் நடவடிக்கையால் விமானப் பயணிகள் கடும் அதிர்ச்சி அடைந்தனர். எனினும் இராணுவம் விரைந்து வந்து அவர்களை கலைத்தனர். அதன் பின்னர் விமானம் புறப்பட்டது. இந்த சம்பவத்தின்போது எந்தவித வன்முறையும் நடக்கவில்லை என தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-2)

# அமெ. கூட்டுப்படையினரின் தாக்கு; பாக். இராணுவத்தினர் 24 பேர் பலி

அமெரிக்க கூட்டுப் படையினர் நடத்திய தாக்குதலில் பாகிஸ்தான் இராணுவத்தினர் 24 பேர் உயிரிழந்தனர். இச்சம்பவத்திற்கு நேட்டோ படைகள் கோரிய மன்னிப்பை ஏற்க முடியாது என்று பாகிஸ்தான் இராணுவம் மறுப்பு தெரிவித்துள்ளது. ஆப்கானிஸ்தான் எல்லையில் உள்ள பாகிஸ்தான் வடமேற்கு மலைப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள இராணுவ சோதனை சாவடி மீது அமெரிக்க கூட்டுப் படையான நேட்டோ ஹெலிகொப்டர்கள் குண்டு வீசி தாக்கின.

இதில் பாகிஸ்தானைச் சேர்ந்த 2 இராணுவ மேஜர்கள், ஒரு கப்டன் உட்பட 24 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர். 11 பேர் காயம் அடைந்தனர். இந்த சம்பவம் பாகிஸ்தானுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளது.


இதனால் உடனடியாக நேட்டோ படையினருக்கு உணவு எடுத்துச் செல்லும் 2



எல்லைப் பகுதிகளும் அடைக்கப்பட்டன. இதற்கிடையே பாகிஸ்தான் இராணுவம் மீது நேட்டோ ஹெலிகொப்டர்கள் நடத்திய குண்டு வீச்சு சம்பவத்தில் பலியான வீரர்களுக்கு அமெரிக்கா சார்பில் இரங்கல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து பாகிஸ்தான் இராணுவத்திடம் நேட்டோ மன்னிப்பு கோரியது. மேலும் நேட்டோ கோரிய மன்னிப்பை ஏற்க முடியாது என்று பாகிஸ்தான் இராணுவம் மறுப்பு தெரிவித்துள்ளது. (அ-2)




# ஜாக்சன் மரணத்திற்கு காரணமான மருத்துவருக்கு இன்று தீர்ப்பு



மறைந்த பிரபல பொப் பாடகர் மைக்கல் ஜாக்சன் மரணத்திற்கு காரணமான அவரது மருத்துவர் கன்ராட் முர்ரேவிற்கு என்ன தண்டனை என்பது இன்று அறிவிக்கப்படவுள்ளது.

கடந்த 2009 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 25 ஆம் திகதி உலகப் புகழ் பெற்ற பொப் பாடகர் மைக்கல் ஜாக்சன் அவரது பண்ணை வீட்டில் இறந்தார்.

அவரை பரிசோதித்த மருத்துவர்கள் வலி நிவாரணி மருந்தை அதிகம் உட்கொண்டதால் மாரடைப்பு ஏற்பட்டு இறந்தார் என கூறினர்.

இதற்கு அவரது குடும்ப மருத்துவரான கன்ராட் முர்ரே (54) கொடுத்த ஆலோசனை தான் அவரது இறப்பிற்கு காரணம் என கூறப்பட்டு அவர் மீது வழக்கு தொடரப்பட்டது.

இது தொடர்பான வழக்கு விசாரணையில் 12 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு கடந்த 7 ஆம் திகதி லொஸ்ஏஞ்சல்ஸ் நீதிமன்றம் அவரை குற்றவாளி என கூறி தீர்ப்பு வழங்கியது.

இதைத் தொடர்ந்து அவர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

அவர் மீதான தண்டனை 29 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தது. இதில் அவருக்கு அதிகபட்ச சிறைத் தண்டனையும் 100 மில்லியன் டொலர் அபராதமும் விதிக்கப்படலாம் என தெரிகிறது. (அ-2)

# சிரியா மீது அரபுலீக் அமைப்பு மேலும் பொருளாதாரத்தடை

கடந்த 8 மாதங்களாக சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் ஆசாத்துக்கு எதிராக மக்கள் போராட்டம் நடந்து வருகின்றது. இதைத் தொடர்ந்து சிரியா மீது அரபு லீக் அமைப்பு மேலும் பல பொருளாதார தடைகளை விதித்துள்ளது. எனினும் சிரிய ஜனாதிபதி பதவி விலக மறுத்து வருகின்றார்.

இராணுவம் பொதுமக்களிடையே நடந்து வரும் மோதலில் பலர் பலியாகி வருகின்றனர். இதுவரை 3 ஆயிரத்து 500 பேர் பலியாகியுள்ளனர் என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

இந்நிலையில் அரபு லீக் அமைப்பின் அவசரக்கூட்டம் எகிப்தின் கெய்ரோவில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இக்கூட்டத்தை அரபு லீக் பொதுச் செயலர் நபில் இலராபி ஆரம்பித்து வைத்து உரையாற்றினார்.

பின்னர் உறுப்பு நாடான கட்டார் நாட்டின் வெளியுறவு அமைச்சர் ஷேக் அகஹமத்பின் ஜாஜிம் உரையாற்றுகையில்,

சிரியா மீது பொருளாதார தடை விதிப்பதாகவும் சிரியாவிற்கு சொந்தமான சொத்துக்கள், முதலீடுகள் அரபு லீக் உறுப்பு நாடுகளில் இருந்தால் அவற்றை முடக்கி வைக்கவும் தீர்மானம் நிறைவேற்றப்படுவதாக கூறினார்.

இதன் பின் இந்த தடைகள் விதிப்பது குறித்து பொது வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதில் சிரியாவின் வர்த்தக ரீதியாக நெருங்கிய நட்பு நாடுகள் என்று கூறப்படும் ஈராக், லெபனான் நாடுகள் தீர்மானத்;த ஆதரித்து வாக்களித்தன. மொத்தம் 22 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன. 19 பேர் தீர்மானத்திற்கு ஆதரவு தெரிவித்தனர்.

இது குறித்து அரபு லீக் பொதுச் செயலர் நபில் இலராபி கூறுகையில்,

சிரியா தொடர்ந்து வலியுறுத்தினால் பொருளாதார தடையை விலக்குவது குறித்து பரிசீலிப்போம். ஆனால் பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வர சிரியா உத்தரவாதம் தர வேண்டும் என்றார். (அ-2)

கடமையைச் செய்யத் துணிவுடன் இரு.
அதுவே உண்மையான வீரத்தின் சிகரம்.
~ சிம்மன்ஸ்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஓர் அன்பு மடல்...

அன்புக்குரிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களுக்கு அநேக வணக்கம். அவசரமாக இக்கடிதம் எழுதப்படுகின்றது. கடிதம் எழுதுவதன் நோக்கம் தமிழினத்தின் எதிர்காலம் பற்றியதாகும்.

நவம்பர் 27 என்றால் அது மாவீரர் நாள் என்பதை யாராலும் மாற்றமுடியாது. இருந்தும் அத்தகையதொரு நாளை அனுஷ்டிக்கக் கூடாது என்பதில் படைத்தரப்பு மிகவும் அவதானமாக இருக்கின்றது.

போராட்டத்தில் தங்கள் உயிரை அர்ப்பணித் தவர்களை வணங்குகின்ற நடைமுறை உலகு முழுவதிலும் உள்ளது. எதிரியாக இருந்தாலும் அவன் போர்க்களத்தில் உயிர்த் தியாகம் செய்தால் அவருக்குரிய மரியாதையை வழங்க வேண்டும் என்பது போர்த்தருமம். அத்தகைய தொரு போர்த்தர்மத்தை துட்டகைமுனு, எல்லாள மன்னன் தொடர்பில் பின்பற்றிய தகவல்கள் உண்டு.

இருந்தும் சமகால துட்டகை முனுக்களிடம் அத்தகைய இயல்பு இல்லை. எனவே இது விடயத்தில் பல்கலைக்கழக மாணவர்கள் மிகவும் நிதானமாக செயலாற்ற வேண்டும். விடுதலைப் போரில் எங்கள் இழப்புகள் ஏராளம். அந்த இழப்புகளின் துயரங்கள் ஆறிக்கொள்ள மிக நீண்டகாலம் எடுக்கும்.

அதேசமயம் எங்கள் உரிமைகள் தொடர்பில் ஏதேனும் கிடைப்பதாக இல்லை. வன்னிப்போரில் தமிழர் தரப்பில் ஏற்பட்ட இழ்ப்புகள் தொடர்பில் சர்வதேச சமூகம் தலையிடும் என்ற நம்பிக்கை இருந்தது உண்டு.

ஆனால் எதுவுமே நடைபெறவில்லை. மாறாக வன்னிப் பெரும் நிலப்பரப்பில் பணியாற்றிய சர்வதேச தொண்டு அமைப்புகள் அங்கிருந்து வெளியேறின.

உலகில் எங்கு போர் நடந்தாலும் அங்கு தொண்டு அமைப்புகள் விரைந்து சென்று உதவி புரிவதே மரபாக இருக்க, எங்கள் மண்ணில் மட்டும் போர் தொடங்கியவுடன் சர்வதேச அமைப்புகள் மூட்டை முடிச்சுக்களைக் கட்டிக் கொண்டு வெளியேறின.

இலங்கை அரசு உத்தரவிட்டது நாங்கள் வெளியேறினோம் என்று சர்வதேச தொண்டு அமைப்புகள் நியாயம் கற்பித்தால் அது மகாதவறு.

ஏனெனில் போர் நடக்கிறது. அப்பாவிப்பொது மக்கள் பலியாகப் போகிறார்கள். எங்களை காப்பாற்றுங்கள், எங்களைக்கைவிட்டுப்போகாதீர்கள் என்று மக்கள் கெஞ்சிக் கேட்கிறார்கள். அதையும் பொருட்படுத்தாமல் சர்வதேச அமைப்புகள் வன்னியிலிருந்து வெளியேறின எனில் எங்கள் பேரிழப்பில் சர்வதேச சமூகம் நடந்துகொண்ட முறை மிகக் கொடூரமானது.

எனவே சர்வதேச சமூகம் இனிமேலேனும் எங்கள் விடயத்தில் சாதகமாகத் தலையிடும் என்று நினைத்தால் அது கற்பனையாகமட்டுமே இருக்க முடியும்.

ஆக, அன்புக்குரிய யாழ்ப்பாணப்பல்கலைக் கழக மாணவர்களே! எங்கள் உரிமைக்காக நீங்கள் வகுக்கக் கூடிய இராஜதந்திரம் கனதியானது. உங்களால் அது முடியும். எனவே நீங்கள் முதலில் உங்கள் பாதுகாப்பில் கவனம் செலுத்துங்கள். அரசியலைப் படியுங்கள். நாங்கள் விட்ட தவறுகளை ஆராயுங்கள். அந்தத் தவறுகளை எங்கியிருந்து திருத்த வேண்டும் என்பதை இனங்கண்டு கொள்ளுங்கள்.

கூடவே தமிழ் மக்களை அரசியல் புலத்தில் விழிப்படையச் செய்யுங்கள். உங்களிடமிருந்து இதனையே எதிர்பார்க்கிறோம் ஒரு உன்னதமான விடுதலை விரும்பி ஒருபோதும் எதிரியை சீண்டுவதில்லை.

மற்றவர்களின் உசுப்பேத்தல்களுக்கு இடம் கொடுப்பதும் இல்லை.

உரிமை என்பது கிடைத்து விட்டால் எதையும் நாம் அனுஷ்டிக்க முடியும். அதுவரை மனதுக்குள் வழிபாடாக நடக்கட்டும். இப்போதைக்கு அது போதும்.

# கனிமொழிக்கு பிணை வழங்கியது நீதிமன்றம்; வரவேற்க தயாராகின்றது தி.மு.க



2 ஜி ஸ்பெட்க்டம் ஊழல் வழக்கில் தி.மு.க. எம்.பி. கனிமொழிக்கு டில்லி உயர் நீதிமன்றம் நேற்று பிணை வழங்கியது. அவருடன் கலைஞர் டி.வி நிர்வாக இயக்குநர் சரத்குமார், சினியுக் பிலிம்ஸ் கரீம் மொரானி, குஸோகான் நிறுவன இயக்குநர்கள் ஆசிப் பல்வா மற்றும் ராஜில் அகர்வால் உள்ளிட்டோருக்கும் உயர் நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது.

2 ஜி வழக்கில் கப்ரரெட் நிறுவன அதிகாரிகளுக்கு பிணை வழங்கும் போது உச்ச நீதிமன்றம் விதித்துள்ள நிபந்தனைகள் அனைத்தும் இவர்களுக்கும் பொருந்தும் என உயர் நீதிமன்றம் தெரிவித்தது.

முன்னதாக விசாரணை நீதிமன்றத்தில் தங்களது பிணை மனு நிராகரிக்கப்பட்ட நிலையில் உயர் நீதிமன்றத்தை இவர்கள் நாடி இருந்தனர். இந்த வழக்கின் குற்றம் சாட்டப்பட்ட கப்ரரெட் நிறுவன அதிகாரிகள் 5 பேருக்கு உச்ச நீதிமன்றம் பிணை வழங்கியதை அடுத்து தங்களுக்கும் பிணை கிடைத்துவிடும் என்று கனிமொழி உள்ளிட்டோர் நம்பினர். இதனால் டிசெம்பர் முதலாம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய வழக்கை முன்னதாகவே விசாரிக்குமாறு கனிமொழி உள்ளிட்டோர் டில்லி உயர் நீதிமன்றத்தைக் கேட்டுக் கொண்டனர்.

இவர்களது பிணை மனுக்கள் தொடர்பாக கடந்த வெள்ளிக்கிழமையும் நேற்றும் விசாரணை நடைபெற்றது. விசாரணையின் முடிவில் 5 பேருக்கு பிணை வழங்கி உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

எனினும் முன்னாள் தொலைத் தொடர்புச் செயலர் சித்தார்த் பெகுராவுக்கு மட்டும் உயர் நீதிமன்றம் பிணை வழங்கவில்லை. அரசு ஊழியர்கள் பொதுச் சொத்துக்களின் அறங் காவலர்கள் என்பதால் அவரின் பிணை மனு தொடர்பாக கடுமையாக ஆய்வு செய்ய வேண்டியது அவசியம் என கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் மோகன் பராசரன் உயர் நீதிமன்றில் வாதிட்டார்.

இதையடுத்து இவரைத் தவிர பிணை கோரி மனுத் தாக்கல் செய்த இதர 5 பேரையும் பிணையில் விடுவிக்க நீதிபதி ஷாலி உத்தரவிட்டார். கனிமொழிக்கு பிணை வழங்கப்பட்டுள்ளதால் தி.மு.கவினர் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். (அ-2)

## 24 மணி நேரத்தில் ரூ.10 இலட்சம் வருவாய்

தெற்கு அதிவேக நெடுஞ்சாலை, பொதுமக்கள் போக்குவரத்திற்காக திறக்கப்பட்டு 24 மணிநேரத்தில் 10 இலட்சம் ரூபாய் வருமானமாகக் கிடைக்கப் பெற்றுள்ளது என்று வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்தது.

இந்த வீதி நேற்றுமுன்தினம் மாலை 6.00 மணிக்கு பொதுமக்கள் போக்குவரத்திற்காக திறக்கப்பட்டுள்ள நிலையில், இதுவரையில் 4ஆயிரத்து 500 வாகனங்கள் பயணித்துள்ளதாகவும் மேற்படி அதிகாரசபை குறிப்பிட்டது. (பா)

## விபச்சார வழக்கில் கைதானோருக்கு தொடர்ந்தும் விளக்கமறியல்

விபச்சாரத்தில் ஈடுபட்டவர்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டவர்களை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

யாழ்ப்பாணம் நகர்ப்பகுதியில் இயங்கும் தங்குமிட விடுதி ஒன்றில் விபச்சாரத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் 4 பெண்கள் உட்பட 9 பேரை யாழ்ப்பாணப் பொலிஸார் கடந்த 13 ஆம் திகதி கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 3 பெண்கள் உட்பட 8 பேர் மறுநாள் அதாவது கடந்த 14 ஆம் திகதி யாழ். நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த யாழ். மாவட்ட நீதிபதியும் யாழ். நீதவான் நீதிமன்ற மேலதிக நீதவானுமாகிய அ.பிறேம்சங்கர் குற்றம் சாட்டப்பட்டவர்களை நேற்றைய தினம்வரை விளக்கமறியலில் வைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டிருந்தார்.

இதேவேளை கைது செய்யப்பட்டர்களில் காதலர்கள் எனக்கூறிய இருவரை பதிவுத் திருமணம் செய்து திருமண அத்தாட்சிப் பத்திரத்தை நீதிமன்றிற்கு சமர்ப்பிக்குமாறு கடந்த 22 ஆம் திகதி யாழ். நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ. ஆனந்தராசா உத்தரவிட்டிருந்தார்.

அத்தோடு இவ்விருவரையும் சரீரப் பிணையில் செல்லவும் நீதவான் அனுமதித்தார். இந்நிலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்ட ஏனைய 6பேரும் நேற்று நீதவான் ஏ.ஏ ஆனந்தராசா முன்னிலையில் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

இதன்போதே மேற்படி 6 பேரையும் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 5 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (அ-6)

## போலி முகவர்கள் தொடர்பில் முறைப்பாடுகள் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

போலி முகவர்களினால் ஏமாற்றப் படுபவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமேயுள்ளது. பாதிக்கப்பட்ட ஒருவர் நேற்றும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார் என பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழில் போலி முகவர்களினால் பாதிக்கப்பட்டவர்கள் முறைப்பாடுகளை செய்து வருகின்றனர்.

இதில் வெளிநாடுகளில் வேலை வாய்ப்பினைப் பெற்றுக் தருவதாக கூறி தம்மை ஏமாற்றிவிட்டனர் என முறைப்பாடு செய்ய வருபவர்களின் எண்ணிக்கை தான் அதிகமாகவுள்ளது.

அண்மையில் தனியார் பாடசாலையில் வேலைவாய்ப்பினைப் பெற்றுத் தருவதாக கூறி பண மோசடியில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இவ்வாறு பல தரப்பட்டவர்கள் போலி முகவர்களினால் நாளாந்தம் ஏமாற்றப்பட்ட வண்ணமுள்ளனர்.

இந்நிலையில் (நேற்று) கடந்த வருடம் 8 ஆம் மாதம் தன்னை வெளிநாட்டுக்கு அனுப்புவதாக கூறி 6 இலட்சம் ரூபாய் மோசடி செய்யப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்டவர் முறைப்பாடு செய்துள்ளார்.

எனவே போலி முகவர்கள் தொடர்பில் பொது மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)


## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

*பொறுப்பவர் பூமியாள்வார்*



- எப்போதும் இனிமையோடும் புன்னகையோடும் இருப்பது ஒருவனைக் கடவுள் அருகில் கொண்டு செல்லும்.
- மனித வடிவம் கொண்ட ஒவ்வொரு உயிரினையும் வழிபடுங்கள். இறைவனை அனைத்து வடிவத்திலும் வழிபடுவதே நன்மை பெற நல்ல் வழி.
- இறைவனின் படைப்பான அனைத்து உயிர்களுக்கும் இரக்கத்துடன் பணி செய்தல் மிக நன்று.
- பூமிதேவியைப் போன்று அனைத்தையும் பொறுப்பவர் ஆக இருக்க வேண்டும். பொறுமையோடு இருந்தால் உலகமே உங்கள் காலடியில் அமரும்.
- கீழ்ப்படிதலை அறிபவனே கட்டளையிடவும் அறிவான். ஒன்றாகக் கூடி வாழ்தலே நமக்கு வேண்டிய ஒன்றாகும். சேர்ந்து வாழ்தலே சிறந்த வலிமை.
- இரகசியமாகப் பிறரைக் குறை கூறுவது பாவம். முதலில் நீ அதை முழுவதும் நீக்க வேண்டும். மன்னித்து மறந்தால் மகிழ்ச்சி நிலவும்.
- அன்பு, நேர்மை, பொறுமை ஆகியவற்றைத் தவிர வேறொன்றுமே நமக்குத் தேவையில்லை.

# சென்னையில் இடைவிடாத மழை; வெள்ளக்காடாக காட்சிதரும் நகரம்



(சென்னை)

குமரிக் கடலில் கடந்த 26 ஆம் திகதி உருவான குறைந்த காற்றமுத்த தாழ்வு மண்டலம் வடமேற்கு திசையில் அரபிக் கடல் பகுதிக்கு நகர்ந்தது. இதனால் தமிழகத்தில் மழை படிப்படியாக குறையும். குமரிக் கடல் பகுதியில் ஒரு குறைந்த காற்றமுத்த தாழ்வுப் பகுதி உருவானது. அது மேலும் வலுவடைந்து காற்றமுத்த தாழ்வு மண்டலமாக மாறியது. இதனால் தென் தமிழகத்தில் கனமழை கொட்டித் தீர்த்தது. அதன் தொடர்ச்சியாக தமிழகத்தில் பெருபாலான இடங்களிலும் கன மழை பெய்தது.

இந்நிலையில் குமரிக்கடல் பகுதியில் நிலை கொண்டு இருந்த அந்த குறைந்த காற்றமுத்த தாழ்வு மண்டலம் நேற்று முன்தினம் காலையில் வடமேற்கு திசையில் நகரத் தொடங்கியது. இதனால் மழை படிப்படியாக குறையும். அணைகள், ஏரிகள், தஞ்சை நாகை உட்பட டெல்டா மாவட்டங்களில் பல அணைகள், ஏரிகள் நிரம்பின. வெளி மாவட்ட அணைகள் நீர் புகுவதால் சில மாவட்டங்களில் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, சென்னையில் இடை விடாமல் பெய்து வரும் மழையால் நகரின் பல பகுதிகள் வெள்ளக்காடாக காட்சியளிக்கிறது. சுரங்கப்பாதைகளில் தேங்கும் தண்ணீர் இராட்சத மோட்டார்கள் மூலம் வெளியேற்றப்படுகின்றது. பிரதான வீதிகளில் மட்டும் ஓரளவு தண்ணீர் தேங்காமல் உள்ளது ஆனால், உட்புற தெருக்கள் அனைத்தும் தண்ணீரில் தத்தளிக்கிறது.

சாக்கடை ஓடைகள் பராமரிக்கப்படாததால் கழிவு நீரும் பொங்கி மழைத் தண்ணீருடன் கலந்து வீதிகள் துர்நாற்றம் வீசுகிறது. மேடவாக்கம் மெயின் ரோட்டில் உள்ள கரம், மடிப்பாக்கம், நுங்கம்பாக்கம், ஸ்டெர்லிங்ரோடு, கொளத்தூர், முகப்பேர், கோயம்பேடு, ரெம்பூர், ஜமாலியா, கெல்லீஸ், வியாசர்பாடி உட்பட பல பகுதிகளில் மழைத் தண்ணீரும் கழிவு நீரும் கலந்து முட்டளவு தேங்கி கிடக்கிறது.

மழை போல் குவிந்து கிடக்கும் குப்பையும் நடுரோட்டில் பரவி சகதி காடாக கிடக்கிறது. கழிவு நீர், குப்பை, மழைத் தண்ணீர் அனைத்தும் ஒன்றாக சேர்ந்து துர்நாற்றம் வீசுகின்றது. இதனால் தொற்றுநோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. ஏற்கனவே நகரில் எலிக் காய்ச்சல், டைபொய்டு காய்ச்சல் பரவி வருகிறது. மெயின் வீதிகளில் கூட சாக்கடை ஓடைகள் நிரம்பி பொங்கி வழிகின்றது. அதை யாரும் கண்டுகொள்ளவில்லை என்று பொது மக்கள் புகார் கூறுகின்றார்கள்.

மழையின் காரணமாக ஏற்பட்ட விபத்துக்களில் 8 பேர் பலியானார்கள். பாதிக்கபட்டவர்களின் குடும்பங்களுக்கு ரூ 2 இலட்சம் நிவாரண நிதி வழங்குமாறு தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா உத்தரவு பிறப்பித்துள்ளார்.

கடந்த சில தினங்களாக பெய்துவரும் தொடர் மழையால் திருச்சி உட்பட தமிழகத்தின் 6 மாவட்டங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டன. கடுமையான மழையின் காரணமாக நீர் தேங்கியதில் வீடுகள் இடிந்து திருவண்ணாமலை, திருச்சி மாவட்டங்களில் 3 பேர் உயிரிழந்தனர். மேலும் கடலூர், விழுப்புரம், நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் மின்கம்பி மழை நீரில் அறுந்து விழுந்ததில் 4 பேர் பலியானார்கள். காஞ்சிபுரத்தில் சுபாஷ் என்ற மாணவன் நீர் நிறைந்த பள்ளத்தில் விழுந்து பலியானார்.

இதனையடுத்து பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு முதல்வர் ஜெயலலிதா வருத்தம் தெரிவித்ததோடு நிவாரண நிதி வழங்கப்படும் என்று உறுதியளித்ததோடு உத்தரவும் பிறப்பித்தார். (அ-2)

## தொலைத்தொடர்பு அமைச்சரை பிணையில் விடுக்க உத்தரவு

இலஞ்சம் வாங்கியதாக 5 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட முன்னாள் தொலைத்தொடர்பு அமைச்சர் சுக்ராமை பிணையில் விடுவிக்க டில்லி உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மருத்துவ காரணங்களுக்காக அவருக்கு ரூபா 10 இலட்சத்துக்கான உத்தரவாத்தின் பேரில் பிணை வழங்க உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது. அவருக்கு வழங்கப்பட்டுள்ள தண்டனைக்கு இடைக்காலத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

தொலைத்தொடர்புத்துறை அமைச்சராக இருந்தபோது 1996 ஆம் ஆண்டு தனியார் நிறுவனம் ஒன்றிடம் இருந்து ரூபா 3 இலட்சம் இலஞ்சம் பெற்றதாக இவருக்கு 5 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து விசாரணை நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இதையடுத்து உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்டுள்ளதால் தனக்கு நிவாரணம் அளிக்க வேண்டும் என்று கோரி உயர் நீதிமன்றத்தில் அவர் மனுத்தாக்கல் செய்தார். (அ-2)

## பாரதச் செய்திகள்

## இளைஞர் காங்கிரஸ் நிர்வாகிகளின் மாநாடு

(புதுடில்லி)




இளைஞர் காங்கிரஸ் நிர்வாகிகள் 8 ஆயிரம் பேர் கலந்து கொள்ளும் 2 நாட்கள் கொண்ட மாநாடு டில்லியில் நேற்று ஆரம்பமாகியுள்ளது. இதில் சோனியாகாந்தி, பிரதமர் மன்மோகன் சிங், ராகுல் காந்தி உள்ளிட்டோர் உரையாற்றுகின்றனர்.

இளைஞர் காங்கிரஸ் பொறுப்பாளராக காங்கிரஸ் பொதுச் செயலாளர் ராகுல் காந்தி இருக்கிறார். இளைஞர் காங்கிரஸ் அமைப்புக்கு இதுவரை மாநாடு எதுவும் நடத்தப்பட்டதில்லை. இந்த நிலையில் இளைஞர் காங்கிரஸ் நிர்வாகிகளுக்கு தனி மாநாடு நடத்தப்படுகிறது.

டில்லியில் உள்ள ஜப்பானிய பூங்காவில் 2 நாட்களுக்கு மாநாடு நடைபெறும் .இதில் நாடு முழுவதும் உள்ள 8 ஆயிரம் பிரதிநிதிகள் கலந்து கொள்கின்றனர். மாநாட்டு அரங்கிலேயே தங்கும் இடம், உணவு வசதி செய்யப்பட்டுள்ளது. தொடக்க நிகழிச்சியில் ராகுல்காந்தி பேசுகிறார். நிறைவு நாள் நிகழ்ச்சியில் காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தி, பிரதமர் மன்மோகன் சிங் ஆகியோர் பேசுகின்றனர்.

மாநாட்டில் மூத்த மத்திய அமைச்சர்கள் பிரணாப் முகர்ஜி, ஏ.கே.அந்தோனி, முகுல் வாஸ்னிக், ஜெய்ராம் ரமேஷ் ஆகியோரும் உரைநிகழ்த்துவர். இன்றைய சூழ்நிலையில் காங்கிரசின் நிலை என்ன? என்பது பற்றி தலைவர்கள் விளக்கஉள்ளனர். இந்த மாநாட்டின் போது நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த இளைஞர் காங்கிரஸ் நிர்வாகிகள் ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்ள வாய்ப்பு கிடைக்கும் என்று காங்கிரஸ் மூத்த தலைவர் ஒருவர் கூறினார்.(அ-2)

## இந்தியா-நேபாள நாடுகளிடையே இரட்டைவரி தவிர்ப்பு ஒப்பந்தம்



(காத்மண்டு)

இந்தியா- நேபாளம் நாடுகளுக்கு இடையே இரட்டைவரி விதிப்பு தவிர்ப்பு ஒப்பந்தம் நேற்று முன்தினம் கையெழுத்தானது. இதன் மூலம் வரி ஏய்ப்பாளர்களை இரு நாடுகளும் எளிதாகக் கண்டறிய முடியும்.

நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி நேபாளத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். இதையொட்டி இந்தியா- நேபாளம் நாடுகளுக்கு இடையே திருத்தி அமைக்கப்பட்ட இரட்டைவரி விதிப்பு தவிர்ப்பு ஒப்பந்தம் கையெழுத்தானது.

இதுகுறித்து நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி கூறியதாவது, சர்வதேச நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிமுறைகளுக்கு ஏற்ப இந்த ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. இந்த ஒப்பந்தத்தின் மூலம் இரு நாடுகளிலும் உள்ள வங்கிகளின் பரிவர்த்தனைகள், வங்கிக் கணக்குகள், வரிவிதிப்பு முறைகள் ஆகியவை பற்றிய தகவல்களை பரஸ்பரம் பரிமாறிக் கொள்ள முடியும்.

அரசுரீதியான தகவல் பரிமாற்றங்கள் தவிர இரு நாடுகளைச் சேர்ந்த புலனாய்வு அமைப்புகளும் வங்கி நடவடிக்கைகள் தொடர்பான தகவல்களை பகிர்ந்து கொள்ளவும் இந்த ஒப்பந்தம் வழிவகுக்கும். இதனால் வரி ஏய்ப்புகள் இருந்தால் கண்டறிய வழிகாண முடியும். இரு நாடுகளுக்கு இடையேயான பொருளாதார ஒத்துழைப்பு முதலீடு ஆகியவையும் எதிர் வரும் காலத்தில் அதிகரிப்பதற்கு வாய்ப்பு உள்ளது.

ஏற்கனவே 117 பொருட்களுக்கான கூடுதல் சுங்க வரியை நேபாள அரசின் வேண்டுகோளுக்கு ஏற்ப இந்தியா இரத்து செய்துள்ளது. தற்போது மேலும் 217 பொருட்களுக்கு விதிக்கப்படும் கூடுதல் சுங்க வரியை இரத்து செய்ய வேண்டும் என நேபாள அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

அடுத்த மாதம் இரு நாடுகளைச் சேர்ந்த வர்த்தக செயலாளர்களின் கூட்டம் நடக்கவுள்ளது. அப்போது நேபாளத்தின் கோரிக்கை குறித்து பரிசீலித்து முடிவு எடுக்கப்படும். இவ்வாறு பிரணாப் முகர்ஜி கூறினார். இந்த பேட்டியின் போது நேபாள நிதி அமைச்சர் பர்சான் பன் உடன் இருந்தார். (அ-2)



பெரியாறு அணை அருகே புதிய அணை கட்டுவதற்கு தமிழக அரசு ஒத்துழைக்காததை கண்டித்து முதல்வர் ஜெயலலிதா உருவப் பொம்மையை வண்டிப் பெரியாறு தேசிய நெடுஞ்சாலையில் கேரள மக்கள் எரித்ததைப் படத்தில் காணலாம்.

# இந்தியா-மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் முதல் ஒருநாள் போட்டியில் இன்று மோதல்

(கட்டாக்)

இந்தியா-மேற்கிந்திய தீவுகள் அணிகளுக் கிடையிலான முதல் ஒருநாள் போட்டி இன்று நடக்கிறது. டெஸ்ட் தொடரை சுலபமாக கைப் பற்றிய இந்திய அணியின் ஆதிக்கம் தொடரு மென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்திய தீவுகள் அணி மூன்று டெஸ்ட், ஐந்து ஒருநாள் போட்டிகளில் பங்கேற்கிறது. இதில் இந்தியா 2:0 என டெஸ்ட் தொடரைக் கைப்பற்றியது. இன்று முதலாவது ஒருநாள் போட்டி கட்டாக்கில் உள்ள பாரபதி மைதானத் தில் நடக்கிறது.

**சம்பியன் அணி**

ஒருநாள் போட்டிகளில் உலகச் சம்பியன் இந்தியா அசைக்க முடியாத அணியாகத் திகழ்கிறது. கடந்த மாதம் நடந்த இங்கிலாந் துக்கு எதிரான ஒருநாள் தொடரை 5:0 என முழுமையாக வென்றது. இதேபோன்று இம் முறையும் உள்ளூரில் சாதிக்கக் காத்திருக் கிறது.

**நடுத்தர வரிசை பலம்**

தோனிக்கு ஓய்வு கொடுக்கப்பட்ட நிலை யில் அணித்தலைவர் பொறுப்பை சேவாக் ஏற்கிறார். இவர் காம்பீருடன் இணைந்து அணிக்கு அதிரடி ஆரம்பம் தரலாம். சச்சின், யுவராஜ் இல்லாத போதும் விராத் ஹோலி, ரெய்னா, ரோகித் சர்மா உள்ளிட்டோர் சிறப்பான நிலையில் உள்ளனர். இதனால் அணியின் நடுத்தரவரிசை பலமாகவே உள்ளது. மனோச் திவாரியும் களத்தில் உள்ளார். விக்கெட் காப் பாளர் பணியை பார்த்திப் பட்டேல் மேற்கொள்ள வுள்ளார்.

**அசத்தல் அஸ்வின்**

சமீபத்தில் மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான 3 டெஸ்டில் அசத்திய அஸ்வின், ஓஜா மொத்தம் 42 விக்கெட் வீழ்த்தினர். இன்று அஸ்வின் ராகுல் சர்மாவுடன் இணைந்து சுழலில் கலக்குவார். வினாய்குமாருடன் இணைந்த இளம் வீரர்கள் வருண் ஆரோன், உமேஷ் யாதவ் வேகத்தில் மிரட்டினால் அணியை வெற்றிப்பாதைக்கு அழைத்துச் செல்லாம்.

**வருகிறார் போலார்ட்**

மேற்கிந்திய தீவுகள் அணியைப் பொறுத்த வரை காயத்திலிருந்து மீண்டு வந்துள்ள



சிம்மன்ஸ், அட்ரியன் பரத் நல்ல ஆரம்பம் கொடுக்கலாம்.

டேரன் பிராவோவின் அதிரடியும் சாமு வேல்ஸின் அனுபவமும் அணிக்குப் பலமாக உள்ளது. இவர்களுடன் அதிரடி போலார்ட், ரசல், அணித்தலைவர் சமி உள்ளிட்டோர் அசத்தினால் இந்தியாவுக்கு சவால் கொடுக் கலாம்.

பந்து வீச்சில் ராம்பால், கீமர் ரோச் நெருக் கடி தரலாம். சுழலில் சாதிக்க சுனில் நரைன், அந்தோனி மாட்டின் காத்திருக்கின்றனர். முதல் வெற்றிபெற மேற்கிந்திய தீவுகள் அணியும் வெற்றியுடன் தொடரை ஆரம்பிக்க இந்தியஅணியும் முயற்சிக்கும் என்பதால் இன்றைய போட்டி பரபரப்பு நிறைந்ததாக இருக்கும்.

## அஸ்வினுக்கு விருது

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் சிறப்பாக விளையாடி, இந்திய அணி 2:0 கணக்கில் வெற்றி பெற உதவிய தமிழக வீரர் அஸ்வினுக்கு திலீப் சர்வதேச விருது வழங்கப்பட உள்ளது.

அறிமுகமான முதல் டெஸ்ட் போட்டியிலேயே 9 விக்கெட்டுகள் வீழ்த்தியதன் மூலம் சாதனை பட்டியலில் இடம் பிடித்தார்.

22 விக்கெட்டுக்கள் மற்றும் ஒரு சதம் என கலக்கிய அஸ்வினுக்கு தீலிப் சர் வதேச விருது வழங்கப்பட உள்ளது.

டிசம்பர் 10ம் திகதி நடைபெற உள்ள விழா வில், இந்திய ரூ. 5இலட்சம் ரொக்கம் மற்றும் கேடயம் கொண்ட இவ்விருது அஸ்வினுக்கு வ்ழங்கப்படுகிறது.

திருமணமான மறுநாளில், போட்டியில் பங்கேற்றதன் மூலம் கிரிக்கெட்டின் கடவுளாக வர்ணிக்கப்படும் டொன் பிராட்மேன் வரிசை யில் அஸ்வினும் உள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது.

## போர்முலா 1 கார் பந்தயத்தில் வெட்டல் புதிய சாதனை

போர்முலா 1 கார் பந்தயத்தில் 15 வெற்றி க்ளைப் பெற்று புதிய சாதனை படைத்துள் ளார். ரெட்புல் கார் டிரைவரான ஜேர்மனியின் செபாஸ்டியன் வெட்டல்.

முன்னாள் உலகச் சம்பியனான இங்கிலாந் தின் நிகெல் மான்செல் 1992ம் ஆண்டில் 16 சுற்றுக்களைக் கொண்ட கார் பந்தயத்தில் 14 சுற்றில் வெற்றி கண்டதே கடந்த 19 ஆண்டு களாக சாதனையாக இருந்தது. இப்போது அதை வெட்டல் முறியடித்துள்ளார். ஏற்கெனவே இந்த சீசனில் வெட்டல் சம்பியன் பட்டத்தை வென்று விட்டார்.

இந்த சீசன் எஃப் 1 போட்டிக்கான கடைசி சுற்று (19 வது சுற்று) பிரேசிலில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

பிரேசில் கிராண்டப்ரீ என்ற பெயரில் நடை பெற்ற இந்த சுற்றில் முதலிடம் பிடித்ததன் மூலம் 15வது வெற்றியைப் பதிவு செய்து சாதனை படைத்தார் வெட்டல்.4.3 கிலோ மீற்றர் பந்தய தூரத்தை 1 நிமிடம் 11.918 விநாடிகளில் கடந்தார்.

ரெட்புல் அணியின் மற்றொரு டிரைவர் மார்க் வெப்பர் (1:12:099 நிமிடம்) 2வது இடத்தையும், மெக்லாரன் டிரைவர் ஜென்சன் பட்டன் (1:12:283) 3வது இடத்தையும், மெக் லாரனின் மற்றொரு டிரைவர் லீவிஸ் ஹமில்டன் (1:12:480) 4வது இடத்தையும், இரண்டு முறை உலகச் சம்பியனான ஃபெராரி பெர் னாண்டோ அலோன்ஸ் 5 வது இடத்தையும் பிடித்தனர்.

இந்த சீசன் எஃப்1 போட்டியில் பல்வேறு நாடுகளில் நடைபெற்ற 19 சுற்றுகளில் ஸ்பெ யின், இங்கிலாந்து, ஜேர்மனி, தென்கொரியா போட்டிகளில் மட்டுமே முதலிடத்தை தவற விட்டார் வெட்டல். ஜேர்மனி போட்டியில் மட்டும் 3வது இடத்தை பிடித்தார். இது அவரின் மிகப்



பெரிய பின்னடைவாகும். அபுதாபியில் நடை பெற்ற போட்டியில் டயரில் ஏற்பட்ட கோளாறு காரணமாக முதல் சுற்றிலேயே விலகினார். அந்த சுற்றில் லீவிஸ் ஹமில்டன் முதலிடம் பிடித்ததார்.

19 சுற்றுகளின் முடிபில் மெக்லாரன் டிரை வர் ஜென்சன் பட்டன் இரண்டாவது இடத்தைப் பிடித்தார். அவரைவிட 10 புள்ளிகள் குறைவாகப் பெற்ற ஃபெராரி டிரைவர் அலோன்ஸ் 3வது இடத்தையும், 18 புள்ளிகள் குறைவாகப் பெற்ற ரெட்புல் அணியின் மற்றொரு டிரைவர் மார்க் வெப்பர் 4வது இடத்தையும் பிடித்தனர். அணி பிரிவில் ரெட்புல் அணி சம்பியன் பட்டத் தை தட்டிச்சென்றது. மெக்லாரன் இரண்டாவது இடத்தையும், ஃபெராரி 3வது இடத்தையும் பிடித்தன.

## ரோஜர் பெடரரின் புதிய சாதனை



(லண்டன்)

லண்டனில் நடைபெற்ற தொழிற்சார் டென் னிஸ் வீரர்கள் சங்கத்தின் (ஏ.டி.பி) சுற்றுப் போட்டியில் சுவிட்ஸர்லாந்து டென்னிஸ் வீரர் ரோஜர் பெடரர் சம்பியனார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இறுதிப்போட்டியில் பிரெஞ்சு வீரர் ஜோ வில்பரட் சோங்காவை 6:3, 6:7, 6:3 என்ற கணக்கில் பெரடர் தோற்கடித்தார்.

இதன் மூலம் டென்னிஸ் உலகின் மற்றொரு சாதனையையும் தனதாக்கிக் கொண்டார் பெடரர். வருடத்தின் இறுதியில் நடைபெறும் ஏ.டி.பி சுற்றுப்போட்டியொன்றில் அதிக தடவை சம்பியனாகிய வீரர் எனும் சாதனையை இது வாகும்.

6 ஆவது தடவையாக வருடத்தின் இறுதி ஏ.பி.டி போட்டியில் பெடரர் சம்பியனாகியுள்ளார்.

இதுவரை ரோஜர் பெடரர், பீட் சாம்ப்ராஸ், ஜவன் லெண்ட்டில் ஆகியோர் சமநிலையில் இருந்தனர்.

30 வயதான பெடரர் தனது டென்னிஸ் வாழ்க்கையில் விளையாடிய தனது 100 ஆவது இறுதிப்போட்டி இதுவாகும். இவற்றில் 70 போட்டிகளில் அவர் வெற்றி பெற்றுள்ளார்.

ஏற்கனவே அதிக கிராண்ட்ஸ்லாம் சுற்றுப் போட்டிகளில் (16) சம்பியனாகிய வீரர் எனும் சாதனையை உட்பட பல சாதனைகளை ரோஜர் பெடரர் தன்னகத்தே கொண்டுள்ளமை குறிப் பிடத்தக்கது.

உலகின் முன்னாள் முதல் நிலை வீரரான ரோஜர் பெடரர் அண்மைக்காலத்தில் தரவரி சையில் பின்தங்கியிருந்தார் இந்நிலையில் இப்போது அவர் 3 ஆம் இடத்திற்கு முன்னேறி யுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 16 சிக்ஸர்கள் விளாசி ஜெஸி ரைடர் சாதனை!

முதல் தர கிரிக்கெட் இன்னிங்ஸ் ஒன்றில் அதிக சிக்ஸர்கள் அடித்த வீரர் என்ற சாதனை யை நியூஸிலாந்து அணி வீரர் ஜெஸிரைடர் சமன் செய்துள்ளார்.

அவுஸ்திரேலியா சுற்றுப் பயணம் மேற் கொண்டுள்ள நியூஸிலாந்து அணி அவுஸ்தி ரேலிய ஏ அணியுடன் நான்கு நாள் பயிற்சிப் போட்டியில் மோதியது.

பிரிஸ்பானில் நேற்று முன்தினம் முடிவடைந்த இந்த போட்டியில் நியூஸிலாந்து அணி தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆடியது.

இதில் மத்திய வரிசையில் வந்த ஜெஸி ரைடர் அதிரடியாக ஆடி 137 பந்துகளுக்கு 175 ஓட்டங்களை பெற்றார். இதில் அவர் 11 நான்கு ஓட்டங்களும் 16 சிக்ஸ்சர்கள் விளாசினார். இதன் மூலம் முதல்தர கிரிக்கெட்டில் இன்னிங்ஸ் ஒன்றில் அதிக சிக்சர்கள் அடித்த கிராம் நெப் பியர் மற்றும் அன்ட்ரூ சைமண்டஸின் உலக சாதனையை ரைடர் சமன் செய்தார்.

கடைசி நாள் ஆட்ட நேர முடிபில் நியூஸி லாந்து அணி 108 ஓவர்களில் 6 விக்கெட் டுக்களை இழந்து 467 ஓட்டங்களை பெற்றது. இதன் மூலம் இந்த பயிற்சி போட்டி சமநிலை யில் முடிந்தது.

அடுத்து அவுஸ்திரேலிய- நியூஸிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டு போட்டி களைக் கொண்ட டெஸ்ட் தொடர் டிசம்பர் 1ஆம் திகதி பிரிஸ்பானில் ஆரம்பமாக உள்ளது.

**TILKO JAFFNA CITY HOTEL**
70/6, K.K.S ROAD, JAFFNA. T.P:0212225969
Web:cityhoteljaffna.com
e-mail:info@hoteljaffna.com

உங்கள் வியாபார நடவடிக்கைகள் மற்றும் பொழுது போக்கு அம்சங்களுக்கு யாழ். நகரின் மத்தியில் ஒளி, ஒலி அமைப்பு மற்றும் நவீன வசதிகளுடன் கூடிய மாநாட்டு மண்டபம், சிறிய /நடுத்தர /பிரமாண்டமான குளிரூட்டப்பட்ட, குளிரூட்டப்படாத சகல வசதிகளுடன் கூடிய மண்டபங்கள், திருமண, பிறந்த நாள் கொண்டாட்டங்கள், வியாபார நிறுவன ஒன்றுகூடல்களுக்கும் ஏதுவான பாரிய மண்டப வசதி அத்துடன் மதிய, இரவு பொதி செய்யப்பட்ட உணவு வகைகள், காலை, மாலை சிற்றுண்டிகள்...

இந்தியா, சீனா மற்றும் யாழ். பாரம்பரிய உணவு வகைகளும் ஒரே இடத்தில்...

Tilko Jaffna City Hotel for Business & Relaxation in the heart of Jaffna City
Conference Hall Facilities including Multimedia & PA System
Large Banquet Hall For Wedding Receptions, Work Shops, Conventions & Seminars
Non Ac Mini Conference Hall
Special take away Lunch/Dinner Pack
Morning/ Evening Snacks
Special Package Rate for
Family Get-to-Gathers, Birthday/ Anniversary Functions, Company Get to Gathers

Await Opening
Special Barbaque at our Garden Cafeteria
Inclusive of Chines/Indian Jaffna Authentic
Variety Cuisine s From our open hot ranga Kitchen

மிகவிரைவில் TILKO HOTEL இல் Barbeque வசதியுடனான பூந்தோட்ட உணவகம் திறக்கப்பட வுள்ளது.



உங்கள் வியாபார நடவடிக்கைகள்
மற்றும் பொழுதுபோக்கு அம்சங்களுக்கு
யாழ் நகரில்...

T.P.:077 6943479
K.Gunaseelan
Marketing Executive

# காணாமல்போனோர் தொடர்பில் விசாரணையில்லை; ஆயிரக்கணக்கான குடும்பங்கள் பரிதவிப்பு

## சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவிப்பு

காணாமல் போன சம்பவங்கள் அதிகளவில் தீர்க்கப்படாத நாடுகளின் வரிசையில் இலங்கை இரண்டாம் நிலை வகிப்பதாக சர்வதேச மன்னிப்புச் சபை குறிப்பிட்டுள்ளது.

ஆயிரக்கணக்கான காணாமல் போன சம்பவங்கள் தொடர்பான விசாரணைகள் இன்னமும் பூர்த்தியாகாமையால் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் தொடர்ந்தும் பாதிப்புக்களை எதிர்நோக்கி வருவதாக சர்வதேச மன்னிப்புச் சபையின் இலங்கைக்கான நிபுணர் யோலண்டா பொஸ்டர் தெரிவித்துள்ளார்.

சித்திரவதை சம்பவங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் தொடர்பில் லண்டனில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகிக்கப்படும் தமிழர்கள் தொடர்ந்தும் அச்சுறுத்தல்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குற்றச் செயல்களுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும் என்ற சர்வதேச நியதிக்கு மதிப்பளிக்க வேண்டுமாயின் சுயாதீன விசாரணைகள் நடத்தப்பட வேண்டும்.

இலங்கை விவகாரங்களை ஏனைய நாடுகள் பிழையான முன்னுதாரணமாக கொள்ளாமல் இருப்பதற்காகவும் விசாரணை நடத்தப்பட வேண்டியது அவசிமானது.

தமிழீழ விடுதலைப் புலிகள் உள்ளிட்ட சகல தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்ட குற்றச் செயல்கள் விசாரணை செய்யப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். (பா)

# அதிவேக நெடுஞ்சாலையில் விதிமுறைகளை மீறினேன்

## போக்குவரத்து அமைச்சர் ஒப்புதல்

(காலி)

தெற்கு அதிவேக பெருந்தெரு அங்குரார்ப்பணம் செய்ததன் பின்னர் மணித்தியாலத்திற்கு 180 கிலோ மீற்றர்என்ற வேகத்தில் வாகனத்தை செலுத்தியதாக போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

நெடுஞ்சாலை திறப்பு விழாவின் பின்னர் கொழும்பு திரும்பிய போது தாம்இவ்வாறு 180 கிலோ மீற்றர் வேகத்தில் பயணம் செய்து போக்குவரத்து விதிகளை மீறிச் செயற்பட்டதாக அவர் ஒப்புக்கொண்டுள்ளார்

எனினும், அதிவேக பெருந்தெருவின் அதிக பட்ச வேகம் 100கிலோ மீற்றர் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வாகனங்கள் மணித்தியாலத்திற்கு 100 கிலோ மீற்றர் என்ற அதிக பட்ச வேகத்தில் பயணம் செய்ய முடியும் என வீதியின் பராமரிப்பு முகாமையாளர் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பிட்ட வேகத்தை விடவும் அதிக வேகத்தில் பயணம் செய்வோருக்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அதிக வேகத்தில் பயணம் செய்வோரை கைது செய்வதற்காக பொலிஸார் விசேட ரக மோட்டார் கார்களை இறக்குமதி செய்துள்ளதுடன் விசேட பொலிஸ் பிரிவு ஒன்றையும் கடமையில் ஈடுபடுத்தியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (பா)

# ஆணைக்குழு அறிக்கை...

ஜப்பானின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட தெற்கு அதிவேக நெடுஞ்சாலையை திறந்து வைக்கும் நிகழ்வில் சிறப்பு அதிதியாக வருகைதந்த ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷி நேற்றுக் காலை அலரிமாளிகையில் ஜனாதிபதியை சந்தித்தார்.

இவ் சந்திப்பின் போது கற்றுக்கொண்ட பாடங்கள் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையின் உள்ளடக்கத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, யசூசி அகாஷியிடம் தெளிவுபடுத்தினர்.

இந்த அறிக்கை பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு ஆணைக்குழுவின் பரிந்துரைகள் கவனத்தில் எடுக்கப்படுமென ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.

அத்துடன் தெற்கு அதிவேக நெடுஞ்சாலை நாட்டின் அபிவிருத்திக்கு முன்னேற்றப் பாதையை அமைக்குமென ஜனாதிபதி அகாஷியிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டிலுள்ள இனப்பிரச்சினைக்கு சகல மக்களும் சம அந்தஸ்துடன் வாழும் வகையில் அதிகாரப்பகிர்வை முன்வைக்குமாறு ஜப்பான் வலியுறுத்துவதாக ஜனாதிபதியிடம் அகாஷி கூறியுள்ளார்.

அத்துடன் சர்வதேச நாடுகளினால் மேற்கொள்ளப்படும் அழுத்தங்களைத் தவிர்க்கும் வகையில் உள்நாட்டில் பொறுப்புக் கூறும் பொறிமுறை ஒன்றை ஏற்படுத்துமாறு யசூசி அகாஷி தெரிவித்துள்ளார். (பா)

# சட்டவிரோத முறையில்...

கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில் நேற்றும் தொடர்ந்த தேடுதல் வேட்டையில்மேலும் 31 பாவனையாளர்கள் சட்டவிரோதமான முறையில் மின் மானிகளை மாற்றி யமைத்து மின்சார இணைப்பை பயன்படுத்தினர் என்ற குற்றச்சாட்டில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்கள் நேற்றிரவு 7.30 மணியளவில் பொலிஸாரால் யாழ்.நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். இக்குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட யாழ்.நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா, குற்றம்சாட்டப் பட்டவர் களுக்கு உச்சத்தொகை ரூபாய் 7 இலட்சம் முதல் அபராதம் விதித்து தீர்ப்பளித்தார்.

இதேவேளை யாழ்.மாவட்டத்தின் அனைத்து இடங்களிலும் தேடுதல் நடத்தி சட்டவிரோதமான முறையில் மின்னிணைப்பை பயன்படுத்துபவர்களை சட்டத்தின் முன்நிறுத்துமாறு மின்சக்தி அமைச்சு இலங்கை மின்சார சபைக்கு பரிந்துரைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (பா-6)

# முதல் விப...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் தெற்கு அதிவேக நெடுஞ்சாலை நேற்று முன்தினம் உத்தியோக பூர்வ மாக தி திறந்து வைக்கப்பட்டபின்னர் நடைபெற்ற முதலாவது விபத்து இது வென்பது குறிப்பிடத்தக்கது.

# நல்லிணக்க ஆணைக்...

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அது குறித்து விரிவாக விவாதிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை ஜனாதிபதியினால் ஆராயப்பட்டு வருவதாகவும் சில தினங்களில் அந்த அறிக்கையை ஜனாதிபதி பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கவுள்ளார் எனவும் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் அண்மையில் கொழும்பில் இடம் பெற்ற கருத்தரங்கு ஒன்றில் கூறியிருந்தார். (பா)

# யாழ்.பல்கலை மாண...

எனினும் நேற்று அதிகாலை வரை குறித்த மாணவன், கைதடியிலுள்ள சித்த மருத்துவ விடு திக்கு திரும்பாததை அடுத்து சக மாணவர்கள் தொலைபேசி மூலமாக அவரைத் தொடர்பு கொண்டுள்ளனர்.

எனினும் தொலைபேசி அழைப்புக்கு பதிலளிக்கப்பட்ட போதும் பிரஸ்தாப் மாணவன் உரையாடவில்லை. மாறாக சிங்கள மொழி மூலமான உரையாடல்கள் கேட்பதாக சக மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

மாவீரர் தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் இரவு யாழ்.பல்கலைக்கழக பாலசிங்கம் விடுதி உள்ளிட்ட பகுதிகளில் படையினரும் பொலிஸாரும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தனர் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை காணாமல் போன மாணவன் சில வருடங்களுக்கு முன்னர் படையினரால் கைது செய்யப்பட்டு பூசா முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார் எனவும் அண்மையிலேயே விடுதலை செய்யப்பட்டார் எனவும் தெரிவிக்கப்பட்டது. (பா-06,11)

**மரண அறிவித்தல்**

**பூதப்பிள்ளை காசிநாதர்** (காசி அண்ணை)

(Director - K.S.N. Engineering (Pvt) Ltd, முன்னாள் ESP & Co கொள்வனவு முகாமையாளர்)



கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் 22, பிறவுண் வீதி, கலட்டிச் சந்தி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பூதப்பிள்ளை காசிநாதர் நேற்று (28.11.2011) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.'

அன்னார் காலஞ்சென்றவர்களான பூதப்பிள்ளை-கதிராசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், செல்வலட்சுமி, சிவபாக்கியம், காலஞ்சென்ற தங்கம்மா, கனகநாயகம் (இராசா), மற்றும் செல்வநாயகம், வைரவநாதன் (லண்டன்), வைத்தியநாதன், சண்முகநாதன், பரமேஸ்வரி (இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், தவமணிதேவியின் பாசமிகு கணவரும் கஜன் (Jaffna Suntel Project), மயூரன் (லண்டன்), லோகாசினி (ருமேனியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்: கா.கஜன் (மகன்)

22, பிறவுண் வீதி, கலட்டி சந்தி,
யாழ்ப்பாணம்.

(6870)

**சுப்பபெற்றோல் விநியோகம்**

எதிர்வரும் 01.12.2011இல் இருந்து சுன்னாகத்தில் சுப்ப பெற்றோல் விநியோகிக்கப் படும் என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

நிர்வாகத்தினர்
K.K. பிள்ளை எரிபொருள் நிரப்பு நிலையம்,
207, K.K.S றோட்,
சுன்னாகம்.

(6868)

# தேசிய எதிர்ப்புப் போராட்ட...

எதிர்ப்புத் தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுப்பதற்கு ஐக்கிய தேசியக்கட்சி தீர்மானித்திருந்தது.

எனினும், இந்த ஆர்ப்பாட்டத்தில் எமது ஜனநாயக மக்கள் முன்னணியும் கலந்து கொள்ள வேண்டுமாயின் .இந்தத் தேசிய எதிர்ப்புப் போராட்டத்தில், நீண்டகாலமாக இழுத்தடிக்கப்பட்டு வரும் தமிழ்மக்களின் பிரச்சினை மற்றும் நீண்டகாலமாக தடுத்து வைக்கப் பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பிலான கோரிக்கைகளும் உட்படுத்தப்பட வேண்டும் என்று நாம் முன்வைத்த நிபந்தனையை ஐக்கிய தேசியக் கட்சி ஏற்றுக்கொண்டதையடுத்து இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் நாம் கலந்து கொள்ள தீர்மானித்தோம்.

எனினும் இது தொடர்பில் எமது கூட்டணி கட்சியான நவசமாஜக் கட்சியுடன் கலந்தாலோசிக்கப்படும் என மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்வது குறித்து நவசமாஜக் கட்சியின் தலைவர் விக்கிரம பாகு கருணரட்ணவிடம் கொழும்பு ஊடகம் ஒன்று கேட்டபோது,

தமது இரு கோரிக்கைகளும் ஐக்கியதேசியக்கட்சியால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதால் தமது கட்சியும் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கு பெறுவதற்கு தயாராக இருப்பதாக அவர் கூறியுள்ளார்.

அதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்குபெறுவது தொடர்பில் இன்னும் முழுமையாக முடிவு செய்யப்படவில்லை என ஐக்கிய சோசலிச கட்சித்தலைவர் சிறிதுங்க ஜெயசூரிய தெரிவித்தார். (பா)

# ஆறு...

விசாரணை செய்வதற்காக ஒரு அதிகாரிகள் குழுவை தமது அமைச்சு அங்கு அனுப்பியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை மாவீரர்தினத்தில் தமிழ் கைதிகள் திட்டமிட்ட தாக்கப் பட்டனர் என ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளமையை அவர் மறுத்துள்ளார். (பா)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.11.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.